ஸ்ரீ பகுநாத சாமி,

சேந்தமங்கலம், சேலம்,

"வைத்திய அட்டவணை. கட்டு-1."

தேதி:- 14.6.63.
ஓலைச்சுவடியின் பெயர்:- வைத்திய அட்டவணை-1.
உரிமையாளரின் பெயர்:- ரகுநாத சாமி.
இடம்:- சேந்தமங்கலம், சேலம்.

303

***

வைத்திய அட்டவணை-1.

* 45-ஓலைகள் வரையில் சிதைந்து இருப்பதால் மருந்து செய்முறைகள் சரக்குகள் இடையிடை விடுப்பட்டுள்ளன.

கிருமிக்கு:-

சாதிக்காய், இந்துப்பு, சாதிலிங்கம், கிரும்பு, நாவி, சுக்கு, ஊமத்தை விரை, திப்பிலி இவை சமன் கட்டி கரியாந்தகரைச் சாற்றிலரைத்து எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்து குன்று மணிப் பிரமாணம் உருண்டை பண்ணிக் கொண்டு இதக்கு அநுபானம் சுக்கு, மிளகு, பொடி செய்து பசுவின் நெய்யில் ஒரு குளிகை இடவும். கிருமி வியாதிகள் உண்டானதும் வயிற்று நோக்காடு முதலானதுந் தீரும். இதக்குப் பத்தியம் வாழைக் கச்சல் அத்திப் பிஞ்சு, காரைலக்கிரி, பொன்னாங்கண்ணி, சிறுகீரை, துவரைப்பருப்பு தண்ணீர் ஆகும். சோற்றில் தயிர் வார்த்துக் கொண்டு உண்ணவும். ரசம் கெந்தகம் அப்பிரக செந்தூரம், வெண்காரம், அபினி இவை சமன் கட்டி நீர் முள்ளி பிலைச் சாற்றில் அரைத்துக் குன்றுமணி பிரமாணம் உருண்டை பண்ணிக் கொள்ளவும். மூன்று நேர முந் தின்னவும். முந்தின கிருமி வயத்து நோக்காடுந், தீரும். விடத் தேரிலையும், புழுங்கலரிசியும் இடிச்சு உருட்டி சுட்டு எண்ணெயில் தலைச்சு தின்னவும். பத்தியம் முன் சொன்னபடி. மாதங் காய்க்குள்ளே ஓமம் வைத்து சீலை மண் செய்து புடம் போட்டு எடுத்துக் கொள்ளவும். சற்று வங்கிப் பொடி கட்டி எருமைத் தயிர் மூன்று நாள் கொடுக்கத் தீரும். கிரும்பு சாதிக்காய், சுக்கு, திப்பிலி, மிளகு இவை பொடி செய்து வங்க பற்பத்துடன் கொடுக்கக் கிருமி தீரும். செந்நாயுருவி இலையும் வேலிப் பருத்தி இலையும் இவை இரண்டுந் தலைச்சு சாம நாழி நல்லெண்ணெய் நாளி இவை இரண்டுங் காய்ச்சி வடித்து உள்ளுக்கு கொள்ளவும். எச்சை வாயில் தடவும் ரத்தக் கிருமி தீரும். மாதளம் பிஞ்சு கொண்டு வந்து இதில் மாந்துளிரும் நெல்லித் துளிரும் சிரியங் கொழுந்தும் கஞ்சாக் கொழுந்தும், மிளகு இவை மாதளங்காயிலே நிரைத்துச் சாணியில் புதைத்து புடம் போட்டு எடுத்து கொள்ளவும். கடுக்காய், சாம்பலும் ஓமம் காசுக் கட்டி விளாம்பிசின் இவை கட்டி அரைத்து எருமைத் தயிரில் கொடுக்கக் கிருமி தீரும். முத்தக் காசு மாதளங் கொழுந்து இலை இரண்டுந் தலைத்து பிட்டிட்டு சாம்பல் பிழிந்து கொண்டு இதில் இலவம் பிசின் விளாம் பிசின் அதிவிடையம் இவை சமன் கட்டி அரைத்துக் கரைத்துக் கொடுக்கவும். ரத்தமாக வயிற்றில் ஒடுகிறது நிற்கும்.

பூபதி:-

தாம்பிர செந்தூரம் பத்து, ரசம் பத்து, வெண்காரம் இரண்டு, கெந்தகம் பத்து, நாவி பத்து, செருப்படிச் சாறு வார்த்தரைத்து சுண்டைக்காயளவு உருண்டை பண்ணி உலர வைத்துக் கொள்ளவும். வாய் அிறுத்த கலயத்தில் சொள்ளவும். உருந்த மாவிலை வில்லை பண்ணி மூடி அந்த மாவிலே நன்றும் பூசி அதக்கு மேலே அஞ்சு சீலை மண் செய்து ஆற விட்டு தாளிசத்தை வைத்து மேலே மண் ஓலை வைத்து மூடி தீக் கொளுத்தி விளக்குப் போலே எரிய விடவும். இரண்டாம் சாமம் அதிலும் சற்று பொறுத்து மூணாஞ் சாமம் அதிலுஞ் சற்று பொறுத்து எரியிட்டு புகையிட்டு எடுத்துக் கொள்ளவும். அதிலே ஒரு பலகு வறுத்துக் கொண்டு சுத்தி பண்ணின நாவி இரண்டு விராகனிடை சத்தெசிகையிடவும்.

சுவர்ண அக்கினி குமாரன்:-

ரசம், கெந்தகம், நாவி, தாம்பிர பற்பம், லோக செந்தூரம், கெவுரி பாஷாணம், எலிப் பாஷாணம், அரிதாரத் மனோசிலை, இவை சமன் கட்டிச் சாறு வார்த்தரைத்து புடமிக்கு, உண்டான புடமிட்டு பூசை கொடுத்துக் கொண்டு சுத்தி பண்ணின நா

விராகனிடை மிளகு ஒரு பலம் வறுத்துக் கொண்டு கவர்ன ரசம் பண்ணி வைத்துக் கொள்ளவும். இஞ்சி சாற்றில் மூன்று நாள் ஊற விட்டு மூன்று நாள் அரைத்துக் கொடுக் கையிலே அடைத்துக் கொள்ளவும். முன்னாத்த முப்பத்தெட்டு வியாதிக்கும் இதுவே அவிழ்தம். அனுபானம் பஞ்ச மூலக் கசாயத்திலிடவும். ---வாத சன்னிக்கு தேனில் கொடுக்கவும். திப்பிலிச் சாற்றில் கொடுக்கவும்.

உள்ளங் காலிலும் உள்ளங் கையிலும் மத்திக்க மருந்து:-

நற் கோவைக் கிழங்கு, அமுத வள்ளிக் கிழங்கு பச்சை வெட்டுச் சந்தனம் குளிர்ந்த பிஞ்சு சாற்றில் கோரோசினைக் கோட்டம் அதிமதுரம், ஏலம், சாத்திர வேதிக் கல்லு கஸ்தூரி கற்பூரம், முந்திரிப் பழம் இவை ஒரொன்று களஞ்சி கொண்டு வெட்டி வேர் இது வெல்லாம் தண்ணீர் வார்த்து அரைத்து பாசிப் பயத்தளவு உருண்டை பண்ணி உலர்த்தி வைத்துக் கொண்டு குளிர்ந்த தண்ணீரில மூன்று உருண்டை காலிலேயும், கையிலேயும் மத்திக்கவும். பித்த சுரம், பயித்திய சுரந் தீரும்.

வெதுப்புக்கு:-

ரசங் களஞ்சி, நாவி களஞ்சி, இருபி களஞ்சி, சாதிலிங்கம் களஞ்சி, சுத்தி பண்ணின நேர்வாளம் அஞ்சு களஞ்சு, இவ்வகைக்கு சுத்தி ரசம், சாறுங்கி தண்ணீரிலே வேக வேக வைத்துக் கொள்ளவும். சிறுகீரைச் சாறு வார்த்து நாலு சாமமரைத்து பாசிப் பயறளவு குளிகை பண்ணி கடுங் காச்சலுக்கு அனுபானம் நாறு, திப்பிலி, புளியங் கொட்டை மாதிரி சுக்கு பத்து, மிளகு பத்து, சீரகம் ஒரு குளிகை இவை யெல்லாம் பொடி பண்ணி தேனிலே பாகம் பண்ணி வைத்துக் கொண்டு வெந்நீரில் குடிப்பது. பின்பு ஒரு* ஒரு சேரை தண்ணீர் கொடுப்பது. இருகால், முக்கால் வயறு போம். போனதின் பிறகு மோருஞ் சோறும் உண்பது. பின்னேயும் வயறு உடைபடாமலிருந்தால் மோரில் சுக்குப் பொடி போட்டு வெதுப்பிக் கொடுப்பது. காரப்பு தவிர்க்கவும். பின் பத்தியம் முருங்கைக் காய், அவரைப் பருப்பு, அரைக் கீரைச் சாறு, பாலுஞ் சோறும் அந்திக்கு உண்ணவும். மத்திய சுரத்துக்கு வெலசிலை தூதாதோடை இலை, கண்டங்கத்திரி இலை இவை இடித்துப் பிட்டவியலாய் பிட்டிட்டு அந்தச் சாறு கொண்டு ஒரு குளிகை இடவும். இருகால் முக்கால் வயறு போனால் மிளகு நீருஞ் சோறுங் கொடுக்கவும். கழிவிற*சுர

கழிவிற சுரத்துக்கு குடிநீர்:-

முத்தக்காசு கழஞ்சு, சுக்கு கழஞ்சு, வட்டத் திருப்பி, பொன் முசட்டை இவை யெல்லாங் கூட்டி ஒரு படி தண்ணீரிலே போட்டு ஒன்றாகக் காய்ச்சிக் கொடுக்கவும்.

மதன காமாங்கி ரசம்:-

ரசம், செந்தூரம், காந்த செந்தூரம், அப்பிரக செந்தூரம், ஜாதிக்காய் தன் விரை, நாபி, சாதிபத்திரி, லவங்கம், வச்சிர பற்பம், மறச்சவான் பற்பம், அவுரி சமுத்திராச் சோதி விரை, திரிகடுகம் இது வெல்லாம் சமன் கூட்டி இஞ்சிச் சாறு வார்த்தரைத்து மூன்று நாள் கலசத்திலே வைத்து அரைத்து அடைக்கலன் குருவி முட்டைக் கரு வார்த்தரைத்து குன்றுமணிப் பிரமாணம் உருண்டை பண்ணி இரண்டு குளிகை சர்க்கரை தேன் பால் உடன் கொள்ளவும். ஆனந்தமாயிருக்கும்.

வீரியம் உத்தித் தம்பனம் சர்க்கரை, தேன் பால் அனுபானம் இதுவே காந்தம் பனமாம். சகல சாதிகளையும் போதிக்கலாம். இது மகசான வசிய ராசாவானவன். கை கண்டது.

நாள் சென்ற காச்சலுக்கு என்னை:-

நல்லெண்ணை உழக்கு, ஆமணக்கெண்ணை உழக்கு, பசுவின் நெய் உழக்கு, சீந்தி தண்டு குண்டு மணி யிலை, கஞ்சாங் கோரை ஜாதி ஆகக் கூட்டி கழஞ்சு கடுகு ரோகிணி, பாலில் அரைத்து கரைத்து வடித்து நூலை அலக்கி உருக்குங் கொடுத்து சருவாங்கமும் பூச அஸ்தியை பற்றின வெதுப்பு நாள் பட்ட வெதுப்பு தீரும்.

நாள் சென்ற காச்சலுக்கு:-

அரக்கு பத்து பலம், குறுணி நீரில் போட்டு ஒரு நாழியாகக் காய்ச்சி இதில் தயிர் தன்னில் குறுணி விட்டு நல்லெண்ணெ இரு நாழி விட்டு இதில் அரைத்துக் கரைக்கு மருந்து: சிறு நப்பாலை வேர், செங்கழுநீர்க் கோஷ்டமாம். மரமஞ்சள், தேவதாரம் அமுக்கிலாங் கிழங்கு, முருதக் காசு, சந்தனம், கடுகுரோகணி, பெருங் குரும்பை, சவிர மூலக் கிழங்கு, சித்தா முட்டி வேர், சிலந்தி தண்டு. அதிமதுரம் இலை யோரொன்று இரு களஞ்சு அரைத்துக் கரைத்து காய்ச்சி வடித்து ஒன்றை விட்டு ஒரு நாள் புசி மாத்த வும். இதுக்கு காச்சல் சுரம் அஸ்தை சுரம், சித்திரைப்பு, சுத்திரமல், சர்வ சுர மும் தீரும். கை கண்டது.

எள் எண்ணெ விதி:-

மோருப் படி, அமுக்கிலாம் வேர் இரண்டு பலம், பொன் மெழுகு பலம் இரண்டு செங்கழு நீர் கோட்டம் பலம் ஒன்று, கடல் நுரை பலம் ஒன்று, கொத்தான் எழுமிச் சங் காயளவு அரைத்து மோரிலரைத்த மூன்று நாள் காய்ச்சி வடித்த ஒன்றை ஒரு நாள் கழுத்துக்குப் பசவும். மூன்றே முக்கால் நாழிகை இருக்க விட்டு மாத்தி விடவும். இந்தப் பிரகாரம் ஐந்து நாள் புசி மாத்தவும். இதுக்கு தாப சுரமி அஸ்தி சுரமுந் தீரும்.

கருங் குஷ்டம், வெண் குஷ்டம், செங்குஷ்டம், விரந்தி:-

குஷ்டத்துக்கு தாளகம் விராகன். ய, வெள்ளைப் பாஷாணம் விராகன். ரு, கெவுரி பாஷாணம். ரு, ரசம் விராகன். ரு, கெந்தகம் விராகனிடை. ரு, துருசு விரா கனிடை. ரு இது வெல்லாம் ஒரு சீலையில், பொட்டணமாய்க் கட்டி கைத்தக் கொண்டு அன்னும்புக் கல் இரண்டு படி கலவத்தில் போட்டு நீத்த தோளாந்திரமாகக் கட்டி இரண்டு சாமம் வேக வைத்து அதின் பிறகு கொள்ளு சாத்திலே தோளாந்திரமாகக் கட்டி அதில் இரண்டு சமம் இருந்ததின் பிறகு பெரும் பூசணிக்காய் சாத்திலே தோளாந்திரமாகக் கட்டி அதில் இரண்டு சாமம் வெந்ததின் பிறகு எடுத்துக் கழுவிப் போட்டு பசிரி கொண்டு வந்து வேக வைத்து தண்ணீர் பிளிந்து கொண்டு அதை விட்டு ஒரு சாமம் அரைக்கவும். அதின் பிறகு தும்பை யிலையும் கஞ்சா யிலை சாறு விட்டு இரண்டு சாமம் அரைக்கவும். அதுக்குப் பிறகு கற்றாழஞ் சாறு எடுத்து உப்பு போட்டு ஊற வைத்து இரண்டு சாமம் அரைக்கவும். அரைத்த பிறகு அடை செத்தி அப்பாலே வைக்கவும். அதுக்கு பிறகு இரண்டு வள்ள உப்பு ஒரு சட்டி முதல் இலைச்சு கஞ்சா யிலை தும்பைத் தழையும் ரசம் பட்டையும் இடித்து உப்பை மேலே வைக்கவும். அந்த அடையை அதில் ஒரு தேங்காயளவு பேரிச்சம் பட்டை மேலே வைக்கவும். அந்த அடையை அதின் மேலே வைக்கவும். அதின் மேலே கஞ்சா யிலையும், தும்பை யிலையும், அரைத்து அடை மேலே வைக்கவும். அதின் மேலே பேரிச்சம் பட்டை வைக்கவும். பிசின் உப்பை அதின் மேலே கொட்டவும். சத்தே தண்ணீர் தெளித்து மாப் பண்ணிச் சட்டி கரைத்து சீலை மண் செய்து அடுப்பு மேலே வைத்து பனி ரெண்டு சாமம் எரிந்து முடிஞ்ச போதே இறக்கி வைக்கவும். அதின் பிறகு உப்பைக் குத்தி அந்தப் பற்பத்தை எடுத்து அரைச்சு கொடுக்கையிலே வைத்துக் கொள்ளவும். குஷ்ட வியாதிக்கு புங்கம் பட்டை, கொல வேப்பம் பட்டை, அளிஞ்சிப் பட்டை இது மூன்றுந் தயில மிறக்கி அந்த தயிலத்தில் அரைக்கால் பணவிடை பற்பமுங் கூட்டிக் குழப்பி நாள்பது நாள் கொடுக்கவும். பத்தியந் தேவையில்லை. மாங்கிஷ முதலானதும் கூட்டிக் கொள்ளவும். இதுக்கு பத்தியத் வாழைப் பழம், பச்சை அரிசி, ச் சோறுந் தேங்காயும் அகத்தி யிலைக் கறியும் இது நாளும் திருத்தவும். கண்டமாலைக்குத் தேமம் தயிலமும் கூட்டி பத்து நாள் தின்னவும். பனை வெல்லத்தில் பத்து நாள் கொள்ளவும். ஆசனப் பவுத்திரம் பக்க பவுத்திரம், கொடிப் பவுத்திரம், ஆசன கட்டிட மாலை இது வெல் லாந் தீரும். தயிலத்தில் கொடுக்க பத்தியம் கார்ப்பு, புளிப்பு ஆகாது. பசுவின் பால் ஆம முசல் கறி, முருங்கைக் காய், அவரைப் பருப்பு இது வெல்லாம் ஆகும்.

நாக சிந்தாமணி:- சுத்தநாகம் விராகனிடை. கு, கோழி முட்டை ஒரு தொட்டால் சுரு

இலையும் அரைத்து குகை பிடித்த குகைக்குள்ளே ரத்தநாகத்தை வைத்து இந்த குகை கொண்டு மூடி சீலை மண் செய்து இந்த மருந்து கொண்டு சந்து வாய் சீலை மண் செய்து புடம் ஒரு முட்டைப் புடம் போட்டு எடுத்து இந்தப் படி பத்து குகை பிடித்து பத்துப் புடம் போட்டு பதினொரு புடந்தனக்கு மண் கலசத்துக்குள்ளே இந்த மருந்தை வைத்து---மூடி---மேலும் வில்லை கொண்டு மூடிப் புடம் போட்டு எடுத்துக் கொள்ளவும். நாகம் கட்டி மாத்திரையாம். சகல சுரத்துக்கும் எந்த அனுபான முண்டோ அந்த அநுபானத்தில் வைக்கத் தீரும்.

<u>பிர்மேக மாத்தக் குளிகை</u>:-

லவங்கம் விராகனிடை.க, மிளகு விராகனிடை.க, ஓமம் விராகனிடை.க, சாதிக்காய் விராகனிடை.க, அதிமதுரம் விராகனிடை.க, திப்பிலி விராகனிடை.க, சாதிப் பத்திரி விராகனிடை.க, செங்கத்தாரி விராகனிடை.க, மாதேவிக் கிழங்கு விராகனிடை.க, நல்ல கோரைக் கிழங்கு விராகனிடை.க, இந்தப் பதினொரு வகையும் ஒன்றாய்ப் பொட்டணம் கட்டி பொடி தனை ஒரு தேங்காயளவு கொண்டு வந்து சட்டியில் போட்டு அதக்கி பாரச் சித்த கல்லுப்புக் கூடப் போட்டு வனக்கச்செ உப்பு பொரிகிற சமயத்திலே ஒரு கள்ள எருமை மோர் வார்க்கவும். இந்தப் பொட்டணத்தையும் கூடப் போட்டு வேக வைத்து திரும்ப பொட்டணத்தை எடுத்துக் கொண்டு இந்தக் கசாயத்தில் வைத்து நிழலுலர்த்தி திரும்ப மறுநாள் வெலிப் பருத்தி சாறு விட்டு ஒரு நாளரைக்கவும். கோழியவரைச் சாறு விட்டு பீக்கந்தலைச் சாறு விட்டு ஒரு நாளரைக்கவும். அரை வரைச் சாறு விட்டு ஒரு நாளரைக்கவும். நல்ல கோரைச் சாறு விட்டு ஒரு நாளரைக்கவும். வட்டப் பீதுறிச் சாறு விட்டு ஒரு நாளரைக்கவும். வெந்த பழுத்தைச் சிக்க வறுத்து தண்ணீர் விட்டுக் குழம்பாக காய்ச்சி அந்தக் குழம்பு விட்டு பெருங்காயம் ஒரு விராகனிடை, வெந்தயக் குழம்புடனே கூடப் போட்டுக் காய்ச்சி அதை ஒரு நாளரைத்து துவரை அளவு உருண்டை பண்ணி நிழலுலர்த்தி கட்டி வைக்கவும். இதற்கு அனுபானம் பிரமேகத்துக்கு வெதுப்பு வயறு ஓடுதல் துளசிச் சாற்றிலே ஒரு குளிகை யாக்கவும்.

<u>உடம்பு குத்தலுடனே மிவதுக்கு</u>:-

விடா மாலையும் புளியஞ் சிராயரிசியும், நிலத்தில் எரியிட்டு வெதுப்பி, உடம்பெங்கும் அலைவரிடவும். உண்டைபு மூளையு உண்டாக கழையுடன் தண்ணீர் தாக மெருக்கும். தண்ணீராய் வயறு கழியும். மீலம் போலவுங்கழியும். உச்சி தாழ்ந்திருக்கும். கண்ணு இடி விழும். இதற்கு கருங் குன்று மணீத் தழையாவது மூடக் கொத்தான் தழையாவது இந்தச் சாற்றிலே ஒரு குளிகை வார்க்கவும். இந்த ரசம் மேலுக்குந் தடவ விடவும். தீரும்.

பசு முடியின் குணம்:- வாந்தி பண்ணும். வயறு கழியும். இதற்கு முலைப் பாலில் ஒரு குளிகை வார்க்கவும்.

<u>பூத தோஷத்தில் குணம்</u>:-

தண்ணீர் தாக மெருக்கும். வயறு மஞ்சள் போல் கழியும். இதற்கு நன்று வடைத் தண்ணீரில் ஒரு குளிகை வார்க்கவும். கள்ள முடியின் குணம்:- தலை சுவிழ்ந்திருக்கும். தாய் முகம் பார்த்து சரீர மெங்கும் கவிச்சை நாறும். இதற்கு பிரமேகன் புதைத்திருந்த குழியில் முளைத்திருந்த அருகாகிலும் எந்தச் செடியாகிலும் சமூலத்துடனே கொண்டு வந்து அரைத்து ஒரு குளிகை கூட சாலடி தண்ணீரில் வார்க்கவும்.

<u>ஊது மாந்தத்தின் குணம்</u>:-

வயறு ஊதிக் கழியும். இதற்கு கொளிஞ்சிச் சாறு சுக்கு, மிளகு, ஓமம் இவை முன்னும் வெதுப்பி அரைத்து கொளிஞ்சி கசாயத்தில் ஒரு குளிகை வார்க்கவும்.

வெக்கை வெதுப்பும் உண்டான சூடும்:-

வாந்திபண்ணும். உடம்பு காயும். இதற்கு மிளகு, தக்காளியாகிலும் வேலி யைக் சாறுகிலும் இந்த சாற்றிலே ஒரு குளிகை வார்க்கவும். பசும் பூமி யொன்று வயா பிரிச் சென்று கழியும். கட்டியுங் கதலையாய் களியும். கண் மயிர் அம்பு போல் நிற் கும். ஒன்றொன்று கூடாது. கண் சொருகிப் போம். தாக மெடுக்கும். இதற்கு கிருவம் பட்டையும் அரசந் தளையும் ஒரு குளிகை வார்க்கவும். கை கண்டது.

பவுத்திரம்:-

சோமநாதப் பெருங்காயம் விராகனிடை.அ, கோரோசினை விராகனிடை.க, சாதிக்காய் விராகனிடை.க, கொடிவேலி விராகனிடை.ய, இரும்பு விராகனிடை.க, செங்கத்தாரிப் பட்டை விராகனிடை.. இது வெல்லாம் ரேக அரைத்து மூன்று படி நல் லெண்ணெயில் கலந்து காய்ச்சி வெந்தவுடனே பத மென்றறிந்து இறக்கி தினம் சிரங்காயளவு உள்ளுக்குக் கொள்ளவும். இந்தப் படிக்கு முப்பது நாள் கொள்ளவும் குணமாம். ஆணி விழும்.

தின சாயம் பூர்த்துக்கு வர வரையிலேக் கொளுந்து, வைத்து கட்டவும். பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும். எந்த வகை பவுத்திரமுந் தீரும். பாரத புலவன் சேவடி முற்றும்.

மதன காமேசுரம்:-

திப்பிலி, தன்னி மட்டாளிகர் ஜாதக் சீந்தில் கஞ்சா, கலப்பிலாப் பூனைக் காலி, கரிய நன்னாரி வேலி, சலம்பிலாம் பிச்சைமத்தை, தண்டுடன் மூக்குராவும், மலப் புறத் தவரை ஒரு வளரு கந்தொக்கக் கட்டே. ஒக்கவே சாதிக்காய், தானிக்காய், குருசானி ஓமிக்க நற்கிராம்பு, சாதி மிதித்த பத்திரி, பேர்த்த தக்க முந்திரிகை நெல்லிச் சார் பிசி கச்சோலம் சர்க்கரை மதன காமேசுர மிது சாற்றலாமே. அந்திர வார்வுக்கும், மேற்கண்ட பிசத்தக்கும் எவர்க்கும் ஒடித் திரியிந்த தீரும்.

குளிர் தோஷத்துக்கு குளிப் பாட்ட மருந்து:-

ஆவாரி யிலை, குன்றி யிலை, வெலிப் பருத்தி யிலை, சித்தா மணக்கிலை, செம்பை யிலை இது வெல்லாந் தண்ணீரில் பிசைந்து மூன்று நாள் குளிப்பாட்டத் தோஷம் போம்.

கண் மாந்த உருண்டை:-

பொடி தலைக் காய் விராகனிடை.க, ஓமம் விராகனிடை.க, கிராம்பு விரா கனிடை.க, சாதிக்காய் விராகனிடை.க, சாதிப் பத்திரி விராகனிடை.க, திப்பிலி விரா கனிடை.க, ஆமையோடு விராகனிடை.க, வசம்பு விராகனிடை.க, மிளகு விராகனிடை. சுக்கு விராகனிடை.க இது வெல்லாந் ஆள் பன்னி பொடித்து உளயிலே வாட்டி சாறு வாங்கிக் கொண்டு அதை வார்த்து அரைத்து மிளகு பிரமாணம் உருண்டை பண்ணிக் கொள்ளவும்.

சுரக் குலை நோவுக்கு:-

பசுவின் பால் ஒரு படியில், ஒரு சிறங்கை வெள் வெங்காயம் உரித்து கூடப் போட்டு ஊறலி காச்சவும். குங்கி வற பதத்தில் ஏலரிசி, நற்சீரகம் பொடி செய்து போடவும். வெல்லம் உடைத்துப் போட்டு நெய் விட்டு இளகாகக் காய்ச்சி எடுத்து வைத்துக் கொண்டு மூன்று நாள் தின்னவும். குணமாம். கை கண்டது. வாயாலே விடாம லெடுத்தால் கொளிஞ்சிப் பட்டைச் சுட்டு அரைத்து எலுமிச்சம் விரை நாலாய் அரைத்து வெந்நீரில் ஒரு சிறங்கை கொடுக்கவும்.

இருமலுக்கு வறட்சிக்கு உச்சிதம்:-

நற்சீரகம், கருஞ்சீரகம், ஏலம், லவங்கப் பட்டை, லவங்கம், அதிமது

செங்கழுநீர்க் கோட்டம், அதிவிடயம், செண்பகப்பூ, நாகேசரம் இவை பத்து
மருந்தும் அரைத்துக் கொண்டு ஆ ளவின் பிறகு பசுவின் நெய் விட்டு அரைத்து
அப்புறம் வைக்கவும். புளி, எலுமிச்சங்காய் அளவு நறுக்கி வெல்லம் நறுக்கிக்
கொண்டு இவை எல்லாம் ஒன்று பட நெய் விட்டரைத்த பசுவின் நெய்யில் போட்டு
வைத்த நெய்யும் நக்கி மருந்து தின்று வரவும் இருமல் தீரும். பத்தியம் பிடித்து
ராத்திரிக்கு தயிர் கட்டி வரவும். பகலைக்கு கஞ்சியது வெந்நீராவது வார்த்து
அசனம் பண்ணவும்.

மருந்து:-

நச்சீரகம் படி.வ, கருஞ்சீரகம் படி.¼, ஏலம் படி.1/8, மற்ற மருந்து
விராகனிடை நெய் படி.½, இந்தப் படி கட்டிக் கொள்ளவும்.

மருந்தீட்டுக்கு:-

புளிய எலுமிச்சம் பழம் கொண்டு வந்து நாலு கீற்றுக் கீறி அரிஞ்சித்
தழை. முறிச்சு வந்த சட்டியில் தண்ணீர் வார்த்து கீழும், மேலும் தழையைப் பரத்தி
நடுவே பழத்தை வைத்து ராவடுப்பில் மூடி வேக வைத்து எடுத்து மூன்று நாள்
காலம்பற தின்னவும். மருந்தீடு தீரும். அப்பைக் கிழங்கு மேல் பிரண்டைய சீவிப்
போட்டு பட்டையை அரைத்து ஒரு பச்சைப் பாக்களவு குடிக்கவும் முறியும்.

உள் மூலம் வெளி மூலம், ரெத்த மூலம் சூதை மூலம்:-

சித்தரத்தை, வெள்ளுடன்னி, கடுகு சுக்கு, நாளொன்றுக்கு ஒன்றரைக் களஞ்சு
விதம் எருமைத் தயிரில் அரைத்து சட்டி காய வைத்து வெளப்பி அரைத்து அடையாகத்
தட்டி இரண்டாவது நல்லெண்ணெயில் பொரிச்சு தின்னவும். ரத்தம் வாயாலே எடுக்கிற
வியாதிகளுக்கு நாயுருவி இலைச் சாறுவது ஆடாதோடைச் சாறுவது ஒரு பிடி
சாறு பிழிந்து பத்து விராகன் படியிலே அரைப்படி சர்க்கரை கட்டி எட்டு நாள் க
காலமே கொள்ளவும். காய்ப்பு, புளிப்பு எண்ணெ, கடுகு, பூசணிக்காய் தவிர்க்கவும்.

சித்தா மணக்கெண்ணெ, நல்லெண்ணெ, பசுவின் நெய்யும் சமன் கட்டி ஒரு
சாமம் சூரிய புடத்தில் வைத்து அந்த ஒரு ஆழ விட்டு மற்ற நாள் முதல் முக் கட்டு
எண்ணெயும் மூன்று நாள் நிறுத்தி நாலா நாள் பயத்தம் பருப்பு அரைப்பிட்டு
உடம்பிலே சுர மில்லாவிட்டால் குளிர்ந்த தண்ணீரில் முழுகவும். அத்திரக்*
பைத்தியம் தீர்க்கும்.

பல வகையான காசங்களுக்கு மருந்து:-

முதிரா விரை புங்கம் விரை, செம்பு பொடி, வெள்ளிப் பொடி தலை
போது சந்தனம், வங்கம் நீலம் செம்பஞ்சு மிருகு கலமுட்டை ஒரு சீனி குடன்
தாமரை வளையம் நாகாவண்டு, சுக்கு, கடுக்காய் விரை, உள் பருப்பு, நாவிக்
காய், பருப்பு பச்சரிசித் தவிடு, நிலப் பனைக் கிழங்கு, வாலுழுவைக் கிழங்கு,
தண்ணீர் விட்டான் கிழங்கு, கடுகுரோகணி, மரமஞ்சள், சமுத்திராப் பச்சை,
கரப்பு வளையல் பருத்திக் கொட்டைப் பருப்பு, வெள்ளைக் கல் இலுப்பை வயிரம்
பசுவின் பால் பன்றிக் கொம்பு, வெள்ளைக் குதிரைப் பல், கழுதைப் பல்,
புலி நகம், கோழி, நெஞ்செலும்பு, பீங்காங்கோடு பூர சிலாசித்து, பலகறை
கடல் நுரை, முந்த பவழம், புளியம் பூ, நந்தியா வட்டம், மருதோன்றி இலை, சவுச்
காரம் இவை எல்லாம் ஒரு கண்ட சமதை நிறுத்து அரைக்க கரியாந்தகரைச்
சாறு பொன்னாங்கண்ணிச் சாறு, சிறுகீரை ஓரிலைத் தாமரைச் சாறு விட்டரைத்து
உருண்டை செய்து தேன், நெய் முலைப் பால் கரியாந்தகரைச் சாறு இவைகளில்
உரைத்திடவும்.

கால மேக நாராயண செந்தூரம்:-

காலமேக நாராயண செந்தூரம்:-

இரசம். சுத்தி பண்ணின கெந்தகம். சாதிலிங்கம். பரு, பொன்னரிதாரம். அ பலம், மனோசிலை. உ, பலம் இவைகளை சுத்தி பண்ணி ரசத்தை சாரணைப்பிலைச் சாறு விட்டு முக்கிச்சுப் பிறகு சாறு விட்டு வேர் தண்ணீர் விட்டு மத்தித்துப் பிறகு நெருஞ்சில் கொடுத்துவிட்டு. கம்பிளி கொண்டு கலசத்து வாயைக் கட்டி அதின் மேலே கெந்தகத்தை வைத்து ஒரு குழியில் கலசத்தை வைத்து அதின் மேலே ஒரு உலை மூடி கொண்டு மூடி அதின் மேலே மண் கொண்டு மூடி மேல் தீ விட்டு எரிக்க கெந்தக ரசம் உருகிக் கலசத்தில் விழும். அப்படிச் சுத்தி பண்ணின கெந்தகத்தை எடுத்துக் கொண்டு சாதிலிங்கத்தைப் பொடி செய்து எலுமிச்சம் பழச் சாற்றில் விட்டுப் போடவும். அரிதாரத்தைப் பொடி செய்து அரசிலைச் சாற்றில் கழுவிப் போடவும். இப்படிச் சுத்தி பண்ணின பிறகு முன் சொன்ன நிறையா நிறுத்துக் கொண்டு எருக்கம் பால் விட்டு ஒரு சாமம் அரைத்து அதின் பிறகு புளியாரைச் சாறு விட்டு ஒரு சாமமரைத்து தும்பை இலைச் சாறு விட்டு ஒரு சாமம் அரைத்து பிறகு செருப்படிச் சாறு விட்டு ஒரு சாமமரைத்து பிறகு செம்முள்ளிச் சாறு விட்டு ஒரு சாமம் அரைத்து பிறகு மாதளையிலைச் சாறு விட்டு இரண்டு சாமம் அரைத்து முருங்கைப் பூச் சாறு விட்டு ஒரு சாமம் அரைத்துப் பொடி பண்ணி கெங்கா சல குப்பை முன் சொன்ன ஏழு சீலை மண் செய்து உலர விட்டு மருந்தை குப்பி வாய் மட்டும் இருந்து குப்பி வாயை ஒரு பக்கல்லைக் கொண்டு அடைத்து முன் சொன்ன அரை மண் கொண்டு வாயை அடைத்து ஒரு மடுப்பில் வண்ணான் வெள்ளாவி மடுப்பில் போட்டு ஒரு நாழி பதித்து நாலு விராகனிடை மண் விட்டு அதின் மேலே குப்பி வாயை வைத்து அந்தக் குப்பி மூட மட்டும் மண் விட்டு விநாயக பூசை பண்ணி வயிரவன் பூசை பண்ணி ஆற விட்டு ஒரு சாமம் கமலாக்கினி இரண்டு சாமம் காய்ச்சி இருபத்தொரு சாமம் எரித்து மறுநாள் தீயாறப் போட்டு வயிரவ பூசை பண்ணி குப்பியை உடைத்து ஒன்றில் வைத்துக் கொள்ளவும். இந்தச் செந்தூரம் முருக்கம் பூப் போலே இருக்கும். இந்தச் செந்தூரத்தில் இரண்டு பணவிடை திரிகடுகு வெதுப்பி பொடி செய்து வெருகடிப் பிரமாணம் கண்டங்கத்திரியிலை தூதுவளை இலை, ஆடாதோடை இலை, இவைகளை கருப்பி பிட்டவியலாக அரைத்து பிழிந்து தண்ணீர் தேனும் இந்த மருந்தும் குழப்பித் தின்ன ஈளை இருமல் எலி கடி தீரும். மந்தார காசம், காய சுவாசம், சுவாத காசம், சேத்துமம், மூர்ச்சை, சன்னி மூர்ச்சை, மேலீளைப்பு, உப்பிசம், பத்து நாள், அந்திரும் விடிஞ்சும் கொள்ளத் தீரும். இந்த செந்தூரத்திலே அரைப் பணவிடை திப்பிலி வெதுப்பிப் பொடி செய்து, கழஞ்சி தேன் குழப்பி அந்தி விடிஞ்சு பத்து நாள் கொள்ள பதினெட்டு ரசவாலை குட்டம் பதினெட்டும் புண், குடோரம், பதினெட்டும் குறை ரோகம், கடி விஷம், வண்டு கடியும், செவ்வட்டை கடியும், பால குட்டமும், பாலகடி விஷமும், சிரங்கு, சொறியும், அரையாப்பு, அரைப் புத்து, காலில் கடி விஷமும், நெஞ்சு நோக்காடு அரிசிப் பிணியும் மண்டைச் சூலை கண் ணோசிலை, காசச் சீ, காது மடல் வீக்கம், அசுவுண்ணி இவை யெல்லாம் தீரும். இந்த செந்தூரத்தில் ஒரு பணவிடை வெள்ளை வெங்காயத்தில் இரண்டு நேரம் முப்பது நாள் கொள்ள சன்னி மூர்ச்சை உதரவாதம், அற்புத வாதம், கரை கரை கன்றே சம்பந்தி இவை தீரும். இந்த செந்தூரத்தில் ஒரு பணவிடையும், வெங்காரம் ஒரு பலம், பொரிகாரம் ஒரு பலம் இவை வெதுப்பி பொடி செய்து முருங்கைப் பட்டைத் தண்ணீரிலே தண்ணீரில் லோக செந்தூரம் ஒரு பணவிடையும் கூட்டி இரண்டு நேரமும் பத்து நாள் கொள்ள சன்னி வாதம் பக்க வாதம் குத்து வாதம் உதர வாதம், திமிர்க்கு வாதம், சுவாங்கி வாதம், தோல் வாதம், நடுக்கு வாதம், சரவாங்கி வாதம், தோல்வாதம், நடுக்கு வாதம், முகத்து வாதம், எரி வாதம், துருவாதம், உள் வலிப்பு, புற வலிப்பு, கொண்ட வாதம், சத்தி குன்மம், எரி குன்மம், வலி குன்மம், அட்ட குன்மம், மூல வாய்வு, கல்லடைப்பன், சதை யடைப்பன், நீரடைப்பன், இந்திரியன் கண்டி இது முதலானது தீரும். இந்த செந்தூரத்தில் அரைப் பணவிடையும். நீர் முள்ளிச் சாற்றில் நாற்பது நாள் கொள்ள கெர்ப்ப விப்புருதி மட்டு விப்புருதி, காலி விப்புருதி, கோழை விப்புருதி, உள் மாந்தை, சுரமாந்தை, பக்க வாய்வு, அண்ட வாய்வு குடல் வாதம், நரை வாதம் கால் வாதம், யோனி சூலை

பக்க சூலை, வாத சூலை, பிர கிரப்பு இவை யெல்லாந் தீரும்.

ஈசுர சிந்தாமணிச் செந்தூரம்:-

மகா இரதம் சுத்தி பண்ணினது பலம்.உ, கெந்தகம் பலம்.உ, சாதிலிங்கம் பலம்.க, வெங்காரம் பலம்.க, மனோசிலை பலம்.½ இவை யெல்லாஞ் சுத்தி பண்ணிக் கொள்ளவும். மாதளையிலைச் சாறு ஒரு நாளரைத்து பிறகு, நக்காளியிலைச் சாறு விட்டு ஒரு நாளரைத்து மாதளம் பூ, செம்பருத்திப் பூ, மருக்கம் பூ, வெட்டிவேர்ப் பூ இதின் சாறு ஒவ்வொரு நாள் விட்டரைத்துப் பொடி பண்ணி கெண்ணாசலக் குப்பி, கிட்டா கிட்டால் பிரித்திக்கா குப்பியுமாம். இந்தக் குப்பியை ஏழு சீலை மண் செய்து உரை நீவிட்டு அந்த மருந்தைக் குப்பியிலே யிட்டு ஒட்டி அடப்பு போட்டு அதிலே ஒரு தாளியைப் புகைத்து குப்பியை வளப்புக் கல்லு கொண்டடைத்து அடை நீ மண் கொண்டடைத்து தாளியில் நாலு விரல் கடை மணல் விட்டு குப்பியை வைத்துக் குப்பி கட மட்டும் ரெம்ப மண் விட்டு விளுக பூசை பண்ணி அடுப்பில் தீப் போட்டு தீபாக்கினி ஒரு சாமம் கமலாக்கினி இரண்டு சாமம், காடாக்கினி இருபத்தொரு சாமம் எரிய விட்டு தீப் பிரித்து வயிரவ பூசை பண்ணி செந்தூரம் எடுத்துக் கொண்டு இந்தச் செந்தூரம் ஒரு பணவிடை மங்கியைக் கருத்தியை எடுத்து நரச் சொல்லி அவன் பார்பதியாகக் கொண்டு தான் ஈசுரனைப் பாவித்து அவிஷதத்தையு மிட்டிட. மருந்தெல்லாம் பலிக்கும். இந்த

இந்த செந்தூரத்தில் ஒரு பணவிடையும், சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, குரோசாணி ஓமம், அக்கிராடையம், ஒவ்வொன்று, க பலம். வெதுப்பி பொடி செய்து இந்தப் பொடி வெருகடிப் பிரமாணமும் தேனில்குழைத்து பத்து நாள் தின்ன கிருமி யாவ வகையுந் தீரும்.

இந்த செந்தூரத்தில் ஒரு பணவிடையும், மருள் கிழங்கு உலர்த்தி பொடி செய்து வெருகடி பிரமாணம் இரண்டு நேரமும் இருபது நாள் கொள்ள மூலம் எண்பது வகையும் வேரோடே அற்றுப் போம். பத்தியம் கோழிக் கறியும், கீரைத் தண்டும் கட்டவும். இந்த செந்தூரத்தில் ஒரு பணவிடையும், மருது கற்பூரத்திலே கால் பணவிடையும் பறங்கிப் பட்டை சூரணத்திலே வெருகடிப் பிரமாணமும் தேனில் இரண்டு நேரமும் கொள்ள புண் குட்டோரம் பதினெரு வகையும் வாத எண்பது வகையும் கரப்பன் முப்பத்திரண்டு வகையும், கிரந்தி இருபத்தொன்றும், விப்புருதி உண்டானதுந் தீரும்.

இந்த செந்தூரத்தில் ஒரு பணவிடையும், மாத கற்பூரத்தில் ½ பணவிடையும் வெருகங் கிழங்கு விராகனிடையும் பொருக்குத் தயிலத்தில் வைத்து தயிலத்தில் குழப்பி இரண்டு நேரமும் நாற்பது நாள் தின்ன பதினெட்டு குட்டமும் குறை நோவும் வண்டு கடியும், விஷக் கடியும், சிரங்கு சொறி, கபால குட்டம், காளி கடி விஷந் தீரும்.

; இந்த செந்தூரத்தில் ஒரு பணவிடையும சாந்த செந்தூரத்தில் ஒரு பணவிடையும் வங்க பற்பம் அரைப் பணவிடையும் அமுர்த்த சர்க்கரை வெருகடிப் பிரமாணம் ஆவரைத் தயிலத்தில் குழப்பி இரண்டு நேரமும் நாற்பது நாள் கொள்ள சகல கழிச்சல் இருபது வகையுந்தீரும். இந்த செந்தூரத்தில் ஒரு பணவிடையும்; பிரம் பட்டை தயிலத்தில் கொள்ள குன்மம் எட்டு வாய்வு இருபதுந் தீரும்.

இந்த செந்தூரத்தில் ஒரு பணவிடையும் தாமரைப் பூவில் வர்ள தண்ணீராகுதல் இருபது நாள் கொள்ள மகா உஷ்ண ரோகங்களும் சுரம் இருபத்தாறுந் தீரும்.

இந்த செந்தூரத்தில் ஒரு பணவிடையும், வில்வாதி லேகியத்தில் இருபது நாள் கொள்ள க்ஷயம், இருமல்இ விக்கல், மந்தார காசம், காய சுவாசம், சுவாத காசம், உள் மாந்தை, சுர மாந்தை, காசம், காமாலை, சத்தி குன்மம், எரி குன்மம், பத்த குன்மம் இவை யெல்லாந் தீரும்.

<u>(வேறு) செந்தூரம்:-</u>

சுத்தி பண்ணி ரசம். சுத்தி பண்ணின கெந்தகம். மாணிக்கப் பொடி.

வெங்காரம்.௨ய பலம், மனோசிலே.ய, அரிதாரம் பலம்.ரு. சாதிலிங்கம்.40, செம்முள்ளியிலைச் சாறு விட்டு இரண்டு நாளரைத்து சுத்தன் குழம்பைச் சாறு விட்டு ஒரு நாளரைத்து பொடி.பண்ணி வெங்கார சலிக் குப்பி கொண்டு வந்து ஏழு சீலை மண் செய்து உலர விட்டு பொடியைக் குப்பி அரை மட்டும் புகட்டி வான மூப்ப கல்லைக் கொண்டு மூடி கொண்டு மண் அடைத்து ஓட்டை அடுப்பு போட்டு அதிலொரு தாளியை புதைத்து நால விரற்கடை மணல் விட்டு கிறைக புகச பண்ணித் தீபாக்கினி ஒரு சாமம், கமலாக்கினி ஒரு சாமம், காடாக்கினி, இதப்கிதொரு சாமம் எரிய விட்டு ஆறின விட்டு நாலா நாள் குப்பியை உடைத்து செந்தூரம் ஒன்றில் வைத்துக் கொள்ளவும்.

இந்த செந்தூரத்தில் ஒரு பணவிடையும் திரிகடுகு வெருப்பி பொடி செய்து வெருகடிப் பிரமாணம் தேனில் குழைத்து இரண்டு நேரமும் நாற்பது நாள் கொள்ள ஈளை இருமல், எலி கடி, மந்தார காசம், காய சுவாசம், சுவாத காசம், உள் மாந்தை சுர மாந்தை, காசம், காமாலை இளைப்பு, சுரப்பு சேற்றும மூச்சை இவை யெல்லா, தீரும்.

இந்த செந்தூரத்தில் அரைப் பணவிடையும், கருவாளைப் பூச் சாற்றில் இரண்டு நேரமும் பத்து நாள் கொள்ள ரத்த பித்தம் மண் புத்தை, ரத்த ரோகம், பெரும்பாடு வெசிரி வாதம், விழுகிறை, ரோமங்கள் தோறும் திரத்தம் விழுகிறை, உரோமாசி தானடாலே ரத்தம் விழுகிறது. வெட்டு பட்ட காயத்திலே ரத்தம் வருகிறதுபிளாப் பெ திலே ரத்தம் விழுகிறது. குதகமானத்திலே ரத்தம் விடாமல் விழுகிறதும் ஈதாமொரு.மிக சாதிகள் கடித்தாலும் மூன்று நாத்திலேயும் இப்படி சரீரத்திலே ரத்த மெருத்தகம் தீரும். இந்த செந்தூரத்திலே கல் நாரு, சாஸ்திர வேதி, கைகை நீர், கலமதகம் இதுவெல்லாம் ஒரு கொட்டைப் பாக்களவு அரைத்து எலுமிச்சம் காயளவு முன் சொன்ன மருந்து அரைத்து பசுவின் பாலிலே கரைத்து சீனியும் போட்டு இப்படி பத்து நாள் கொ க்க வின சொன்ன ரத்தங்கள் நிற்கு----செருக்கான செடியும் கள்ச்சியிலே சாற்றிலும் பத்து நாள் கொடுக்க அண்ட பத்திரம் பிளவைகள், வாதம், கொடி வாதம், தரை வாதம், போத வாய்வு, அண்ட புத்த, அண்ட சத்த இது வெல்லாந் தீரும். இந்த செந்தூரத்தில் அரைப் பணவிடையும், மகனை காமேசுரத்தில் ஆதுவளையும், சன்னசியருக்கு ஆதுவளையும், விழுவிக்குக்கு விழுவைக்கு ஆதுவளையும் இந்த செந்தூரத்தில் அரைப் பணவிடையும் இரதம் மொரு பணவிடையும், பச்சைப் புளு கட்டி, யெரு பீக்கங்காய் சாறு விட்டரைத்து கண்டித் தடவி பூசு நேர்ந்த தன்று பெருக்கும். உள்ளே சுரித்தகச பழையபடி நூதங்குலத்துக்கு வரும். லிங்கத்து மொக்கையும் கண்டு மருப் பாறையுந் தீரு

இந்த செந்தூரத்தில் கால் பணவிடையும் அவுரியிலைச் சாற்றில் அரைத்து முகத்தி பூச முகத்தில் மங்கு முகத்தில் கரப்பு முகத்தித் புளியுந் தீரும்.

இந்த செந்தூரத்தில் அரைப் பணவிடையும் புவரசந் தண்ணீரில் அரைத்து பூச ஆறு பாறையும், எச்சி தழுதளையுந் தீரும்.

இந்த செந்தூரத்தில் அரைப் பணவிடையும், விழுதி யிலைச் சாற்றிலும், முடக் கொத்தான் சாற்றிலும், பத்து நாள், கொள்ள நாக விரேசு, பால் பொங்கிப் போலே பொங்கி பாற்சமுத்திரம் போலே யாம். இந்த செந்தூரத்தில் ஒரு பண விடையும் அனிச்ச வேரும் நில ஆவாரை வேரும், எலுமிச்சம் பழச் சாறும் விட்டரைத்து மேலே பூச படர் தாமரை தீரும். இதை நாவிலும் பழக் கண்டத்திலும தேய்க்க வாய் நாத்தம் தீரும்.

இதிலொரு பணவிடை வெப்பம் பட்டைத் தயிலத்தில் நாற்பது நாள் கொள்ள பதினெட்டு நோவுந் தீரும்.

(வேறு) சர்வ வியாதி தேசரி ரச செந்தூரம்:-

ரசம் சுத்தி பண்ணின சுத்திரதம்.40 பலம், பச்சை நாவி.௨ய பலம், மனோசிலே.ய பலம், சாதிலிங்கம்.சாரு, வெங்காரம் மனோசிலே, சாதிலிங்கம், இவ மூன்றும் சுத்தி பண்ணி முன் மருந்தும் கூட்டி செருப்படிச் சாற்றில் ஒரு சாமம் அரைத்

கத்தாளச் சாற்றில் ஒரு சாமம் அரைத்து மாதளம் பூச் சாற்றில் அதனிலைச் சா சாற்றில் விட்டு இரண்டு நாளரைத்து பொடி பண்ணி செங்கா சலக் குப்பி கொண்டு வந்து குப்பி மேல் மட்டு மிட்டு வாயை வழிப் பக்கலின கொண்டு மூடி முன் சொன்ன அடை மண் கொண்டு வாயை அடைத்து ஒட்டி அடுப்பு போட்டு அதிலே ஒரு தாளியை பதித்து விரக்கடை மேல் விட்டு விளக்கு புகை பண்ணி நாலா நாள் ஆக விட்டு குப்பியை உடைத்து பார்க்க முருக்கம் பூப் போலே யிருக்கும். ஒன்றில் வைத்துக் கொண்டு இந்த செந்தூரத்தில் அரைப் பணவிடை திரிகடுகு, வெப்பி பொடி செய்த செங்கடைப் பிரமாணம் தேனில் இரண்டு நேரமும் நாற்பது நாள் கொள்ள குலை வாய்வு, உ. குன்மம். யசு தீரும். 45.5.63.

இந்த செந்தூரத்தில் ஒரு பணவிடையும், கொல மரத்து தயிலத்தில் இரண்டு நேரமும் நாற்பது நாள் கொள்ள பதினெட்டு குட்டம், கோரை நோவு, கடி விஷம், வண்டு கடி, சூரைக் கடி, விஷக்கல் எலிகடி, கபால குஷ்டம், வாத ரோகம், காமாலை கடி விஷம், செய்யன் கடி, சொரக் கடி, செவ்வட்டை கடி முதல் உண்டான புழுக் கடிகள் கீரி, சிர புரு இவையெல்லாந் தீரும்.

இந்த செந்தூரத்தில் அரைப் பணவிடையும் வங்க பற்பம் அரைப் பணவிடையும் ஆலாரைத் தயிலத்தில் நாற்பது நாள் கொள்ள நீரழிவு இருவகை வகையும் மூத்திரக் கிரிச்சியும், இந்திரிய கடியும், சோம ரோகம், பனிரெண்டும், வாய் நடுக்கம் ஆறும். வாய் நாக்குளி, வாத சிலேட்டுமம், உப்புச செலியும், நக்கு களாவலையும், உள் நாக்கு, தொண்டைக்குள் புற்றும் நாக்கு சிலேயும் நாக்கு கட்டியும், நாக்கு ஆரை தாமரையும், தொண்டைக்குள் புக்கம் மண்டை குலையும், லிங்கப் புத்தம் தீரும். யோனிப் புற்றுந் தீரும்.

இந்த செந்தூரத்தில் ஒரு பணவிடையும், நுவரைவிலைச் சாற்றில் நாற்பது நாள் கொள்ள உள்ளுக்கு எலும்புருக்கி பழஞ் சுரம், உள் காய்ச்சல், நாலா மாதல் கண்ணெரிப்பு, முகமெரிப்பு, மேலெரிப்பு, இவை யெல்லாந் தீரும். இந்த செந்தூரத்தில் ஒரு பணவிடையும், தும்பை யிலைச் சாற்றில் கொள்ள சுரம் அறுபத்து நாலும் தீரும்.

இதில் பணவிடையும், காட்டு கருணைக் கிழங்கு உலர்த்தி பொடி செய்து செங் கடிப் பிரமாணம் நல்லெண்ணெயில் குழப்பி, நாற்பது நாது நாள் கொள்ள மூல முண்டானதும் பித்திரி உண்டானது சிக்கிரனி உண்டானது வயத்திரண்டானது எல்லாம் தீரும். இதில் ஒரு பணவிட தேனில் கொள் வியாதி உண்டானதைத் தீரும்.

நெல்லிக்காய்ச் சாற்றில் கொள்ள பித்தம் உண்டானதுந் தீரும்.

கௌரி சிந்தாமணி, நவுக தீப இரத செந்தூரம்:-

இரதம். உய, பலம், கெந்தகம். உய பலம், வெண்காரம். ய பலம், ரசத்தை ஒரு குழி அம்மியிலே விட்டு கெந்தகமும், வெண்காரமும் அதின் மேலே போட்டு அம்மிக் குளவி கொண்டு நொறுக்காத் தட்ட தகடு போலே புறப்படும். இரதம் ஆன மட்டும் கெந்தகத்தையும் வெண்காரத்தையும் போட்டுத் தட்டவும். இரத மாண்ட தின் பிறப்பு அதை எடுத்து ஈரச் சீலையில் ஒரு கொட்டைப் பாக்களவு கிழியாகக் கட்டி ஒரு பானையிலே அரைப் பானை மணல் விட்டு அதின் மேலே கிழியாக கட்டி மருந்தை அதக்குள் பதித்து அத மேலே பானை நிரம்ப மணல் விட்டு வட்ட ஒரு அரைத்து அந்த பானையில் போட்டு கலைக்கால் மட்டுக் கும்பரிகை சலங் குழி வெட்டி குழிக் குள் நடுவே பானையைக் கவிழ்த்து கெசபுடமாய் பானையை எருக்கொண்டு மூடி விளக்கு புகை உயிர பகை பண்ணி தீ விட்டெரிக்கவும். நன்றும் எரியிட்டு அழவுந் தீக் கருகாமல் தீயிட்டு அன்றைக்கு இருக்க விட்டு மற்ற நள்ளி வயிரவ புகை பண்ணி தீயாற விட்டு ஒருக்கல் போட்ட புடம் மருகாமலிக்கவும். அந்தப் பானையிலிட்ட செந்தூரம் எடுக்க வும். நீர மல்லிப் பப் போலே கருகியிருக்கும். இதுக்கு அநுபானம் இந்த செந்தூர உ*

செந்தூரத்தில் ஒரு பணவிடையும், திரிகடுகு வெதுப்பி, பொடி செய்து கொடுக்க சூலை யஎ. வாய்வுஉச, குன்மம்.ய ஈளை இருமல், எலிகடி, மந்தார காசம், காய சுவாத சுவாச காசம், உள் மாந்தை, அரமாந்தை, காசம், காமாலை, யோனி, சூலை, நாவிச் சூலை, பக்க சூலை, அடை சூலை, அண்ட வாதம், மூல ரோகம், அரையாப்பு, தொடை வாழை, கண்டமாலை, கண்ட விப்புருதி, கடு விப்புருதி, இவை யெல்லாந் தீரும். இந்த செந்தூரத்தில் ஒரு பணவிடையும், சாதிக்காய், சாதிப் பத்திரி, கிராம்பு, அதி விடையம் இவை வெதுப்பி பொடி செய்து, தேனில் இரண்டு நேரமும் இருபது நாள் கொள் கிருனி வகை ம் அதிசார வகை.யஉ, ம் தீரும்.

இந்த செந்தூரத்தில் ஒரு பணவிடையும், காட்டுக் கருணைக் கிழங்கு, மாறு கிழங்கு உலர்த்தி பொடி செய்து சுக்கு திப்பிலி பொடியுங் கூட்டி வெருகடிப் பிரமாணம் தேனில் இரண்டு நேரமும் இருபது நாள் கொள்ள மூலம். , பவுத்திரம்.உய, வகையுந் தீரும். இதில் ஒரு பணவிடையும், ஆவாரை தயிலத்தில் இருவது நாள் கொள்ள சதை யடைப் பன், பதினெட்டு வகையும், நீராழிவு, .உய வகையும், சோம ரோகம்.யஉ வகையும், கல்லடைப்பன், மூத்திரக் கிரிச்சிரம்.உய வகையும், மூத்திர மண்டி ரு வகையும், மூத்திரப் பாணை. வகையும் எலும்புருக்கி.யஉ, வகையும், பதறி.உயச வகையும், உச்சிரம் அ வகையம் உள் உடன்ம் ஆறு வகையும் இவை யெல்லாந் தீரும். இதில் ஒரு பணவிடையும் அவிஞ்சி தயிலத்தில் இருவது நாள் கொள்ள வயத்தில் வியாதி ம் வாய்வுத்திரம் விப்புருதி.எம் தீரும். இதில் ஒரு பணவிடையும், எருக்கம் பழுப்பு வாட்டி பிழிந்த தண்ணீரில் உள்ருக்குக் கொடுக்க வயறு கழியும். கழிந்தால் மோருஞ் சோறும் உண்ணவும். ஒன்றை விட்டு ஒரு நாள் கொள்ள விஷ பாகமுள்ளது சோமமுள்ளது, பயித்திய பாண்டு, சோகை காமாலையும், பிற நீர்க் கோவையும் சுரமுந் தீரும்.

<u>கிடேட்டாளம்புத் கற்பகம்</u>:-

கிடேட்டாளம் அரப்புரங் கொண்டு வந்து காரு கலத்திலே நனைய வைத்து மறு நாள் தெளிதாக எடுத்துக் கொண்டு ஒரு கொடிச் சீலையில் பொட்டளங் கட்டி பரு நெல்லும் அப்பரகமும் நனையப் போட்டு கோணிய பட்டையிற் தேய்க்கவும். கொளிந்து கொளிந்து தேய்க்கவும். அப்பிரகம் வெண்ணை போலே மிதக்கும். அந்த நகலும், நெல்லும் கிடக்க போட்டு திரண்டு வெண்ணை போலே இருந்த தெல்லாம் எடுத்துக் காடியிலே நனையப் போட்டு தெளிந்ததைப் பொடி செய்து சட்டியிலே பரப்பி மேலே அடைய வைத்து அதின் மேலும் கெந்தகம்-பொடியிட்டு ஒரு சட்டி கொண்டு மூடி சட்டி வாயை ஏழு சீலை மண் செய்து அடுப்பில் வைத்து மூன்று நாள் எரிக்கவும். நாலா நாள் அந்த பற்பத்தை எடுத்துக் கொள்ளவும். இது வெள்ளிக் கம்பி போலே இருக்கும். இதுக்கு அநுபானம்:- இதிலே பணவிடையும், சீனி வெரு கடியும் பசுவின் வெண்ணையில் குழப்பி இருபது நாள் கொள்ளவும் உஷ்ண ரோகங்களும், பிரமித்தங்களும், உளலை பெறு தாபமும் சகல கழிச்சல் காறலுக்கு எடுத்த தாங்கலுக்குந் தீரும். இதில் ஒரு பணவிடையுந் தேனில் கொள்ள பித்தத்திலே எடுத்த வியாதி நாத்கிருவத்தெட்டு வியாதியுந் தீரும்.

<u>லோக இரத காந்த செந்தூரம்</u>:- 24.7.63.

அரப்பொடி பலம்.ருய, எலுமிச்சம் பழச் சாற்றில் விட்டு கழுவிப் போட்டு கற்றுளஞ் சாறு விட்டரைத்து பின்பு நாவல் பட்டைச் சாறு விட்டரைத்து கெந்தகம்.பலம்.க இரசம் பலம்.க, சுத்தி பண்ணிக் கொண்டு முருக்கிலைச் சாறு விட்டு இரண்டும் அரைத்து பின்பு அரப்பொடி ஒக்கப் போட்டரைத்து காந்தம் பலம்.க, ஒக்கப் போட்டரைத்து பின்பு எலுமிச்சம் பழச் சாறு விட்டு ஒரு சாமம் அரைத்து மாதளையிலைச் சாறு விட்டு ஒரு சாமம் அரைத்து மாதளையிலைச் சாறு விட்டு ஒரு சாமம் அரைத்து அடையாகப் பிடித்து உலர்த்தில் ஒரு சட்டியில் வைத்து சட்டி நிரம்ப நாவல் பட்டை நறுக்கி இட்டு ஒரு சட்டி கொண்டு மூடி சட்டி வாயை ஏழு சீலை மண் செய்து அடுப்பில் வைத்து மூன்று நாள் எரித்து நாலா நாள் கற்றுளச் சாறு வார்த்தரைத்து அடையாகப் பிடித்து ஒரு சட்டியிலிட்டு அது நிரம்ப கற்றுளச் சாறு இட்டு ஒரு சட்டி கொண்டு மூடி சட்டி வாயை ஏழு சீலை மண் செய்து முழங்கால் மூட்டு எருவடுக்கிப் புடமிட இப்படி இரண்டு புடமிட்ட

பிறகு செந்தூரத்தை எடுத்துக் கொண்டு அதிலொரு பணவிடையும் திரிகடுகு வெதுப்பி பொடி செய்து அதில் ஒரு வெருகடிப் பிரமாணம் தேனில் இரண்டு நேரமும் நாற்பது நாள் கொள்ள இருமல், எலிகடி, மந்தார காசம், காய சுவாசம், காசம், எலிகடி.யஅ, சேத்துமத்திலெடுத்த வியாதி. , பித்தத்திலெடுத்த வியாதி .எஉஅ-ம் வாதம் என்பதில் உண்டான வியாதியும், சத்தி குன்மம், எரிகுன்மம், வலி குன்மம், பதினாறு வாய்வு, இருபத்தாறாம் தீரும். இதில் இரண்டு பணவிடையும், கையாந்தகரை சாற்றில் இரண்டு நேரமும் இருபது நாள் கொள்ள காமாலை, சோகை பாண்டு, விடபாகம், சோகை உள்ளது ஊறக்காமாலை இவையெல்லாந் தீரும். இதில் ஒரு பணவிடையும், கொம்மட்டிக் காய்க் குழம்பிலே ஒன்றை விட்டு ஒரு நாள் பத்து நாள் கொடுக்க வயத்தில் வியாதி அறுபது அகவைஇ கவுசி ரோகம், நீராமை நீரிவை, நீர்க் கோர்வை, அஉந்ட பீலிகை, குன்மம், குருவை, பெருவயறு, மகோதரம் இவை தீரும்.

<u>பஞ்ச_லோகம்</u>:-

அரப்பொடி பலம்.யஉ, வெங்காரம் பலம்.அ, காந்தம்.எ, இரதம்.யரு இந்துப்பு பலம்.ச, இவை ஒக்க கற்றாழஞ் சாறு விட்டு எண்பது நாழிகை அரைத்து அடையாகப் பிசறி, ஒரு சட்டியில் வைத்து சட்டி ரெம்பக் கற்றாழஞ் சோறிட்டு சட்டி கொண்டு மூடி எழு சீலை மண் செய்து அடுப்பில் வைத்து காடாக்கினியாக நாலு நாள் எரித்து தீப் பிரித்து அஞ்சா நாள் குளிர ஆற விட்டு செந்தூரம் எடுத்துக் கொள்ளவும். இதுக்கு அநுபானம்: இதில் ஒரு பணவிடையும், திரிகடுகு வெதுப்பி பொடி செய்து வெருகடியும், தேனிலும், இஞ்சி சாற்றிலும் இரண்டு நேரமும் நாற்பது நாள் கொள்ள சத்தி குன்மம், வலி குன்மம், எரிகுன்மம்.அ-ம் பைத்திய குன்மம்.யச, வாய்வு உய, வாதம்.அய, ஈளை, இருமல், எலி கடி, இளைப்பு, உப்பிசம், காமாலை பாண்டு ரோகம், ஊறக் காமாலை, நீர்க் காமாலை, விடபாகம், சோபம் சூலைக் கடுப்பு, கரப்பான், கிரந்தி, உடம்பு எரிப்பு இவை எல்லாந் தீரும். மற்றுமுண்டான வியாதிகளும் முன் சொன்ன அநுபானம் பார்த்துக் கொள்ளவும்.

<u>போக_அக்கினி குமார_செந்தூரம்</u>:-

அரப் பொடி பலம்.க, செம்புப் பொடி பலம்.க, வெங்கலப் பொடி .க, பித்தளைப் பொடி பலம்.க, அரிதாரம் பொடி பலம்.க, சாதிலிங்கம் பலம்.க கெந்தகம் பலம்.க, காந்தம் பலம்.க, வெங்காரம் பலம்.க, பச்சை நாவி பலம்.க, இரதம் பலம்.க, இவை கற்றாழஞ் சாறு விட்டு மூன்று நாளரைத்து அடையாகப் பிடித்து கற்றாழஞ் சோறும், நீர் மேல் நெருப்பும், கொடிவேலி வேரும், சட்டி ரொம்ப போட்டு மறு சட்டி கொண்டு மூடி சட்டியை எழு சீலை மண் செய்து அடுப்பில் தீ மிட்டெரிக்கவும். மூன்று நாள் எரித்து நாலா நாள் தீப் பிரித்து செந்தூரம் எடுத்துக் கொள்ளவும்.

இதுக்கு அநுபானம்:- இந்த செந்தூரத்தில் அரைப் பணவிடையும், திப்பிலிப் பொடி வெருகடிப் பிரமாணம் தேனில் குழைத்து தலைவலி, மூச்சை தனுவாதம் இவை யெல்லாந் தீரும்.

<u>(வேறு) அரம் செய்யும் அக்கினி_குமார செந்தூ_ரம்</u>:-

அரப் பொடி பலம்.க, வெங்கலப் பொடி பலம்.½, பித்தளைப் பொடி பலம்.½, இர ம் ஒரு பலம், சாதிலிங்கம் ஒரு பலம், தாம்பிரப் பொடி பலம் ½ உருக்கு அரப்பொடி பலம்.க, கெந்தகம் பலம்.ச, வெங்காரம் பலம்.ச, வெள்ளி பலம்.உ, பொன்.க பலம் இவை சேர் கற்றாழஞ் சாறு விட்டரைத்து மறு நாள் கொடிவேலி வேர் ஆயில் பட்டையும் தண்ணீர் தெளித்து சாறு பிழிந்து ஒரு நாளரைத்து மறு நாள் புன் முருங்கைச் சாறு விட்டரைத்து கொடுக்கையிலெடுத்து முக்கால் மட்டும் இட்டு வாயை சில்லுக்க் கொண்டு மூடி கலச மடங்களும் எழு சீலை மண் செய்து

முழங்கால்மட்டும் எருவடுக்கி மேலே கலசத்தை வைத்து அதின் மேலே மாரளவு ஒரு அடுக்கி பொடி எருவு போட்டு மத்து நாள் தீப் பிரித்து அந்தச் செந்தூரம் செவந்த தாகில் எடுத்துக் கொள்ளவும். சிவக்காதிருந்தால் மறபுடம் போட்டுக் கொள்ளவும்.

பச்சை நாவி பலம்.க, பசுவின் கோமியத்திலே நப் போட்டு மத்து நாள் எடுத்து திப்பிலி பலம்.க, திப்பிலி மூலம் பலம்.க, இதவும் செந்தூரம் கட்டி முலைப்பாலில் விட்டு மறுநாள் அரைத்து ஒரு பணவிடைப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலத்தில் வைத்து எடுத்து வைத்துக் கொள்ளவும்.

இதுக்கு அநுபானம்:- இந்த செந்தூரத்தில் ஒரு பணவிடையும், திரிகடுகு வெதுப்பி பொடி செய்து வெரு கடிப்பிரமாணம் தேனில் (திருசி சாரம்) இரண்டு நேரமும் இருபது நாள் கொள்ள சன்னி.யஅ, வாய்வு.உய வாதம்.அய, சத்தி குன்மம், எரிகுன்மம், வலி குன்மம் புல பைத்திய குன்மம்.ய குடல் செறிகை வாய்வும், குடல் வாதம், மண்டை நூலே, பீனி கள்.யஅ, நாசி கபாலமும், கபால வாய்வும், தலை வலியும், தலை இடியும், பூரி உதரமும், செவி நோவும், கெந்தாளியும், தொண்டை நோவும், நெஞ்சு நோவும், முசல கண்டமும், மூச்சை சன்னி மூச்சை முடை வாதம், கழல் வாதம், அந்திர வாய்வு, ஆதி நீர், வட்டி குடல் வாதம், பிறு சன்னி வலிப்பு போதக வாய்வு, குதிரை வாதம், முழங்கால் முட்டி, முழங்கால் கரப்பான், நடுக்கு வாதம், வாயாலே கொருப்பு தள்ளு கிறது, சரீரத்தில் சிலந்திகள், கன்னி வறளை எடுத்தது புண்ருடோரம், நூலே.யஎ-ம் தீரும் இந்த செந்தூரத்தில் ஒரு பணவிடையும், வெள்ள வெங்காயம் தயிலத்தில் கொள்ள சிறு வாதம், நீங்கும். இதிலொரு பணவிடையும், திப்பிலிப் பொடி வெரு கடிப் பிரமாணமும் தேனில் பத்து நாள் கொள்ள பிரமியம்.யஅ, கல்லடைப்பன்.யஅ, சதையடைப்பன்.யஅ, இந்திர கண்டி.ரு, இந்திர வாய்வு, பித்தம்.உயஅ, உஷ்ண ரோகம்.எஉ, சேத் ம சோபம். இவ்வகை நோவுந் தீரும். இதில் ஒரு மாத்திரையும், கள்ளி வடகத்திலே பத்து நாள் கொள்ள வயத்தில் விரேசி.ய, வாய்வுத் திரட்சி.ஙஉ, மகோதரம், பெரு வயறு விடபாகம், சோகை, காமாலை, பாண்டு இவை யெல்லாந் தீரும்.

நவ (லோக) சித்தர் காரீய செந்தூரம்:-

காரீயம் முத்திரை கட்டி பலம்.ய, பசுவின் கோமியமும், பசுவின் சாணமும், உப்பும் இது மூன்றும் பசுவின் மோரும் ஒன்றாக கலக்கி இதில் இருபது தரம் உருக்கிச் சாய்த்துக் கொள்ளவும். இந்த வங்கத்தை எடுத்து ஒரு புதுச் சட்டியில் போட்டு வறுக்க வும். பிறகு அம்மான் பச்சரிசி கொண்டு வந்து சிறுகச் சிறுகப் போட்டு இரண்டு நாள் வறுக்கவும். பிறகு சிவந்த நாயுருவி சிறுக நறுக்கிப் போட்டு வறுக்கவும். செந்தூரம் முருக்கம் பூப் போலே இருக்கும். இதுக்கு அநுபானம்: இதில் ஒரு பணவிடையும், நச்சீரகம் பலம்.க, கடுகு பலம்.க, ஏலம் பலம்.க, வாய்விளங்கம் பலம்.க, மரமஞ்சள் பலம்.க குகை நீர் பலம்.க, கஸ்தூரி மஞ்சள் களஞ்சு, வெண்காரம் பலம்.க, மலையில் ஆவாரம் பூகண பலம்.க விளாம்பிசின் பலம்.க, கருவேலம் பிசின் பலம்.க, ஆவாரம் விரை பலம், வாகை விரை.ய பலம், முருங்கை விரை.ய பலம், சமுத்திராச் சோதி விரை.ய பலம், பூமி சர்க்கரைக் கிழங்கு.ய பலம், நிலப் பனைக் கிழங்கு.ய பலம். அவினி.ரு பலம், குமிளம் விரை.ரு பலம், தாமரை .ரு பலம், அகத்தி விரை.ரு பலம் பித்த விரை.ரு பலம் இவை சேர் தேங்காய்ப் பால் விட்டு அரைத்து வெய்யிலிலே உலர விட்டு பொடி செய்து அமுந்து சர்க்கரை.ய பலம் ஒக்கக் கட்டி இந்த சூரணத்தில் வெரு கடிப் பிரமாணமும் அதுக்கு சரி சீனியும் இந்தச் செந்தூரத்தில் ஒரு பணவிடையும், குருமை யாகல் தேனும், உஷ்ணமாகல் வெண்ணெயிலும் இரண்டு நேரமும் நாற்பது நாள் கொள்ள நீரழிவு இரு வகையும், சுக்கில பிரமியம், பதினெட்டும், மூத்திரக் கிரிச்சி பதினெட்டும் இந்திர கண்டி ஐந்தும், சோம ரோகம் பனிரெண்டும், கிரானி ஆறு வகையும், அதிசாரம் பனிரெண்டு வகையும், நீர்க் கடுப்பு, உஷ்ண சுரம், உள்ருக் கிரந்தி, எலும்புருக்கி பனி ரெண்டு பித்த கோபம் நாத்திருவத்தெட்டு உஷ்ண ரோகம் முன்னூத்திருவத்தாறும் சுரம் முப்பத்திரெண்டும் காலெரிப்பு, கை யெரிப்பு, மூக்கெரிப்பு இவை யெல்லாந் தீரும்.

தம்பனை கறக்கும், தாது வத்திக்கும் உடம்பில் முண்டாம் அரை போகத் தாதுக்கு முழுப் போக முண்டாம்.

(சுதர்) (வேறு) தங்கக் காசு பலம்.ய, அஞ்சனக் கல்லு வெட்டுக் கல்லு நன்னிக் கல்லு கூடன் கற்பூரம் வங்க பற்பம், துரிசு இலை .ருய எலுமிச்சம் பழச் சாறு விட்டரைத்து பிறகு கண்டங்கத்திரிச் சாறு விட்டரைத்து இந்த தங்க காசிலே தடவி உலர தடவி ஒரு ஆலிலை மேல் வைத்து ஒரு ஆலிலை கொண்டு மூடி அதை சீலை மண் செய்து முழங்கால் மட்டும் எருவடுக்கி அதின் மேல் வைத்து அதின் மேல் அரையளவு சாமம் எருவடுக்கி கெசபுடமிடவும் தீரும்.

இதிலொரு பணவிடை பேய்க் கொம்மட்டிச் சாற்றில் கொள்ள வயிற்றில் வியாதி உண்டானது எல்லாந் தீரும். இந்த் செந்தூரத்தில் ஒரு பணவிடையும் தேனில் கொள்ள வியாதி உண்டானதுந் தீரும். நெல்லிக்காய் சாற்றில் கொள்ள பித்த முண்டானதுந் தீரும். ஆடாதோடை யிலைச் சாற்றில் கொள்ள சேத்துமம் உண்டானதுந் தீரும். G

(வேறு) நிலவாகை சமூலங் கொண்டு வந்து நிழல் உலர்த்திக் கொண்டு வஸ்திர காயம் பண்ணி ஒரு பேய்ச் சுரைக் காயில் அடைத்துக் கொண்டு வெருகடிப் பிரமாணம் எடுத்துத் தேனில் கொடுக்க எப்படிக் கொத்த விடமுந் தீரும். முருங்கையிலைச் சாற்றில் குடிக்க எலிகடி தீரும். பாகையிலைச் சாற்றில் குடிக்க எப்படிக் கொத்த விடமுந் தீரும். நல்லெண்ணையில் வைக்கவும். வாய்வு தீரும். நெய்யில் வீக்கம் பொருக்கும். நல்லெண்ணையில் குறுக்கு வலி தீரும். வெள்ளாட்டு மூத்திரத்தில் கொடுக்க ஊது காமாலை தீரும். பசுவின் கோமியத்தில் கொடுக்க பெரு வயிறு தீரும். வேப் பிலைச் சாற்றில் கொடுக்க வயிற்றில் புழு விழும். எருமைத் தயிரில் கொடுக்க வயிற் றுக் கழிச்சல் தீரும். சுக்கு, திப்பிலி, மிளகு பொடி செய்து தேனில் குழைத்து தின்ன பைத்தியந் தீரும். குளிர்ந்த தண்ணீரில் குடிக்கக் கரப்பான் தீரும். சோற்றில் பொடி போட்டுத் தின்ன வியாதி யெல்லாந் தீரும். ஆமணக் கெண்ணையில் குடிக்க உள் காய்ச்சல் தீரும். பிரண்டைச் சாற்றில் குடிக்க மூல வியாதி தீரும். முருக்கிலைச் சாற்றில் குடிக்க கையமகச குன்மமைய தீரும். மோரில் குடிக்க வாந்தி சத்தியெல்லாந் தீரும். சுக்குப் பொடியோடு தின்றால் வாதந் தீரும். சிறு குறிஞ்சாய் சாற்றில் குடிக்க விரியம் பாம்பு கடி தீரும்.

(வேறு) வங்கம் பலம்.உ, கொண்டு வந்து பத்து தரம் உருக்கி மோரிலே சாய்த்து பசுவின் மூத்திரத்திலே ஐந்து தரம் சாய்த்து பின்பு ஒரு தகடாக தட்டி ஒரு வடி குழி சாண் ஆழத்துக்கு கெல்லி அந்தக் குழிக்குள் ஓடு வைத்து அதின் மேல் புளியஞ் சிராய் பாதி தகட்டையும் வைத்து அதின் மேல் அந்தச் சிராய் கொண்டு மூடி திரும்ப போட்டு அதின் மேல் குழம்பு மண்ணிட்டு பூசிப் போடவும். வெந்தாறு விட்டு (ஸ்ரீ) இட்டுக் கொள்ளவும். வேண்டுங் கருமத்துக்கு செய்து கொள்ளவும்.

(வேறு) தாம்பிரத்தை சுத்தி பண்ணி அதில் ஒரு கட்டி தாம்பிரத்தைத் தகடு தட்டி அதை நாலு விரக் கடை அளவு குழி கெல்லி குழிக் கீழே சத்ரு உமிப் போட்டு தனக்கு வேண்டுமென்று கெந்தகத்தை ஒரு விராகனடை பொடியை மேலே பரப்பி அதின் மேலே முன் சொன்ன தகட்டைக் காய்ச்சி வைத்து அதின் மேலும் அப்படியே பொடி போட்டு வேப்பங் கொழுந்து கொண்டு மூடி குத்திக் கொண்ட முகத்தில் அரை ந நாழிகை செல்ல விட்டு எடுத்த ஒரு கொடியில் சட்டிஅல் பட லையாக விழும். அப்படித் தட்டி தட்டி எடுத்துக் கொள்ளவும். சு:

சன்னி வாதத்துக்கு எண்ணை:-

வேப்பம் பட்டை பலம்., வேப்பம் பட்டை பலம் இவை நறுக்கி இடித்து ஆடாதோடை வேர் பலம்.உய பேய்புடல் சமூலமும்.உய பலம் இவை நறுக்கி இடித்து ஆறு மரக்கால் தண்ணீர் விட்டு குவளியாக காய்ச்சி இறுத்து கோட்டம்

மரமஞ்சள், அரத்தை, தேவதாரம், அதிமதுரம், சதகுப்பை, வாய்விளங்கம், கற்கடக சிங்கி, கிராம்பு, கஸ்தூரி மஞ்சள் நன்னாரி வேர், எலாமிச்ச வேர், இருவேலி வேர், அசமதாகம் குந்திருக்கம் ஒரொன்று கொண்டு அரைத்து கரைத்து நல்லெண்ணை படி.2½ வேப்பெண்ணை படி,உ, அதில் புகட்டி மெழுகு பதத்தில் வடித்துக் கொண்டு மேலுக்கு மிட்டு உள்ளும் நக்கி அந்தியும், பொழுதும் சேதிட்டு வரவும். இப்படி நாற்பது நாளிடச் சன்னி வாதந் தீரும்.

(வேறு) எருக்கிலை சமூலஞ் சாறு ஐந்து பலம், வாத மடக்கிச் சாறு ஒரு பலம், நொச்சிச் சாறு ஒரு பலம், வாகையிலைச் சாறு ஒரு பலம், ஆதண்டைச் சாறு ஒரு பலம், ஆமணக்கிலைச் சாறு ஒரு பலம், புங்கிலைச் சாறு ஒரு பலம், கார்த்தொட்டி இலைச் சாறு ஒரு பலம், கள்ளிக் கொம்பு இலைச் சாறு ஒரு பலம், கரு நொச்சியிலைச் சாறு ஒரு பலம், கரியாந்தகரைச் சாறு ஒரு பலம், வன்னி யிலைச் சாறு ஒரு பலம், கருங்காலி இலைச் சாறு ஒரு பலம், இண்டிலைச் சாறு ஒரு பலம், ஆடு தின்னாப் பாளை இலைச் சாறு ஒரு பலம், பாவட்டை இலைச் சாறு ஒரு பலம், இலுப்பை இலைச் சாறு ஒரு பலம், முத்திருக்கு கொட்டைக் கரந்தை அமத்தை குப்பை மேனி, கொன்றை முடக் கொத்தான் மாவிலை, நாரத்தையிலை, கவுதும்பை, நத்தைச் சூரி வேம்பு, சங்கு சங்கல ஞப்பி, மிளகு, தக்காளி, ஆடாதோடை, முருங்கை அகத்தி, முசு முசுக்கை, தாமரைக் கிழங்கு, தாமரையிலை, விழுதி மெதிபாகல் இவை இலைச்சாறு ஒரொன்று ஒரு பலம் இந்த மருந்துச் சாறு நாற்பது மரக்கால் கள்ளிப் பால் வெள்ளாட்டுப் பால் தனிப் பசுவின் பால் (இதுவும் தனிய) வேப்பெண்ணை பலம், சித்தாமணக்கெண்ணை ஒரு பலம், நல்லெண்ணை ஒரு பலம், புங்கெண்ணை ஒரு பலம், குருந்தெண்ணை ஒரு பலம், கடுகு எண்ணை ஒரு பலம் இந்த எட்டெண்ணையும் விட்டு மேல் மருந்துச் சாறேபே விட்டு நீறு வைக்கவும். வில்வப் பத்திரி நொச்சி வாதமடக்கி நிலாவிரை இருவேலி விழு விட்டை தேது நெர் காட்டாவி இள முருங்கை கொடி வேலி கண்டங்கத்திரி, சுருளி ஆயில் பட்டை, புன் முருங்கைப் பட்டை, வன்னது வேர், அமுக்கிரம் வேர், முருக்கம் வேர், இலுப்பை ஒரொன்றுக்கு பலம்.உய, இடித்து பதினாறு மரக்கால் தண்ணீர் விட்டு நாலு மரக்காலாக காய்ச்சி இறுத்து எண்ணை சாத்தில் விட்டுக் கொள்ளவும். கண்ட மருந்து.

வெள்ளை வெங்காயம் பலம்.ய, கெந்தகம் பலம்.க, பெருங்காயம் பலம்.க, மரமஞ்சள் பலம்.க, கத்திரி மஞ்சள் பலம்.க, சாதிக்காய்.எ, சீரகம் பலம்.க, கடுகு பலம்.க, அதிமதுரம் பலம்.க, கோட்டம் பலம்.க, அரத்தை பலம்.க, இவை அரைத்துக் கரைத்து தேங்காயளவு போடவும். கார்பூரம் பலம்.்க, குமிழம் பழச் சாறு நாழி இது வெல்லாம் அரைத்து எண்ணையில் வேக வைத்து பதத்தில் வடித்து எண்ணை மேலும் இட்டு அந்தியும் பொழுதும் வேது வார்க்கவும். இப்படி நாற்பது நாளிடத் திமிர் வாதம் கொல் வாதம், முசல் வாதம், என்புறு சுரம் வளைய மும், சப்பாணி செவிடு மற்று முண்டான வாதமெல்லாம் கடுகத் தீரும். கை கண்டது.

<u>மகா பூதிகா தயிலம்:-</u>

எருக்கிலம் பு, எருகிலங் காய், எருக்கிலை எருக்கம் வேர், தென்பால் இடித்து வைத்துக் கொண்டு ஒரொன்று சாறு படி.4½, கள்ளிப் பால் 4½ படி, நொச்சியிலைச் சாறு 4½ படி, வெள்ளாட்டுப் பால் 4½ படி, நல்லெண்ணை.½, படி வேப்பெண்ணை.½ படி விளக்கெண்ணை ½ படி, புங்கெண்ணை.½ படி, அதில் விட்டு அதி மதுரம், கோட்டம், சதகுப்பை, தேவதாரம், அசமதாகம், வாய் விளங்கம், மர மஞ்சள், கஸ்தூரி மஞ்சள், வெளிச்சை பிசின், வலம்புரிக்காய், திப்பிலி மூலம், கொடி (சேர் ஒன்று) பலம்.½, பெருங்காயம், இரதம், வெள்ளைப் பாஷாணம், அரிதாரம் மனோசிலை, கௌரி பாஷாணம், தாளி நெது விஷம் ஒரொன்று.ரு, அரைத்துக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து மேலுகது இட்டு வேது வார்க்க நாற்பது நாள் சன்னி வாதம், திமிர் வாதம், முக வாதம், பித்த வாதம், தோல் வாதம், சருவாங்க வாதம்; எரிவாதம், நடுக்கு வாதம், அரையில் கீழ் வாதம், அடி வாதம் குறுக்கு

வாதம், விசி வாதம் தனவாதம் இவை யெல்லாஞ் சீக்கிரமாகத் தீரும்.

அரிதாரம், மனோசிலை, நாவி, ீர் விடநம் ஒரொன்று ஐந்து அரைத்துக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து மேலுக்கு இட்டு வேது வார்க்க நாற்பது நாள் சன்னி வாதம், திமிர் வாதம், மூக வாதம், குத்து வாதம், தோல் வாதம், சருவாங்க வாதம், எரிவாதம், நடுக்கு வாதம், அ ரயில் கீழ் தடி வாதம், முறக்கு வாதம், விசி வாதம், தன வாதம் இவை யெல்லாந் தீரும்.

<u>வாதத்துக்கு_தயில_என்னை:</u>-

ஆயில் பட்டை பலம்.எ, நொச்சி வேர் பலம்.உய, புங்கம் வேர்ப் பட்டை பலம்.ய, புன் முருக்கை வேர் பலம்.ய, எருக்கம் வேர் பலம்.ய, சங்க குப்பி வேர் பலம்.ய, கொடிவேலி வேர் பலம்.ய, மஞ்சணத்தி வேர் பலம்.ய, அருகம் புல்லு வேர் பலம்.ய, வேப்பம் பட்டை பலம்.ய, எட்டிப் பழம்.ருய இவை இடித்து பதினொ மரக்கால் தண்ணீர் விட்டு பதக்காகக் காய்ச்சி வடித்து வெள்ளாட்டுப் பால் ஒரு படி நல்லெண்ணை.ச வேப்பெண்ணை.ச, திரிகடுகு, பெருங்காயம், வெள் வெங்காயம், அசம தாகம், நச்சீரகம், வெந்தியம், கருஞ்சீரகம், மரமஞ்சள், கஸ்தூரி மஞ்சள், இந் துப்பு, சதகுப்பை, சித்திர மூலம், ஏலம், லவங்கம், மனோசிலை, வெள்ளைப் பாஷாணம் ஒரொன்று பலம்.ந் பாஷாணமும் பெருங்காயமும் ஒன்றுக்கு பலம்.ய விழுக்காடு இதை அரைத்து கலந்து நாற்பது நாள் செய்யவும். வாதம் எண்பதுந் தீரும். தெய்வ வைத்தியம்:

<u>ரச_செந்தூரம்:</u>-

இரதம் மூன்று பலம், நெல்லிக் காய் கெந்தகம் பலம்.உய, செம்முள்ளி இலைச் சாறு விட்டரைத்து செம்பருத்திப் பூச் சாறு விட்டு ஒரு நாளரைத்து மிரு, தக்காளிச் சாறு ஒரு நாளரைத்து பெரும் பட்டைச் சாறு விட்டு ஒரு நாளரைத்து பொடி யாக்கி, தேங்கா மூலக் குப்பியை ஏழு சீலை மண் செய்து உலரச் செய்து ஆற விட்டு அரைத்த இரசப் பொடியைக் குப்பி முக்கால் மட்டும் இட்டு குப்பி வாயை வழுப்பக் கல்லுக் கொண்டு மூடி கடுக்காய், கலிப்பாக்கு, உப்புக்குளவி, அரக்குக் கடு கிட்டம், கருவேலம் பிசின், பொன், மிளகு, வெள்ளைக் கல்லு முட்டை, மஞ்சள் கருவார்த்த ரைத்து பிசின் போலே ஆன பிறகு இந்த மருந்து கொண்டு குப்பி வாயை அடைத்து ஒட்டி அடுப்பு போட்டு அதிலே நாலு மரக்கால் கொள்ள ஒரு தாலியை பதித்து அதில் நாலு விரக்கடை மணல் விட்டு குப்பியை வைத்து குப்பிக்கூட மூட மணல் விட்டு பிறகு தீயிட்டு தீபாக்கினி ஒரு சாமம் கர்டாக்கினி ஒரு பத்தொரு சாமம் எரியிட்டு தீப் பிரிக்கவும். வேகிற போது குப்பி பொங்கினால் கத்தாழைச் சாறு கொண்டு வந்து பொட்டலமாகப் பிடித்துக் கொண்டு குப்பி வாயில் ஒத்திடவும். பொங்கிறது நிற்கும். அந்தக் குப்பி எத்துகிற போதும் எடுக்கிற போதும் விநாயக பூசை வயிரவ பூசை செய்து எடுக்கவும். இரண்டு பரதேசிகளுக்கு அன்னங் கொடுக்கவும். அந்தக் குப்பியை எடுத்து வைத்து பதங்கம் பண்ணிச் செந்தூரத்தை எடுத்து வைத்துக் கொள்ளவும். இந்தச் செந்தூரத்தின் நிறம் முருக்கம் பூப் போலே இருக்கும்.

இதுக்கு அனுபானம் திரிகடுகு வெதுப்பி பொடி செய்து வெருகடி பிரமாணம் இந்த செந்தூரத்தில் ஒரு பணவிடையும் தேனும் இரண்டு நேரமும் இருபது நாள் கொடுக்க வாத சூலை, பதினெழு வாய்வுந் தீரும்.

இந்த செந்தூரத்தில் ஒரு பணவிடையும் வெள் வெங்காயத் தயிலத்திலே எட்டு நாள கொள்ளவும் சன்னி தீரும். நாங்கூழ அரைத்து ஒரு எலுமிச்சங்காயளவு மசறு முட்டையும், கலைக் கொம்பும், ருத்திராட்சமும் கூட்டி முலைப் பாலிலரைத்து இந்தச் செந் தூரம் ஒரு பணவிடையும், முலைப் பாலில் மூன்று நேரங் கொள்ள சுர சன்னியும், பித்த பயித்தியமுந் தீரும்.

இந்தச் செந்தூரம் ஒரு பணவிடையும், திரிகடுகு வெதுப்பி பொடி செய்து வெருகடிப் பிரமாணம் இஞ்சி சாறுந் தேனும் விட்டு எட்டு நாள் கொள்ளவும் அக்கினி மந்தம், இருமல் வாய்வு, உடல் பிரட்டு இவை யெல்லாந் தீரும். இதில் ஒரு பணவிடை

நஞுவை இலைச் சாற்றில் கொள்ள பிள்ளை பெற்ற வயற்றில் சீ விழுகிறது தீரும். நஞுவை இலை அரைத்து வயற்றில் கட்டவும். இந்த செந்தூரத்தில் ஒரு பணவிடையும், அமுத்த சர்க்கரை வெருகடிப் பிரமாணமும் பசுவின் வெண்ணையில் கொள்ள சதை அடைப்பன், கல்லடைப்பன் பிரமியந் தீரும், 25.7.63.

இந்த செந்தூரத்தில் ஒரு பணவிடையும், முருங்கை வேர்ப் பட்டை தண்ணீர் உழக்கு இதில் ஒரு பணவிடையும், முருங்கை வடக்கே போன வேரும் அரைத்து மேலே பூச பிரவாதந் தீரும்.

இதில் ஒரு பணவிடையும், முருங்கை வடக்கே போன வேரும் அரைத்து மேலே பூச பிரவாதந் தீரும். இதில் ஒரு பணவிடையும், நொச்சிச் சாறு உழக்கு கொள்ள கால் வாதம் தீரும். இதில் ஒரு பணவிடையும் வாதமடக்கிச் சாறு உழக்கும் பத்து நாள் கொள்ள சர்வாங்க வாதந் தீரும். இதிலொரு பணவிடையும், வாகையிலைச் சாறு உழக்கும் இருபது நாள் கொள்ள மலிக் கட்டு வாதமும், சன்னி வாதமும் தீரும்.

இரச செந்தூரம் ஒரு பணவிடையும், அப்பிரக செந்தூரம் ஒரு பணவிடையும், காந்த செந்தூரம் ஒரு பணவிடையும், அவரை பல்லி ஒரு விளாங்காயளவு கறக்கம் விட்டரைத்து ஒரு தேற்றான் விரைப் பிரமாணம் உருண்டை பண்ணி எருமைத் தயிர் வடிகட்டி அத்திக்கொரு உருண்டை வெறு வேளை ஒரு உருண்டை நீர் முள்ளிச் சாறு உழக்கு சாற்றில் கொள்ள சுரர் தீரும்.

இரதம் பலம்.௩, கெந்தகம் பலம்.௩. இரதஞ் சுத்தி பண்ணி செங்கல் பொடி போட்டு சுத்தி பண்ணவும். பிறகு மஞ்சப் பொடி மத்திக்கவும். பிறகு கொடிவேலி வேர் போட்டு மத்திக்கவும். பிறகு சாறணை வேரும் இலையும் தண்ணீரும் விட்டு கெந்தகத்தை ஒரு கலசத்தில் பசுவின் பாலும் வாழைத் தண்டும், தண்ணீரும் வார்த்து கலயத்து வாயை கம்பிளி போட்டுக் கட்டிக் கீழே புதைத்து வண்டு மேலே கெந்தகத்தை வைத்து ஒரு உலை மூடி கொண்டு மூடி மண்ணைத் தள்ளி தீ எரிய விட்டு எருக்க கெந்தகம் உருகிப் பாலிலே விழும். சுத்தி பண்ணின கெந்தகம் உருகிப் பாலிலே விழும். சுத்தி பண்ணின கெந்தகம் முப்பலம் இரண்டும் கற்றாழஞ் சோறு விட்டரைத்து மத்த நாள் இரண்டு சாமம் குத்தன் குழம்பை இலைச் சாறு விட்டு அரைத்து மூன்று நாள் அரசம் பட்டையும் கற்றாளையுந் தட்டி ஊறப் போட்டு அந்த தண்ணீர் விட்டு அரைத்து நாலா நாள் செம்முள்ளிச் சாறு மூன்று நாள் விட்டரைத்து பொடி பண்ணி இரண்டு கெங்கா சலக் குப்பி கொண்டு வந்து மண்ணும் வெள்ளைக் கல்லும் உமி, கருப்புத் தோடும், கடுக்காயும் போட்டு நன்று அரைத்து சீலையில் தடவி உலர உலரக் குப்பியை ஏழு சீலை மண் செய்து ஒரு குப்பியிலே மருந்தை விட்டு வாயை வளப்பக் கல்லு கொண்டு அடைத்து அந்தக் குப்பி வாய்க்கு அடை மண் கடுக்காய், களிப் பாக்கு; உப்பு குளவி அரக்கு, கடக் கிட்டம் கருவேலம் பிசின், பொன் மெழுகு, வெள்ளைக் காலும் கோழி முட்டை, மஞ்சள், கருவார்த்தரைத்து சுண்ணாம்பும் வெல்லமும் ஒக்க கூட்டி முட்டை வார்த்தரைத்து பிறகு எலுமிச்சம் பழச் சாறு வார்த்தரைத்து பிசின் போலே ஆனால் இந்த மருந்து கொண்டு குப்பி வாயை அடைத்து அதிலே பெரிய தாளியை புதைத்து அந்தத் தாளிக்குள்ளே நாலு விரக்கடை மணல் விட்டு அதின் மேலே குப்பியை வைத்து குப்பி கழுத்து மட்டும் மணல் விட்டு குப்பி வாய் தெரியாமல் விட்டு இல விறகு தீபாக்கினி ஒரு சாமம் காலாக்கினி இரண்டு சாமம் பரு விறகு காடாக்கினி இருபத்தொரு சாமம் எரிய விட்டு செந்தூரம் பொங்கினதே உண்டானால் கற்றாழஞ் சோறு பொட்டணங் கட்டி ஒத்திடவும்.

குப்பி சோத்தியும் வந்து வெடித்து தாறுகிற கெந்கம் நாலு பொட்டணமாக வடித்து மூ குப்பி பாய்ச்சிக் கொள்ளவும். இப்படி வைத்து எரிக்கவும். இருபத்தஞ்சு சாமம் தீப் பிரித்து குளிர ஆறின பிறகு நாலா நாள் வயிரவ பூசை பண்ணி விநாயக பூசை பண்ணி குப்பியில் செந்தூர மெடுத்துக் கொள்ளவும். முருக்கம் பூப் போலே இருக்கும்.

<u>இதுக்கு அநுபானம்</u>:- இதில் ஒரு பணவிடையும், திரிகடுகு வெருப்பி பொடி செய்து வெருகடிப் பிரமாணம் தேனில் குழைத்து இரண்டு நேரமும் நாற்பது நாள் தின்ன கால் வாத முண்டானது இருமலுண்டானது வாய்வு உண்டானது குன்மங்களுந் தீரும். சூலைகளுந் தீரும்.

இதில் ஒரு பணவிடையும், திப்பிலி காஞ்சம் பறங்கிப் பட்டை களச்சம் பொடி செய்து தேனில் இரண்டு நேரமும் நாற்பது நாள் கொள்ளத் தீராத கருப்பு தீராத பிளிகுந் தீரும். இதில் ஒரு பணவிடையும் சங்கிலைச் சாறு உழக்கு இருபது நாள் கொள்ள உள் மாந்தை, சுரமாந்தை, அரிகுரல், இளைப்பு, சுரப்பு இவைகள் தீரும்.

இதில் ஒரு பணவிடையும் தேனில் இரண்டு நேரமும் ஐந்து நாள் வெந்நீரில் குளிக்க முறிந்த எலும்புங்கூடும். அடி பட்டு நொந்தது உடம்பு கடுப்பு, உப்புக் குத்து மூட்டு மூட்டுத் தோறும் மூளைவிறது உள்ளு புண்ணும் வாய் கிரந்தி தீரும். தொண்டைக் குள்ளே புண்ணும் அரிகுரலும் நாக்குத் தடிப்பும், வாய்ப் புண்ணுந்தீரும்.

இதில் ஒரு பணவிடையும் முட்டை கறகாய தயிலத்தில் கொள்ள கெற்ப விப்புருதி, மடி விப்புருதி, குடல் விப்புருதி, இவை தீரும்.

இதில் ஒரு பணவிடையும் எருக்கிலம் பாலிலே குழப்பத் தேள் கொட்டின வாயிலே தடவ விடுந் தீரும்.

இதில் ஒரு பணவிடையும், காஞ்சிர பட்டை ஒரு விராகனிடையும், இரண்டு காசிடையும் வெந்நீரில் குடிக்க விடுந் தீரும்.

இதில் ஒரு பணவிடையும், துவாரை தயிலத்தில் இருபது நாள் குடிக்க சகல கரிச்சல் தீரும்.

இதில் ஒரு பணவிடையும் நற் சீரகம் ஒரு விராகனிடையும் சீனியில் வெண்ணெயில் குடிக்க எலும்புருக்கி தீரும்.

இதில் ஒரு பணவிடையும் நற் கொவைமைச் சாற்றில் குடிக்க வாதம் என்பதுந் தீரும்.

இதில் ஒரு பணவிடையும் புரோசிலைச் சாற்றிலாகுதல் வளமாற சாற்றிலாகுதல் கொடுக்க கிரமியக் கீஜமயுந் தீரும்.

இதில் ஒரு பணவிடையும் வெள்ளாட்டு மூத்திரம் கழுதை மூத்திரம் இதில் கொள்ளவும் பைத்தியந் தீரும். கோரைக் கிழங்கு உலர்த்திப் பொடி செய்து வெருகடிப் பிரமாணம் செந்தூரத்தில் ஒரு பணவிடையும் கொள்ள சரீரம் அழகு பிறக்கும். தாது விளையும்.

இதிலொரு பணவிடையும் எலுமிச்சம் பழச் சாற்றில் கொள்ள சுரந் தீரும். செருப்படித் தயிலத்தில் ஒரு பணவிடை செந்தூரம் நாற்பது நாள் கொள்ள குட்டம் குறை நோவு கடி விடும், வண்டு கடி இவை யெல்லாந் தீரும்.

இதிலொரு பணவிடையும், புளியிலைச் சாற்றில் கொள்ள காமாலை தீரும்.

<u>சாபஞ்ச செந்தூரம்:- சதுவக்கினி:-</u>

இரசம் மூன்று பலம், நெல்லிக்காய் கெந்தகம் ஒன்றரைப் பலம், குப்பை மேனிச் சாறு விட்டு ஒரு சாமம் அரைத்து கத்தன் குதம்பைச் சாறு விட்டரைத்து பொன்னுங் கண்ணிச் சாறு பனிரெண்டு சாமம் அரைத்து முள்ளிச் சாறு விட்டு அறுபது சாமம் அரைத்து பொடி பண்ணி அந்த இரசமும், கெந்தகமும் முன் சொன்ன மருந்துகளிலே சுத்தி பண்ணிக் கொண்டு பிறகு இப்படி அரைத்து குப்பியை ஏழு சீலை மண் செய்து உலர விட்டு அரைத்த மருந்தைக் குப்பியிலே போட்டு அரை மட்டானதின் பிறகு குப்பி வாயை ஓழுப்பக் கல்லு கொண்டு அடைத்து முன் சொன்ன அடை மண் கொண்டு குப்பி வாயை அடைத்து ஒட்டி யடுப்பு வெள்ளாவி யடுப்பு போட்டு அதிலே ஒரு தாளியைப் பதித்து தாளியிலே நாலு விரக்கடை மண் விட்டு அதிலே குப்பியை வைத்து குப்பி மூட மணல் விட்டு தீப் போட்டு தீபாக்கினி இரண்டு சாமம் காடாக்கினி இருபது சாமம் எரித்து ஆறவிட்டு மற்ற நாள் விநாயகப் பூசை வயிரவ பூசை பண்ணி எடுத்து ஒன்றில் வைத்துக் கொண்டு அந்தச் செந்தூரத்தில் ஒரு பணவிடையும் திரிகடுகு பொடி செய்து வெருகடிப் பிரமாணம் தேனில் கொடுக்க சூலை வாய்வு குன்மம் இவை தீரும்.

இதில் ஒரு பணவிடையும், திப்பிலி வெதுப்பி வெருகடிப் பிரமாணம் தேனில் கொடுக்க*சூலை வாய்வு*குன்மக் குழப்பி இரண்டு நேரமும் நாற்பது நாள் கொள்ள ஈளை, இருமல், எலிகடி, மந்தார காசம், காசம் இவையெல்லாந் தீரும். இதில்

இதில் ஒரு பணவிடையும், பொன் முசுட்டை வேரும், கடலிறுஞ்சிப் பட்டையும், கோரைக் கிழங்கும் விலாம்பிச்ச வேரும இவை சமன் ஒக்கக் கொண்டு பொடி செய்து வெருகடிப் பிரமாணமும் தேனில் குழைத்து இரண்டு நேரமும் நாற்பது நாள் கொள்ளத் தாது விளையும், உடலில் ஒரு ஆளைப் பலமுண்டு. அழகு பிறக்கும். சரீரம் நாற்றம் போம்.

இதிலொரு பணவிடையும், கோழிய வரைச் சாற்றில் இரண்டு நேரமும் நாற்பது நாள் குடிக்க ஆறு கிரணியுங் கடுப்புந் தீரும்.

இதில் ஒரு பணவிடையும் பஞ்ச---வெருகடிப் பிரமாணம் தேனில் கொள்ள குன்மங் கிறுணி வயித்திரைச்சல் ஆற்றுத மாற்றாத மடையும் சுத்தல் வசமும் வெருகடிப் பிரமாணம் தேனில் கொள்ள சங்கிர கிரணியுந் தீரும். அக்கினி மந்தமும், நெஞ்செரிப்பும். புளித்தேப்பமும் அவசியந் தீரும்.

இதிலொரு பணவிடையும் வடித்த கஞ்சியும், நாற்றம் பழமும் பிசிர்து கொடுக்க உடனே சோகமும் பிரியமும் நீர்க் கடுப்புந் தீரும். இதில் ஒரு பணவிடையும் கஞ்சா இலைச் சாற்றில் கொடுக்க சீக் கடுப்புந் தீரும். ரெத்தக் கடுப்பு மூலம் உளைவுந் தீரும்.

இதிலொரு பணவிடையும் பெருங்காயம் மூன்று பணவிடையும் தேனில் குழைத்து இருபது நாள் கொள்ள வயத்தில் வியாதி அனபு வலி குன்மம் எரி குன்மம் தீரும்.

இதிலொரு பணவிடையும் அவிஞ்சி இலைச் சாற்றில் நாற்பது நாள் கொடுக்க பதினெட்டு மேகமும் குறை நோவும் வெடி குலையும், தீராத புண்ணும் சிரங்கும், சொறியும் கடி விடமுந் தீரும்.

இதிலொரு பணவிடையும், நான்முனைரத்த ஒரு எலுமிச்சங்காயளவு முலைப் பாலில் பத்து நாள் கொடுக்கப் பாரித்திரம் பித்தம் காசம் பதினெட்டு சன்னியுந் தீரும்.

இதிலொரு பணவிடையும் செங்கழு நீர் சாற்றில் கொள்ள இருபது நாள் கொள்ள வாத பித்தம் சேத்துமம் மஞ்சள் களிப்புச் சலம் இவையெல்லாந் தீரும். இது கை கண்டது.

<u>குளிர் சுரத்துக்கு</u>:-

ஆடாக் கரிசி நேர்வாளம், அரிதாரம் பாஷாணம், வீருஞ் சிவந்த பாஷாணம் நெலக் கஞ்சி கொண்டு வந்த கருங் கள்ளிச் சாற்றிலரைத்து தேத்தன் விரை அளவு உருண்டை செய்து பீடு நொச்சி சாற்றிலிட பெருங் குளிருஞ் சுரமும் போமே. இது கை கண்டது.

வெங்காரம், இரசமுடன், பச்சை நாவி, கருகு ரோகணி, கடுக்காய், மிளகு, வாளமெனக் கூடு மருந்திவை காசு கட்டி இந்த மருந்து அருகனுந்து சுத்தம் சாற்றில் அன்பாக அரைத்து பாவட்டங்காய் பரு இளநீர், பர்ப்படாகம், காய்ச்சி யிட்டால் என் கான சுரங் களெல்லாம் தீர்க்கும்.

மிளகு, சுக்கு, திப்பிலி, வெங்காரம், இரதம், நேர்வாளம், அரைத்து மிளகு பிரமாணம் உருண்டை பண்ணி கஞ்சான் கோரை சாற்றில் ஒரு உருண்டை குடிக்கவும் சுரந் தீரும்.

செஞ்சிறு விளையை வாய் பேசாமல் பறித்து வந்து புழுங்கல் நெல்லரிசி தண்ணீரிலே ஊறப் போட்டு அரைத்து மருந்தையுங் கூட அரைத்து இரண்டையுங் கூடக் கலக்கி மூன்று உருட்டை சுட்டு மூன்று நேரந் தின்ன வயித்து வலி நோவுந் தீரும். வயித்து ரெத்தக் கடுப்பு, சீக் கடுப்பு, கல்கொதி முதலானது தீர்க்கும்.

<u>வயறு அரிக்க அரிக்க நோவுதத்துக்கு மருந்து</u>:-

கருதம்பையிலையுங், கொழுந்தும் பனங்காய் மரத்தில் சொண்டு வந்து முத்தவிட்ட அரிசியிலே அந்த தழையைப் போட்டு இடிச்சு தண்ணீர் வார்த்து பிசைந்து ஆண் பிள்ளைக்கு நொந்தால் பெண் கம்பமாரப் பண்ணவும். பெண் பிள்ளைக்கு நொந்தால் ஆண் கருடமாய் பாவை பண்ணி, வாயகலமான மட் சட்டியிலே சீலை கொண்டுவந்து கட்டி அதிலே அந்தப் பாவையை வைத்து மேலே சட்டி கொண்டு மூடி வேக விட்டு அந்த பாவை எடுத்து அருவா மனையிலே சிறுகச் சிறுக அரிந்து தின்னத் தீரும்.

<u>வயறு வெள்ளெடுப்பாய் போறதுக்கு மருந்து</u>:-

முள்ளிச் செடி பெரு வேராக வெட்டி வந்து கல்வப்பை அரைத்து அந்த வேரிலே

தடவி அனலிலே வெதுப்பி இங்ஙனம் *எரு*கரந் *தடவி* அனலிலே *வெதுப்பி* இங்ஙனம் ஐந்து வேளை இள வெந்நீரிலே அரைத்துக் கொடுக்கத் தீரும்.

மாந்தத்துக்கு:-

சத்தி சாரணைக் கொழுந்து ஒரு பிடி, சங்கொடு, நாயுருவி புங்கொடு பேய்ச் சுரை பொடி தழை சடலொடு, வெம்பி வெதுப்பி அட்கி நுனியிலே இந்திரன் ராவணன் இலங்க நொச்சியிலே தகை ஒத்ந்து அங்கனைச் சட்டி அவல் கடலைச்சு வைத்தம் கூறிய மிளகரைப் பசும் திப்பிலி, வெள் வெங்காயம், ஓமம், வசம்பு சுருதை நாறி, எருமை மோருடன் நீருற வெந்த நெகிழ அரைத்து வேருற அன்னி விளைஞ் வீராகுல் பூரணமாந்தம் பொருமல் பிரமல் சீரன் வாய்வு சிறியான சுளிச்சல் வாகுடல் வாதம் சீருறக் கட்டுந் திரி மலதியும் இந்தப் படி அரைத்து உருண்டை நாள விதம் பன்னி இள வெந்நீரில் கொடுக்கவும். மாந்தல் ஐந் தீரும்.

(வேறு) நல்லெண்ணை ஒரு படி (கைச்சேறு) எண்ணை கருங் குறுவை அரிசி படி ·ஈ, கொடி வேலிப் பட்டை ஒரு வள்ளம் ஒரு படி அரிசியிலே ஒரு பெரிய விளாங் காய் மாத்திரம் போட்டு பிட்டு வேக வைத்து மூன்று நாள் தின்னவும். அதின் பிறகு விளக்கெண்ணை விட்டு தலை முழுகி கத்தரிக்காய் அவரைக் கொட்டை, புடலிக்காய் முதலானதெல்லாம் சம்பாதிச்சு சோளச் சோறு கூடக் கிரந்திப் பட்ட முள்ளதெல்லாம் கூட்டி அசனம் பண்ணவும். அன்றைக்குத் தானே அந்த இரண்டு படி அரிசியிலே அந்தப் பட்டையைக் கூடப் போட்டு இடிச்சு கசாயம் போலே நல்லெண்ணை வார்த்து சுட்டுத் தின்னவும். அதை இரண்டு தரம் கொள்ளவும். அந்தக் கசாயத்தை முதல் முதல் கால்க் கசாயம் கொள்ளவும். மற்ற நாள் அரைக் கசாயந் தின்னவும். நாளுக்கு நாள் மட்டாய எத்திரத்துமே கொண்டு வரவும். ராக் காலத்திலே கொள்ளவும். மருந்து தின்ற முடியு மட்டும் கத்தரிக்காய் அவரைக் கொட்டை, புண்ணுக்குலே என்னையும் பதங்கிக் காயு சோளச் சோறும் ஆகும். அந்தப் படி இருபது நாளைக்கு சோறுண்ட பிறகு ராக்காலத்திலே அடை தின்னவும். நாலு நாளைக்கொரு முழுக்கு முழுகவும். பழஞ் சோறும், தயிரும் மோரும் வார்த்துண்ணவும். சிகை மிச்சமானால் மருந்தை நிறுத்தி தலை முழுகி உடம்பு செப்பனிட்டுக் கொண்டு பிறகு அந்தப் படி கொள்ளவும். இது கை கண்ட மருந்து.

எலி கடிக்கு:-

கருவேலம் பட்டை, ஒரு விளாங்காய் மாத்திரத்துக்கு அரைச்சு ஒருபடி எருமை மோரில் கரைசந்து மூன்று நாள் கொடுக்கவும். பத்தியம் பசுவின் பால், உப்பு, புளி, தவிர்க்கவும்.

பேய் நாய், பேய் நரி கடிச்சாலும் வேலம் பட்டை தானே அரைச்சு தண்ணீரில் மூன்று நாள் கொடுக்கவும். பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும்.

வாத சுரந் நிதானம்:-

முகங் கறுத்திருக்கும். உடம்பெல்லாம் நோகும். நினவுண்டு. திமிர் உண்டாயிருக்கும். உடம்பு குளிர்ந்திருக்கும். மயிர்க் கூச்செறியும். இது வாத சுர நிதானம்.

இதுக்கு கசாயம்:-

திப்பிலி, திப்பிலி மூலம், செவியம், வாய் விளங்கம், சுக்கு இவை எல்லாம் கூட நசுக்கி இரண்டு படி தண்ணீரில் போட்டு கால் படியாக காய்ச்சி இறுத்து கொடுக்கவும்.

பைத்திய சுரத்துக்கு கசாயம்:-

சுக்கு, திப்பிலி, மிளகு, நற்சீரகம், கடுக்காய் இவை யோரொன்று இரண்டு விராகனிடை கண்டங்கத்திரி சமூலம் ஐம்பது விராகனிடை, கரிசாலி,

சறுநெமம்வேர் ஐம்பத விராகனிடை, நடாதோடை இலையும் இவையெல்லாம் உரலிலே போட்டுக் கலைத்த கடைச் சரக்கு நாக்கி இடித்த கூடப் போட்டு இரண்டு படி தண்ணீர் விட்டு உழக்காகக் காய்ச்சி இரண்டு விராகனிடை சுத்தி பண்ணின வெங்காரம் கசாயத்திலே கூடப் போட்டுக் குடிக்கவும் தீரும்.

<u>வாத பித்த சுரத்துக்கு கசாயம்:-</u>

திப்பிலி, சிறுதேக்கு, வாய்விளங்கம், கடுக்காய், தானிக்காய், நெல்லிமுள்ளி, நற்சீரகம், சுக்கு இவையெல்லாம் ஒரொன்று விராகனிடை கூட்டி கசாயம் வைத்து நாலொன்றுய்க் காய்ச்சிக் கொடுக்கவும்.

<u>சேத்தும சுரத்துக்கு கசாயம்:-</u>

சுக்கு, திப்பிலி, சிறுதேக்கு, மிளகு, அரத்தை, கொடிவேலிவேர், சிறுகாஞ்சொறிவேர், நிலவேம்பு, கண்டங்கத்திரி சமூலமும் ஆடாதோடை இலையும், இவை கடைச் சரக்கு ஒரொன்று இரண்டு விராகனிடையும் வசம்புவிகை அபரு பலமும் கசாயம் வைத்து சுத்தி பண்ணின வெங்காரம் அனுபானத்துடன் இரண்டு பணவிடை கூட்டிக் கொடுக்கவும்.

<u>பித்த சேத்தும சுரத்துக்கு கசாயம்:-</u>

திரிகடுகு, சித்தரத்தை, சிறுதேக்கு, சீந்திற் தண்டு, பேய்ப்புடல், நிலவேம்பு, நற்சீரகம், அதிமதுரம், கோஷ்டம், கொத்தமல்லிகை, கண்டங்கத்திரி, ஆடாதோடை இவைகள் கடைச் சரக்கு ஒரொன்று விராகனிடையும் வசம்பிலிக ஐந்து விராகனிடையும் கூட்டிக் கசாயம் வைத்து கொடுக்கத் தீரும்.

<u>பூத சுரத்துக்கு கசாயம்:-</u>

பெரும்பட்டை, பீநாறி கஞ்சாங் கோரை துளசி நெடுநாரை வேம்பு, நாக்கும் திரிகடுகும், சடாமாஞ்சி, சிறுதேக்கு, நிலவேம்பு, இவை கசாயம் வைத்துக் கொடுக்கத் தீரும்.

<u>சீரணசுரத்துக்கு கசாயம்:-</u>

சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம் இவை ஒரொன்று நாலு விராகனிடை முக்காவேளை பத்து விராகனிடை வசம்பு இரண்டு விராகனிடை இது கசாயம் வைத்து கொடுக்கத் தீரும்.

<u>அபிகாத சுர நிதானம்:-</u>

பிருதியும் ஏரம் நடந்தாலும் சுமக்கல் படாத சுமை சுமந்தாலும் மூருக் குமைதன மடைந்தாலும் இந்த சுரம் வரும். இதக்குத் தண்ணீர் தாகமுண்டாயிருக்கும். உடம்பெல்லாம் நோகும். வேர்க்கும். உடம்பெரியும். மனந் தடுமாறும். குருந்த பதார்த்தங்கள் பேரில் அபேட்சிக்கும்.

<u>இதக்கு கசாயம்:-</u>

சுக்கு விராகனிடை, மிளகு விராகனிடை, திப்பிலி விராகனிடை, நச்சீரகம், இரண்டு விராகனிடை, கொத்தமல்லிகை இரண்டு விராகனிடை, சிறுதிருகாந்தி இரண்டு விராகனிடை, சித்தாமுட்டி நாலு விராகனிடை, பேராமுட்டி நாலு விராகனிடை, சிறுகுறிஞ்சா நாலு விராகனிடை இவையெல்லாங் கசாயம் வைக்கத் தீரும்.

<u>அதிக சுரம் புலவுந்துக்கும் ஜொரும் கசாயம்:-</u>

நாரத்தை வேர்ப் பட்டை, இலைப் பூ மஞ்சு அய்ந்து வகையும் சம பாகம் கசாயம் வைத்துக் கொடுக்கவும். கஞ்சாங் கோரை துளசி, மூங்கில் இலை, இலந்தையிலை பெருமட்டை, பீநாறி, சுக்கு, திப்பிலி, மிளகுடனேகசாயம் வைத்து கொடுக்கத் தீரும். கஞ்சாங் கோரைத் தழை, துளசித் தழை, நாயுருவித் தழை இவை மூன்றும் அருவாமணையிலே அரிந்து மட்டாகக் கட்டி வைக்கிற பொழுது ஒரு விராகனிடை சுக்கு விராகனிடை திப்பிலியும் ஒரு விராகனிடை மிளகு இந்த மூன்று வகையுஞ்

சீலையிலே முடிந்து பிட்டுக்குள்ளே வைத்து சேக வைத்து வெந்த பிறகு அதிரட ரசம் புளிந்து கொண்டு சீலையிலே முடிந்த மருந்தையுங் கட்டி அரைத்து அந்தச் சாற்றில் கரைத்துக் கொடுக்கவும். மாசி பச்சிலை ஒரு பிடியும் நாலு விராகனிடை சுக்கும், நாலு விராகனிடை திப்பிலியும் நாலு விராகனிடை மிளகும் கட்டி அரைத்து பெருங் கன்டைக்காய் மாத்திரம் உருண்டை பண்ணி காலமே பண்ண உருண்டை உள்ளுக்கு விழுங்க மூன்று நாள் கொடுக்கவும். கஞ்சாங் கோரையை சமூலங் கொண்டு வந்து குறுக்கு அரிந்து காயப் போட்டு சாளாக இடித்து அதிலே மஞ்சள் பொடி பலம் மிளகு பொடியும் அசமதாகமும் வெள் வெங்காயமும் போட்டுக் கலந்து குளிர் வருகிற போது தட்டிலே தணல் வைத்து எந்த மருந்தை ஒருவம்பல போட்டு கம்பிளி சுப்பட்டி முக்காடாக போட்டு புகை பிடிக்கவும். குளிர் வருகிற சமயத்துக்கு இப்படி மூன்று நாள் புகை பிடிக்கவும்.

<u>தூவர்க சுரத்துக்கு</u>:-

அரக்கென்னை வடிச்சு உள்ளுக்குங் கொடுத்து சருவாங்கம் நாற்பது நாள் தலைக்கவும். இந்த என்னை பிறகு சுருக்க தைகப்படும்.

<u>ஆந்திகா சுரத்துக்கு</u>:-

அரக்கென்னை முன் சொன்னபடி செய்யத் தீரும். ரத்தக சுரத்துக்கு அரக்கென்னையே கை கண்டது.

<u>மகா சிந்தாமணி</u>:-

இரசம், தாளி, கெந்தகம், மனோசிலை, அரிதாரம், நவச்சாரம், சீனிக் காரம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், வற்றல் தானிக் காய், சீரகம், கருஞ்சீரகம், சதகுப்பை, கொத்தமல்லி, வாய் விளங்கம், வங்காளப் பச்சை, ஓரிலைத் தாமரை வேர், குதிரைக் குளம்பத்தின சாள் வெங் காரம், சவுக்காரம் ஆக மருந்து .உ௪-ல் ஒரொன்று பலம்.௧, நேர்வாளந் தோல் போக்கின விரை பலம்.௩, இவை கட்டி அரைக்க அநுபானம் கையாந்த கரை சாற்றில்.௰௫ நாள் அரைக்கவும். துளசியிலைச் சாற்றில்.௰௫, நாள் அரைக்கவும். ஒரு சிரட்டை களிப்பாக்கு ரா.ரா வெற்றிலைச் சாறு விட்டு.௰௫, நாள் அரைக்கவும். இந்தப் படி.௪௨ நாள் அரைக்கவும். உருந்த மருவாதிக் குளிகை பண்ணி மூன்று நாள் நிழலிலுலர்த்தி வைத்துக் கட்டிக் கொள்ளவும்.

<u>சகல வியாதிகளுக்கும் செய்கின்ற அநுபான விபரம்</u>:-

வாத சுரத்துக்கு நொச்சிப் பட்டைச் சாற்றிலாவது வேப்பம் பட்டைச் சாற்றிலாவது விடவும்.

பித்த சுரத்துக்கு சர்க்கரை கடுகு ரோகணி சுக்கு கஷாயத்திலிடவும்.

தாப சுரத்துக்கு நற்சீரகம், சர்க்கரையிலாவது கொத்தமல்லி சர்க்கரையி லாவது முலைப் பாலிலாவது இடவும்.

சீத சுரத்துக்கு லவங்கம், அதிமதுரம், பச்சரிசிக் கழுநீரில் அரைத்து இடவும்.

அக்கி உஷ்ண சுரத்துக்கு புளியிலைச் சாற்றில் விடவும்.

சகல கழிச்சலிலே எடுத்த சுரத்துக்கு அதிவிடையம், கோரைக் கிழங்கு, வெருப்பிக் குளிசையிடவும். பத்தியம் கடலை, ரொட்டியும், பசுவின் நெய்யும்.

ஓட்டிய புண்ணுக்கு உள்ளித் தயிலத்திலிடவும். புண்ணிலும் பூசி கடலை ரொட்டி பத்தியம் நடக்கிறும். வலி குன்மத்துக்கு முருங்கைப் பட்டைச் சாற்றிலிட வும்.

வாய்வு குன்மத்துக்கு உயிக் கருக்கிய தண்ணீரில் முருக்கிலைச் சாற்றிலே சமம் இளகளிலே இடவும். இரத்தக் கிறுவிக்கு சீரகத்திலிட்டவும். குளிர் குன்மத்துக்கு நாய் வேளைச் சாற்றிலாவது எருமைச் சாணிச் சாற்றிலாவது ஒரு குளிகை இடவும்.

26.7.63.

உஷ்ண குன்மத்துக்கு இஞ்சிச் சாற்றிலிடவும். சீத கிரணிக்கு சீரகத்திலிடவும். ஒரு கிரணிக்கு எருமைத் தயிரிலிடவும். வாய்வு கிரணிக்கு பாவட்டைச் சாற்றிலிடவும். பொருமல் கிரணிக்கு எருமை வெண்ணையிலிடவும். சாதிக்காய் மோர் விட்டரைத்து அதிலிடவும். சில கிரணிக்கு சீரகம் அரைத்து தயிரிலிடவும். வயிற்றுக் கழிச்சலுக்கு அத்திப் பட்டைச் சாற்றிலிடவும். மாந்தக் கழிச்சலுக்கு எலுமிச்சம் பழச் சாற்றிலிடவும். எருமை மோரும் பச்சை மஞ்சள் சாறு கூட்டி அதிலே இடவும். வாந்திக்கு ஓமம் வெதுப்பி வெந்நீரில் அரைத்திடவும். வாயிலே ரத்தம் எடுத்தால் எருமை மோரிலாவது எலுமிச்சம் பழச் சாற்றிலாவது இடவும். கழிசலுக்கு மாவிலிங்கப் பட்டைச் சாற்றிலாவது நொச்சிச் சாற்றிலாவது இடவும். மேகக் கழிசலுக்கு தகரை விரை வெந்நீரிலாவது இஞ்சிச் சாற்றிலாவது இடவும். சீழ்க் கழிச்சலுக்கு மஞ்சள் சாற்றிலிடவும். சிங்க வாதத்துக்கு கைச்சிப் பருப்பு பொடியிலிடவும். குளிர் வாதத்துக்கு கருவிலைச் சாற்றிலிடவும். ஓவர் மண் தண்ணீரிலிடவும். விசி வாதத்துக்கு பசலையிலைச் சாற்றிலிடவும். பூச்சனி வாதத்துக்கு ஊமத்தையிலைச் சாற்றிலிடவும். நடுக்கு வாதத்துக்கு பாக்கு வெற்றிலையிலிடவும். தின்னவும். சன்னி வாதத்துக்கு அக்கிர காரத்திலிடவும். முடக்கு வாதத்துக்குப் பசுவின் பாலும், முருங்கைப் பட்டைச் சாறு வாங்கிக் கூட்டி இடவும். சரவாங்க வாதத்துக்கு கோஷ்டம் வசம்பு, சாதிலிங்கம், எருக்கம் பால் விட்டு அரைத்துப் புசி உள்ளுக்கு நொச்சித் தயிலம் வெள் வெங்காயத் தயிலம் கூட்டி குளிகையிடவும். முடக்கு வாதத்துக்குப் பசுவின் நெய்யிலிடவும். வாத வாய்வு உடலைக் குத்திக் குடைந்தால் பஞ்ச கோல கஷாயத்திலிடவும். பீனிச வாய்வுக்கு செண்பக இலைச் சாற்றிலிடவும். இருப்பைச் சாற்றில் நசியம் கட்டி இடவும். திமிர் வாதத்துக்கு ஒருக் கொட்டை வெங்காயம் மிளகு நால குளிகை உமி நீரிலரைத்து அஞ்சனமிட்டு மேலுக்கும் பூசவும். அந்தர வாய்வுக்கு செங் கொட்டை நசுக்கி பொடியிலிடவும்.

வாய்வு திரட்சிக்கு ஓமம், பெருங்காயமும் பொடி செய்து இருபத்தொரு நாளிடவும். சகல வாய்வுக்கு பஞ்ச கோல கஷாயமாகுதல் கரியாந்தகரை நொச்சி சாறு கூட்டி கஷாயத்திலிடவும். சூலைக் கடுப்புக்கு சூலை வெடிக்கிறதுக்கு பழம் வெல்லம் கருப்புக் கட்டி கூட்டி மஞ்சள் சாற்றிலிடவும். சகல கழிச்சலுக்கு கருங்காலிப் பட்டைச் சாற்றிலாவது ஆவாரை ஐந்து வகைச் சூரணம் பண்ணிக் குளிகை கட்டி எருமைத் தயிரிலிடவும்.

வெரு மூத்திரத்துக்கு கருங்காலிப் பட்டைச் சாறுவது வெள்ளரிக்காய்ச் சாறாவது வேலைக் கிழங்குச் சாறுவது கரியாலந்தகரைச் சாறாவது இடவும். சுக்கிலப் பிரமியத்துக்கு வெள்ளாட்டுப் பாலாவது பசுவின் பாலாவது பசுவின் மோராவது இடவும். ரத்தப் பிரமியத்துக்கு வெள்ளாட்டு நெய்யாவது பால்ச் சோற்றின் சாறாவது இடவும். நாள்ப் பட்ட பிரமியத்துக்கு வெள்ளாட்டுக் கோமியத்திலிடவும். எலும்புருக்கி நோக்காட்டுக்குச் சந்தனக் குழம்பிலாவது கொப்பி சந்தனக் குழம்பிலாவது இடவும். கபால குட்டத்துக்கு காசம் இலைச் சாற்றிலாவது வேலிப் பருத்திச் சாற்றிலாவது வார்த்தரைத்துப் பூசவும். மண்டை வியாதிக்கு கற்பூரத்திலாவது குப்பை மேனிச் சாற்றிலாவது நாற்பத்தெட்டு நாளிலும், செருப்படிச் சாறுவது குப்பை மேனிச் சாறாவது பிரண்டைச் சாறாவது நசியம் விடவும். பூசவும். அதிக வியாதியால் எருக்கம் பால் விட்டுக் மிளகை அரைத்து சீலையில் தடவி திரிக் கொளுத்தி நாசியில் புகை பிடிக்கவும். நாசிகாபீடத்துக்கு வெள்ளாட்டு நெய்யில் அரைத்து நாசியில் பூசவும். பீனிசத்துக்குக் கல்லில் சிக்கு எருக்கம் பாலில் அரைத்து சீலையில் தடவித் திரிச்சுப் புகை நாசியில் பிடிக்கவும். ஒற்றைத் தலை வலிக்கு நாத்தம் கார்ச் சாற்றில் அரைத்து நயனம் காதிலும் புளியவும். நெற்றியில் பூசவும். தலை வலிக்கு முலைப் பாலில் நசியமும் முருங்கைப் பட்டை உள்ளி வசம்பு நசுக்கி தலையில் பூசவும். காதில் புளியவும். காதில் புழு வலிக்கு சீமா நெல்லிச் சாற்றிலாவது சங்கம் பழச் சாற்றிலாவது அரைத்துக் காதிலே புளியவும்.

காதில் சீழ் எருமை மூத்திரத்திலே அரைத்துப் பிழியவும். உள்ளுக்கு

உண்ணுக்குக்கு வெள்ளாட்டு நெய்யிலிடவும். பல் வலிக்கு வேலம் பட்டைச் சாற்றிலிடவும். வாத சூலைக்கு உள்ளித் தயிலத்திலுங் கொண்டு மேலுக்கும் பூசவும். பக்க சூலைக்கு கார்போகரிசியில் அரைத்து வெந்நீரிலிடவும். கபால சூலைக்கு எருக்கம் பால் வார்த் தரைத்து சீலையில் திரித்து நாசியிலே புகை பிடிக்கவும்! கெற்ப சூலைக்கு விரா விலைச் சாற்றில் நல்லெண்ணையில் வெந்நீரிட வெள்ளாட்டுப் பாலிலிடவும். வாய்வு சூலைக்கு சுக்கு கஷாயத்திலிடவும். வறட் சூலைக்கு உள்ளித் தயிலத்திலிடவும். சூலைக்குருப்புக்கு ஓமம் வெந்நீரிலிடவும். கெற்ப விப்புருதிக்கு ஈப்பை மேனிச் சாத்தில் வெந்நீரில் பழங் கஞ்சியிலிடவும். கன்ன விப்புருதிக்கு பசுவின் சாணச் சாற்றிலிடவும். வாத விப்புருதிக்கு அளிஞ்சிப் பட்டைச் சாறுவது வெந்நீரிலாவது இடவும். சேற்பம விப்புருதிக்கு பசுவின் நெய்யாவது சிறுகீரைச் சாற்றிலாவது இடவும். கரப்பானுக்கு தகரைச் சாற்றில் பூசவும். வாத கரப்பானுக்கு கழுதை லத்தியின் சாற்றிலே இடவும். கரப்பானுக்கு தகரை பித்த கரப்பானுக்கு நீர்ச் சோற்றுத் தண்ணீரிலிடவும். சேற்பம கரப்பானுக்கு பிரண்டைச் சாற்றிலிடவும். புத கரப்பானுக்கு எலுமிச்சம் பழச் சாற்றிலிடவும். பிளவைக்கு ஓவர் மண் தண்ணீரில் பூசவும். பக்கப் பிளவைக்கு சிறுநீரில் அரைத்திடவும். தண்டுப் பிளவைக்கு பொன்னாங்கண்ணிச் சாற்றிலிடவும். உச்சிப பிளவைடகரு குன்றுமணிச் சாற்றில் பூசவும். குத்தி குதிப் பிளவைக்கு அவுரித் தழைச் சாற்றிலிடவும். உள மாந்தைக்கு தேன் திப்பிலி இஞ்சிச் சாற்றிலாகுதல், அம்மான் பச்சரிசிச் சாற்றிலாகுதல் இடவும். இருமலுக்கு தேனாகுதல் கையான் தகரைச் சாற்றிலாகுதல் இடவும். வெண் குட்டத்துக்கு செருப்படிச் சாற்றிலாவது வெல்லத்திலாவது இடவும். சிறு பிராயத்து குட்டத்துக்கு துளசி சாத்திலிடவும். ழ

பதினெட்டுக் குட்டத்துக்கு:- (வரவு திக்குச் சாதிக்காயாகுதல்)

அரம் பட்டைச் சாற்றிலிடவும். அமுக்கிலா வேர் ஒரு விரல் நீளம் நறுக்கி நாய்ப் பாகலிலை அரைத்து தடவிப் பறுன வாயிலே தடவவும். செரியாக் குணத்துக்கு எருமைத் தயிரிலாகுதல் ஓமம் பெருங்காயம், எலுமிச்சம் பழச் சாற்றில் அரைத்து அதிலிடவும். படு தாமரைக்குக் கண்டங்கத்திரி, சாத்திலாகுதல் மாதளம் பழச் சாற்றிலாகுதல் வேப்பிலைச் சாறு விட்டு அரைத்துப் பூசவும். ஈரல் வலிக்கு முருங்கையிலைச் சாற்றிலிடவும். நாயுருவி தகரை இவ இரண்டும் சாம்பலாக்கி நாயுருவி யிலை ஊமத்தைச் சாறு விட்டு அரைத்துப் பசவும். நீரடைப்புக்கு காடியிலாகுதல் லவங்கப் பட்டையில் இடவும். நீர்க் கடுப்பக்கு பாக்குடனே தின்னவும். நீர்ப் பாட்டுக்கு உச்சந் தலையில் குடோரி அடைத்து எலுமிச்சம் பழச் சாற்றில் மத்திச்சு இடவும். கல்லடைப்பானுக்கு நெருஞ்சி வேர், பாலில் அரைத்திடவும். ஊர்த்த சுவாசத்துக்கு சீரகத்திலிடவும். சிலந்திக்கு ஆடாதோடைச் சாத்திலாகுதல் நொச்சி சாத்திலாவது இடவும்.

சேத்துமத்துக்கு கருப்புக் கட்டியிலாவது அக்கிருப் பொடி தேனிலாவது இடவும். காரையிலைச் சாற்றிலிடவும். மத்தனுக்கு சிறு பயத்து சாற்றிலிடவும். ரத்த பித்தத்துக்கு அவரைச் சாற்றிலிடவும். சேத்தும பித்தத்துக்கு இஞ்சிச் சாற்றிலிடவும். கரும் பித்தத்துக்கு முசுமுசுக்கைச் சாற்றிலிடவும். வாத பித்தத்துக்கு அம்மான் பச்சரிசி சாத்திலிடவும். ஈளைக்கு செம்பருத்தியிலைச் சாத்திலிடவும். குளிகையும் அரைத்துப் பூசவும். கை கால் வெடிக்கிறதுக்கு அரசம் பட்டைச் சாத்திலரைத்து, கருஞ் சீரக மாவது முயல் புழுக்கையாவது இள வெந்நீரிலாவது அரைத்துப் பூசவும். கை கால் உடம்பு வீக்கத்துக்கு இலவிலை நொச்சியிலைச் சாறுவது சுரைத் தண்டு சாற்றிலாவது வேப்பெண்ணையிலாவது இந்த மருந்தைக் கூட அரைத்துப் பூசவும். பின்னைப் பெத்த உடம்பு வீங்கினால் ஊமத்தை யிலைச் சாற்றில் அரைத்துப் பூசவும். புறங்கால் வீக்கத்துக்கு காடியில் பூசவும். இடுப்பு நோவுக்கு ஓமம் வசம்பு பாற் சோற்றியிலை அரைத்து குளிர்ந்த தண்ணீர் விடவும்.

மருந்தீட்டுக்கு அரசம் பட்டை உள்ளி வசம்பு எண்ணையில் இட்டுக் காய்ச்சி அரை நாழிகை பிறகு அந்த எண்ணையிலாவது எள்ளுங் காடியும் அரைத்து அதிலே கையாந்தகரைச் சாற்றிலிடவும்.

காமாலைக்கு புளியிலை நாக்கும் வேலிப் பருத்தியிலைச் சாறும் சாரணையிலைச் சாறும் இவை மூன்றும் ஆகுதல் பொடியிலைச் சாறுகுதல் கீழா நெல்லிச் சாறுகுதல் இதில் குளிகை இடவும். பாண்டு ரோகத்துக்கு பசுவின் நெய்யாகுதல் நாயுருவிச் சாறுகுதல் கீரைச் சாற்றிலாகுதல் இடவும். வெப்பு பாவைக்கு உள்ளித் தயிலத்திலிடவும். சோகைக்கு எருமைச் சாணிச் சாற்றிலிடவும். விஷ பாகத்துக்கு திரிபாலை கசாயத்திலிடவும்.

பெரு வயத்துக்கு ஆ தலைச் சாற்றிலிடவும். பிற நீர்க் கோவைக்கு சிற நீரிலிடவும். சரீர உஷ்ணத்துக்கு ஆவாரை அரிசியும், தயிரிலே ஆவதை வெள் வெங்காயம் பச்சரிசிக் கழுநீரிலரைத்து அதிலிடவும். சரீரம் அக்கினி போலே காந்தினால் தேனிலிடவும். வாய்வுக்கு இரைச்சலுக்கு திரிபாலை, திரிகடுகும் பொடி பண்ணித்திலும் ஜூட்டு மணிச் சாற்றிலிடவும். புருஷ கிரந்திக்கு வேப்பிலைச் சாற்றில் அரைத்துப் பூசவும். காதுக் குத்துக்கு கையாந்தகரைச் சாற்றிலிடவும். அரோசிகை கையாகக் காறி உமிழ்தத்துக்கு தேனுந் திப்பிலியிலிடவும். மல பெற்றுக்கு பசுவின் மோரிலிடவும். வாய் நாற்றத்துக்கு செண்பகப்பூவிலிடவும். வாய் நாற்றத்துக்கு செண்பகப்பூவிலிடவும். சரீர பல ஹீனத்துக்கு பசுவின் பாலாவது அம்மான் பச்சரிசிச் சாற்றிலாவது இடவும். கஷ்வம் உண்டாக செம்மறி ஆட்டுப் பாலிலிடவும். நீலக் காசத்துக்குக் கறுத்த காக்கணம் பூச் சாற்றில் கண்ணுக்கிடவும். கருவேலம் பூச் சாற்றிலாவது கண்ணிலிடவும். பித்த காசத்துக்கு மணத் தக்காளிச் சாறுகுதல் கோரைக் கிழங்குச் சாற்றிலாகுதல் உரைத்துக் கண்ணிலிடவும். இரணங் கக்கிறதுக்கு ஊமத்தைச் சாற்றில் உரைத்துக் கண்ணிலிடவும். படலம் புகைச்சலுக்கு பல்லுருதையில் உரைத்து இடவும். மிளி கண் குரட்டுக்கு எலுமிச்சம் பழச் சாற்றில் உரைத்திடவும். பூப் பட்ட கண்ணுக்கு வேப்பிலைச் சாறுகுதல் ஊமத்தைச் சாறுகுதல் சமுத்திரா பழமும் முலைப் பாலில் உரைத்திடவும். ரத்த படலத்துக்கு ஊசி மல்லிகைச் சாற்றிலிடவும். சக்கிலப் பிரமியத்துக்கு சிறுபுள்ளடிச் சாற்றிலிடவும். தீர குத்துக்கு உள்ளி மிளகு கூடப் புசனிக்காய்ச் சாறுவது முலைப் பாலாவது வார்த்தரைத்து இடவும். அல்ல சோபத்துக்கு சந்த நீரிலிடவும். தி கெஷ்ட்டிபிரகாக முண்டாக கோரைக் கிழங்கு சாற்றிலிடவும். கண் மயிருதிர்ந்தால் பிலாவிலைச் சாற்றிலாவது இடவும். குமர கண்டன் முயல கண்டனுக்கு கோமயத்தில் நெய்யக் கொட்டான் பழ வெண்ணீரில் அரைத்து குளிகை செய்து உண்ணுக்குக் கொடுத்து கழுதை மூத்திரங் காய்ச்சி மஞ்சள் பொடியுங் கூட்டி பன்னி விட்டை சுட்டு கழுதை மூத்திரத்தில் மத்திச்சு நசியம் அதின விட்டுக் கோழிக்காரம் சுட்டு ஊமத்தையிலைச் சாற்றில் அஞ்சன மிடவும். சகல கடி விஷத்துக்கு பசுவின் பாலாகுதல் நெய்யாகுதல் நிற நீராகுதல், கொத்தமல்லிக் வெண்ணீரில் விட்டரைத்து கொடுத்து எலுமிச்சம் பழச் சாற்றில் அஞ்சனமிடவும். கடிவாயில் வெற்றிலையில்ப் பூசவும். பேய் நாய் கடிக்கு குப்பை மேனிச் சாற்றிலிடவும். பேய் நாய் கடிக்கு வெற்றிலைச் சாற்றில் நரி வெருட்டிச் சாற்றிலிடவும். மூஞ்சூறு கடிக்கு பெருங்காயத்திலரைச்சுப் பூசவும். ஆனைலி கடிக்கு பேய்க் கும்மட்டிச் சாற்றிலரைத்துப் பூசவும். பெண்ணெலி கடிக்கு குப்பை மேனிச் சாற்றிலிட்டுப் பூசவும்.

<u>விரோசனத்துக்கு:-</u>

மிளகு வறுத்து ஆகுதல் ஓமம் வறுத்து ஆகுதல் வெண்ணீரிலரைத்திடவும். இரா விரோசனத்துக்கு நீர் வள்ளிக் கிழங்கு சாற்றிலிடவும். பிள்ளை யுண்டாகப் புத்திர சீவிப் பருப்பும், சீதேவி மா செங்கழுநீர்ச் சாறும் பசுவின் பாலுங் கூட்டி இடவும். பிள்ளை பெற மாட்டாத பேருக்கு கற்றாளம் பூவும், தாது வர்த்தனைக்கு கம்பிளி ஆட்டு பாலிலிடவும். தம்பனத்துக்கு எருக்கம் பாலிலுரைத்து உள்ளங் காலில் பூசவும். உடம்பு பெருக்க பெருந் தந்தி வேர் பசுவின் பாலிலிடவும். உடம்பு மெலியத் தேன், திப்பிலி, வெற்றிலைச் சாறுங் கூட்டி ஆனை மூத்திரத்தில் நசியம் பண்ணவும்.

இராச வசியத்துக்கு கோரோசினையும் வாய விழுந்த தோல் அதில் திலத மிட்டு காடியினுன்றும் கொண்டு அவளையிடவும். வசிய புத்தியும் அறிவுண்டாக பிரமியிலைச் சாறுகுதல் முலைப் பாலில் ஆகுதல் உரைத்திடவும். சூரியம், பேய்க்கு எருமுட்டை சாம்

பல் சுட்டு நீருக்கின நீரில் அரைத்து அஞ்சு குளிகையிலிட்டு உலை நெருப்பிலே காய்ச்சவும். பூத பிசாசுக்கு எலுமிச்சம் பழம் சாறு லேயிலாகுதல் அஞ்சனமிடவும். சகல வியாதிக்கும் தேன் நொச்சிச் சாற்றிலிடவும்.

ஆயிரத் தொடா குளிகை:-

இரசம், நெல்லிக்காய், கெந்தகம், அரிதாரம், சாதிலிங்கம், வெள்ளை பாஷாணம், கெவுரி பாஷாணம், வெண்காரம், பச்சை நாவி, இருவி, சுக்கு, திப்பிலி மிளகு, நெல்லிக்காய், தானிக்காய், நற்சீரகம், கருஞ்சீரகம், அத்தி, திப்பிலி, அதிவிடையம், குருசாணி ஓமம், அசமதாகம், ஆக மருந்து.உ௰-க்கு சுத்தியான நேர்வாளம் காராம் பசுவின் பாலிலே வேக வைத்து நஞ்சு போக்கி ஆக மருந்து.உ௰-ம் சமஞ்சு அரைக்கிற விபரம்.

கையாந்தகரைச் சாற்றில்.ஞ நாள் தும்பையிலைச் சாற்றில்.ஞ நாள், துளசிச் சாற்றில்.ஞ நாள், பாக்கு வெற்றிலை தலைச்சு சாறு பிழிந்து கொண்டு அதில் ஞ நாள் பசுவின் பாலில்.ஞ, நாள் இந்தப் படி முப்பது அரைத்து உருட்டி மருவாதிக் குளிகை பண்ணி நிழலலத்தி வைத்துக் கொள்ளவும். இதுக்கு அநுபானம் விவரம்

விடாச் சுரத்துக்குப் பாலிலிடவும். குளிர் சுரத்துக்கு மிளகும் குளிகையுந் தின்று வென்னீர் குடிக்கவும். அத்த சுரத்துக்கு சீனி சர்க்கரையிலிடவும். செரியாக் குன்மத்துக்கு அசமதகம் வெதுப்பி இரண்டு குளிகை கூட்டி வென்னீரிலிடவும். விஷத்துக்கு வெள்ளையும் மிளகும் கூட்டி இடவும். வலி குன்மத்துக்கு வெள்ளாட்டுப் பாலிலிடவும். சூலைக் கடுப்புக்கு எருமை மோரிலிடவும். வெப்ப எண்ணையிலிடவுடம. ஈளைக்குப் பசுவின் நெய்யிலிடவும். சன்னிக்கு துளசிச் சாற்றிலிடவும் . நீர்ப் பபுாட்டுக்கு திராய் வேரில் இடவும். விஷத்துக்கு எலுமிச்சம் பழச் சாற்றில் அஞ்சனமிடவும். இருமலுக்கு ஆடா தொடைச் சாற்றிலிடவும். ஈளைக்கு எலத்திலிடவும். சத்தி குன்மத்துக்கு ஆடா தொடைச் சாற்றிலிடவும். பயித்தியத்துக்கு ஊமத்தை இலைச் சாற்றிலிடவும். காமாலைக்கு மஞ்சள் சாற்றிலிடவும். கரப்பானுக்கு நாரு குடத் தண்ணீர் விடவும். கற்பூர வள்ளிச் சாற்றிலிடவும். சத்தி குன்மத்து வில்வப் பழச் சாற்றிலிடவும். உஷ்ணத்து இரண்டு மூன்று குளிகை வென்னீரிலிடவும். வயிற்று நோவுக்கு தயிருஞ் சுடுகிற சோறுங் கூட்டி இடவும். காச்சலுக்கு நெல்லிப் பருப்பை அரைத்து நாளி தண்ணீர் விட்டு உழக்காகக் காய்ச்சி குளிகை இடவும். கிருமிக்கு பாகலிலைச சாற்றில் இடவும். தலை சொறிவுக்கு புங்கெண்ணையில் பத்து குளிகை போட்டுக் காய்ச்சித் தேய்க்கவும். நாளா மாறலுக்கு சுக்கு திப்பிலி கொத்தமல்லி உரி தண்ணீர் உழக்காக காய்ச்சிக் குளிகை கொடுக்கவும். மாறல் காச்சலுக்கு கொடிவேலி, சிறுதேக்கு கொத்தமல்லிகைக் கசாயம் வைத்து அதில் கொடுக்கவும். வெள்ளை ஆக்கிறதுக்கு சந்தனம், நற்சீரகம், பச்சைக் கற்பூரம் குளிகையுங் கொடுக்கவும். ரத்த அக்கிறத்துக்கு தென்னங் குரும்பைச் சாறும் நல்ல சந்தனமும் நற்சீரகம், மஞ்சள், மிளகு இரண்டு குளிகையும் பசுவின் பாலில் கொடுக்கவும். வயத்துக் கடுப்புக்கு வில்வப் பத்திரிக் காயும் மாதளங்காயும் அரைத்து எருமை மோரிலே வேக வைத்து இரண்டு குளிகையும் இடவும். ஆறுக் கடுப்புக்கு அதிவிடையம், பொடி செய்து கோழி முட்டை வெள்ளைக் கருவில் ஊற்றிப் பொரிச்சுத் தின்னவும்.

வெள்ளோடைக் களிச்சலுக்கு கடுக்காய், தானிக்காய், வில்வப் பத்திரிக்காய், மாதளங்காய் மூன்று குளிகையும் அரைத்து எருமைத் தயிரிலே குழப்பித் தின்னவும். கெற்ப விப்புருதிக்கு அதிமதுரம், திப்பிலி, சித்தரத்தை கிராம்பு குளிகையுங் கூட்டித் தேங்காய்ப் பாலில் தின்னவும்.

வலி குன்மத்துக்கும், எரி குன்மத்துக்கும் பெருங்காயம், திப்பிலி, சிவனார் வேம்பு வசம்பு.ஞ குளிகையுங் கூட்டித் தேங்காய்ப் பாலிலிடவும். சன்னிக்கு நல்ல பாம்புக் கண்டம் குதிரைக் குளம்பு.உ, வெள் வெங்காயம் பலம்.க, சுக்கு பலம்.க, குளிகையரு பொடி செய்து நாயுடை வேர் நத்தைச் சூரி வேர், கருஞ் சூரி வேர், சித்திர மூலம், பேராமுட்டி, ஆமணக்கு எண்ணை, புங்கெண்ணை, புன்னை எண்ணை, நல்லெண்ணை

ஒரொன்று உழக்குக் கட்டி எருக்கில் விறகிட்டெரித்த பதத்தில் வடித்து ஒரு காசளவு
உள்ளுக் கொண்டு அலகிற மிட்டு செவியிலும் இடவும். சிரங்குக்கு வெள்ளாட்டு மூத்திரம்
பொடுதலைச் சாறு உழக்கு கொட்டைச் சாறு.தெ அரளிப் பருப்பு ஒரு பிடி, வசம்பு.உ,
குளிகை,ரு, நல்லெண்ணெயில் வேக வைத்து உள்ளுக் கொண்டு மேலும் பூசவும்.

நீரழிவுக்கு ஆவாரை.ரு பட்டை நாவிக்காய், கடுக்காய், நெல்லிப் பருப்பு,
சுக்கு, மிளகு, குளிகை.ரு கட்டிக் கொள்ளவும். ஆவாரந் தயில மிறக்கி அதிலிடவும்.
மூன்று மாறலுக்கு பாகலிலைச் சாற்றில் கொள்ளவும். நாலா மாறலுக்கு நத்தைச் சூரிச்
சாறுடன் கொள்ளவும். கால்க் குட்டத்துக்கு ஆமணக்கெண்ணெயில் பூசவும். அதின் பாலில்
பூசவும். காடியில் கொடுக்கவும். குட்டத்துக்கு உத்தம தாளிச் சாற்றில் கொள்ளவும்.
மண்டை வியாதிக்கு குப்பை மேனிச் சாற்றில் பூசவும். கபால விப்புருதிக்கு பிரண்டைப்
பழச் சாற்றில் பூசவும். ஒருத் தலை நோவுக்கு நாரத்தம் பழச் சாற்றில் காதிலிடவும்.
காது வலிக்கு சங்கிலையாவது, பழமாவது சாற்றில் அரைத்துக் காதிலிடவும். காதில்
புழுவுக்கு கீழா நெல்லிச் சாற்றிலிடவும். நாசியா விடத்துக்கு ஆட்டு நெய்யில் குழப்பி
நாக்கில் வைக்கவும். பல் வலிக்கு கருவேலம் பட்டைச் சாற்றில் அ[illegible]பத்திரப் பாலிலிடவும்.
சிரந்திக்கு சங்கம் பழச் சாற்றில் பூசவும். புண்ணுக்கு வங்காளப் பச்சையில் கல கலப்
பிறகு சேர்த்து புண்ணில் போடவும். கரப்பானுக்கு சங்கம் பழச் சாற்றிலிடவும். ஒட்டிய
புண்ணுக்கு கோதும்பை மாவிலே ரொட்டி சுட்டுத் தின்னவும். பக்க சூலைக்கு கிரும்பு
கார்போகரிசியில் கட்டி இடவும்.

விப்புருதிக்கு கோடகயிலைச் சாற்றில் இடவும். கோமியத்தில் கொள்ளவும்.
கெந்த விப்புருதிக்கு பழங் கஞ்சியில் கொள்ளவும். சேத்தும விப்புருதிக்குச் சிறு கீரைச்
சாற்றில் இடவும். வாத கரப்பானுக்கு கழுதை விட்டைச் சாற்றிலிடவும். பித்த கரப்
பானுக்கு நீர்ச் சோற்றுத் தண்ணீரிலிடவும். சேத்தும கரப்பானுக்குப் பிரண்டைப் பழ
சாற்றிலிடவும். சகல கரப்பானுக்கு எலுமிச்சம் பழச் சாற்றிலிடவும். சருவ சிலந்திக்கு
ஆடா தோடைச் சாற்றிலிடவும். வயற்று வலிக்கு வெந்தியம் வார்த்து இள வென்னீரிலிட
வும். கிருமிக்கு எருமை வெண்ணெயிலிடவும். ரெத்தக் கிராணிக்கு சீரகத்திலிடவும். வாய்வு
கிராணிக்கு பாவட்டை இலைச் சாற்றிலிடவும். ஒரு கிராணிக்கு எருமைத் தயிரிலிடவும். விரே
சனத்துக்கு மிளகு வறுத்து இள வென்னீரிலிடவும். வலி குன்மத்துக்கு முருங்கைப் பட்டைச்
சாற்றிலிடவும். உமி கருக்கின தண்ணீரில் போட்டுத் தெளிய வைத்திடவும். குளிர் குன்மத்
துக்கு நாய் வேளைச் சாற்றிலிடவும். கவுசைக்கு நொச்சிச் சாற்றிலிடவும். வயற்று
வலிக்கு மாவிலிங்கம் பட்டைச் சாற்றிலிடவும். மேல் வயத்துக்கு கவுசைக்கு நகரை விரை
யிலிடவும். கீழ்க் கவுசைக்கு தக்கரு*விரை மஞ்சள் சாற்றிலிடவும். ரத்த பித்தத்துக்குப்
சேத்தும பித்தத்துக்கும் அடரிசிலைச் சாற்றிலிடவும். கண்ணுப் புருவுக்கு வேப்பங் காயி
லிடவும். எள்ளிலைச் சாற்றிலிடவும். இரண சக்கிரத்துக்கு உளம்புச் சாற்றிலிடவும் ரத்த
படலத்துக்கு வேப்பம் பட்டைச் சாற்றிலிடவும் கண்ணிப் பூவுக்கு முருக்கிலைச் சாற்றிலிடவு
பூப் படலத்துக்கு வெள்ளாட்டுப் பாலில் இடவும். சமுத்திராப் பழமும் குளிகையும்
உரைத்திடவும். நீர்ப் பாச்சலுக்கு சிறு நீரில் உரைத்திடவும். மாலைக் கண்ணுக்கு
நொச்சிச் சாற்றிலிடவும். காத்த காக்கணம் பூச் சாற்றிலிடவும். பித்த காசத்துக்கு
மணத்தக்காளிச் சாற்றிலிடவும். காசத்துக்கு வெள்ளைக் காக்கணம் பூச் சாற்றிலிடவு

படலத்துக்கு ஊசி மல்லிகைச் சாற்றிலிடவும். சுத்தக் குலைவுக்கு சிறு புள்ளடிச்
சாற்றிலிடவும்.கல்லுறு நோவுக்கு சாறணைச் சாற்றிலிடவும். ஆகார சீரணத்துக்கு சந்து
நீரிலிடவும். வாதத்துக்கு முடக் கொத்தான் சாற்றிலிடவும். தனுக்கு வாதத்துக்கு
குமரியிலைச் சாற்றிலிடவும். திமிர் வாதத்துக்கு நொச்சியிலைச் சாற்றிலிடவும். அற்பு
வாதத்துக்கும் கடுப்புக்கும் வசம்பு பெருங்காயம் வேப்பெண்ணெயில் வைத்து இடவும்.
ஊது வாதத்துக்கு பழங் கஞ்சியிலிடவும். சூளி கட்டின வாதத்துக்கு கொன்றைப் பழச்
சாற்றிலிடவும். மெதடி வாதத்துக்கு மூலைப் பாலிலிடவும். மேக இளைப்புக்கு சர்க்
கரையிலிடவும். நெல்லிப் பருப்பரைத்து இள வென்னீரிலிடவும். பல்லடி வாதத்துக்கு தண்
ணீரிலிடவும். அடி வாதத்துக்கு எலுமிச்சம் பழச் சாற்றிலிடவும். களல் வாதத்துக்கு ஆட

இலை களச்சிக்காய்ப் பருப்பு கசாயத்திலிடவும். விசி வாதத்துக்கு உவர் மண் காய்ச்சி அந்த நீரிலிடவும்.

சந்து விப்புருதிக்கு (பிறழுவக்கு) பாலிடவும். நண்டு பிளவைக்குப் பொன்னாங் காணிச் சாத்திலிடவும். கைய மசக்கு பிளவைக்கு ஊமத்தையிலைச் சாத்தில் பூசவும். உச்சிப் பிளவைக்கு பசுவின் பாலில் பூசவும். சன்னிக்கு சுட்டை வேர் பசுவின் பாலும் சர்க்கரையுங் கூட்டி இடவும். ஊமையிலைச் சாத்திலிடவும். சேத்தும சன்னிக்குப் பூசனிக் காய் சாத்திலிடவும். சில முட்டையிலிடவும். அசந்த சன்னிக்கு வேப்பம் பட்டைச் சாத்திலிடவும். விடந்தத்துக்கு வெத்திலைச் சாத்திலிடவும். பாகலிலைச் சாத்தில் கொடுக்கவும். கழும்பை இலையும் எருக்கம் பாலும் குளிகையும் அரைத்துக் குடித்த கடி வாயில் பூசவும். முவிலை மிள்ளிச் சாத்திலிடவும். விரியனுக்கு களச்சிப் பாலில் இடவும். பளைசக்குமைத்தை யிலைச் சாத்திலிடவும். பெரு விரயக்கு செருப்படி சாத்திலிடவும். தேள் கடிக்கு எலுமிச்சம் பழச் சாத்திலிடவும். செய்யான் கடிக்கு அரம்பட்டைச் சாத்திலிடவும். ஞெஞ்சிலி கடிக்கு பெருங்காயத்திலிடவும். ஆனைலிக்கு பேய்க் குமட்டிச் சாத்திலிடவும். பெருச்சாளி கடிக்கு குப்பை மேனிச் சாத்திலிடவும். காலிங்கி வெடித்தால், முசல் புழுக்கையிலரைத்துப் பூசவும். தலையில் புழு வெட்டுக்கு அரளிப் பாலில் பூசவும். பில்லி சூனியத்துக்கு புளியங் கொட்டைத் தோலின் பொடி செய்து சிறுநீரில் போட்டு குளிகையில் கொடுக்கவும். குக்கில் நெய்

<u>குக்கில் நெய் பண்ணும் விவரம்</u>:-

சார்த்த மாவிலிங்க விபரீதிர சிந்தில் நண்டு சிறுவழுதிலை, புங்கம் வேர் புன் முருங்கை கருங்காலி, சங்கு சாறணை சங்கன் குப்பி, கூவளை, நொச்சி குமிழா தண்டை, மேவிய நெருஞ்சி வேர், வேம்பு கிளாப் பெருங் குமிழ வேர், பெரிய வாகை தாமரை வளையம், கொட்டி வாழைக் குறிஞ்சி கொடி வேலி வேர், நிலஞ் சோதி நீடிருவேலி, பேய் மல்லிகை, பெய்ப் பீடல், சீருலாவிய சிறுதையால் தேக்கு நாக நந்தி சேடன் கத்திரி பெரு மருந்தடவே பெருஞ் சூரி வேர் ஒவ்வொரு வகை வேர் ஒன்று நாத்பலம், சிற கத்தரிந்து சிக்கவம் இடித்து மூந்தி தடலில் முக நிறுல நந்திய கசாயம் நன்குய்க் காய்ச்சி சேர்ந்த கசாயத்தில் சேத்தும மருந்து பாத்தி வெள் ளாட்டுப் பால் அளி கட்டி குக்கில் குறக்கென்ப நீடிய பசுவின் நெய்யில் குளி பாலின் சுத்தி பண்ணி கட்டி சிலமாகியம தேவதாரமும் செவியம், திப்பிலி, சீரகம், வசம்பு, சிறுமூலம், மரமஞ்சி, அரத்தை, கல்லுப்பு, எத்திய கோஷ்டம், மூமக புழு சாத்திர வேதி, சதகுப்பை, எத்து வாருட்டி ஏழு நாள் மூன்று சீசீ நாள் காய்ச்சி பரிவில் பாக்க பதத்தில் வடியே.

உள்ளுக்கு திம்ச நால விராகனிட்ட நெய்க் கொள்ளவும். ஈளை, கப வாதத்துக்கு இறகிய பதம பதத்துக்கு மெழுகு பதம் சேத்துமத்துக்கு உகராபகம் அறியவும். இதுக்கு தீரும் வியாதி ஈளை, காடலாரதம், எழுந்திய விப்புருதி பரு விரை பாண்டு ரோகம், கண்டமாலை, கவுசை, கிருமி, மண்டு கடவ பிளவை மண மருந்தீடு. அன்ன விடம் காதில் விரணம் பக்கம் கருதோள் மூலம் பாளிய மூக்கு நீர்ப் பாச்சல், குருதிக் கட்டிய சுவாத காசம், கிட்டிய கிரந்தி பவுத்திரம் இது வெல் லாந் தீரும். காச சுவாச மயகரம சுத்தி எரிகால் சிடுல கூடா களாயிருக்கிர சத்த்தி சோபம் மூலரோகம் பாண்டு பிளவை பகந்தர மலிகை மேகரோகங்கள் இது முதலாயுள்ள வாய்வு வியாதிகளுக்கும் சமஉந்டம லேகியம்.

அதெப்படி யென்றால்

சாறடையாகிலி புங்க முருங்கை நாய் வேளை புடலும் பொன்னாங்காணி வேலிப் பருத்தி கருவேப்பிலை கடுக்காய் கார்போகரிசி, நெருஞ்சி குறிஞ்சி, வாடம குறிஞ்சி, கண்டங்கத்திரி, சிறுவழுதலை, சாறடை மோரைச் சாறடை வல்லாரை வெள் ளறுகு சங்கங்குப்பிச் சாறு வெள்ளறுகு கலமதம் குப்பை மேனி கிழ கிழப்பை பொடி தழை கீழா நெல்லி ரசம் மருதோன்றி கொட்டான் எரந்தை அமுக்கிலாக் கொடி

வேர் முள் ளங்கி வலிச் செவி குறிஞ்சி தொட்டி பேராமட்டி பெருவழுதிலை தகரையிலை, துளசியிலை, தேள் கொடுக்கு, வெற்றிலைக் கொடி நீர் கும்பு நீரில் கிழங்கு, திராய் பிராய் குட்டித் தக்காளி கஞ்சாங் கோரை கொன்றை இந்த மருந்துகளுடைய பச்சிலைச் சாறு ஒரொன்று உழ, கரு இதுக்கு மேல் மருந்து சுக்கு, மிளகு, திப்பிலி திப்பிலி மூலம், செவியம், சித்திர மூலம், வெப்பாலை அரிசி, பெருங்காயம், பங்கம் பாளை, சிவசம்பு, கடுகுரோகணி, கற்கடக சிந்தி, சிறுதேக்கு, கடுக்காய், தானிக்காய், நன்னாரி பெரு நன்னாரி சாறட்டை தேவதாரம், மூத்தக் காசு, நதிமதுரம், மெதை மகா மெதை சீவகம் வேகம் மகா கோளி சர்ரகா கோளி சிறுவிடு கொள் பெரு விடு கொளுந்திரிகை பழம், மஞ்சிட்டி மஞ்சி சந்தனம் இள உப்பு, அகிலகடுகு அதிவிடையம், பெருங்குரும்பை, கமூல் ஆவரை, சௌசி விரை சீமா நெல்லி, கெந்தகம், அரிதாரம், கார்போகரிசி, மஞ்சிலை, அரிஞ்சிக் கொட்டை, ஊசிக் காந்தக் கல்லு குட்டம் இருப்பு கிட்டம் அரப்பொடி நாய்வேளை, அமுக்கிரு வேர், சதகுப்பை கொத்தமல்லிகை, கடப்பம் வேர் இதுவெல்லாம் ஒரொன்று முக்கழஞ்சு இதை அ ரத்த கலக்கம் நூற்றிருபது பலம் சர்க்கரையும், நாலி நெய்யும், நாளி எள்ளெணையும், விட்டு லேகியம் பதத்திலே காய்ச்சி இதுக்கு மேல் பொடி மருந்து சாதிக்காய், கார் கோலம் ஏலம், லவங்கப் பச்சிலை, நாகப்பு, சீரகம், இது வெல்லாம் ஒவ்வொன்று முக்களஞ்சு, திப்பிலி பலம்.க, சுக்கு, கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், விளாவரிசி, இது ஐந்து மருந்தும் தனித் தனியே வகை ஒன்றுக்கு நாலு பலம் இதை நன்றும் பொடி செய்து இரு நாளி மிளகு பொடிச்சுப் போட்டு லேகியம் பதத்திலே இறக்கி தண்ணீரிலே போட்டால் அமுங்கும். அந்தச் சமயம் பார்த்து இறக்கி வெண்ணி தெளிக்க குழம்பு ஆறவிட்டு நாளி தேனும் விட்டு விடியக் காலமும் அந்தி நேரமும் முக்களஞ்சு செவிக்கவும். பிறகு எழு மிளகு செவிக்கவும்.

<u>அமுர்த சிந்தாதிக் குளிகை செய்கின்ற விபரம்</u>:- 27.7.63.

இரசம், நாவி, வெங்காரம், கெந்தகம், தான்றிக்காய், கடுக்காய், நெல்லிப் பருப்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, அரிதாரம், அதிவிடையம், வாய் விளங்கம், கற்பூரஞ் சுக்கு, சீரகம், கஸ்தூரி மஞ்சள், பெருமரத்துப் பட்டை, இலவங்கப் பட்டை, முருங்கைப் பிசின், மூத்தக் காசு, கண்டங்கத்திரி, வேர், கொடி வேலி வேர்ப் பட்டை, நற்சந்தனம், ஆக மருந்து உயச.ம் உயச பலம் சுத்தியான நேர்வாளம் உய பலம், பச்சை நாவி சுத்தியானது பலம்.க, நாவியைச் சிறுக நறுக்கி சீலையில் முடிந்து கோமியத்தில்.யச எரு முட்டையில் புடமிட்டு நாவியைக் கட்டு எடுத்து பச்சரிசி மாவிலே கலந்து ஆறுத முன்னே அப்பிரமாணம் பஞ்சி மாவைத் தள்ளிப் போட்டு நாவியை எடுத்துக் கொள்ளவும்.

<u>அரிதாரம் புரோசம் பட்டைச் சாற்றிலே அரைத்து மருந்தெல்லாம் ஒன்றாக அரைக்கிற விபரம்</u>:-

கையாந்தகரைச் சாற்றில்.அ நாள் விடியுமாறும் அந்தி மாறும். ஒவ்வொரு சாமம் அரைத்து அமாவாசை நாள் உருந்த பிரமாணம் குளிகை பஞ்சி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு அதுக்கு அநுமான விபரம்.

சீத சுரத்துக்கு நெல்லி பருப்புக் கசாயத்திலிடவும். தாப சுரத்துக்கு நெல்லிக்காய்ச் சாற்றிலிடவும். முருங்கைக் காய்ச் சாற்றிலிடவும். சுறல சுரத்துக்கு சர்க்கரையும். சீரகமும் கூட்டி இடவும். நாலாவ மாறலுக்கு எலுமிச்சம் பழச் சாற்றிலிடவும். நித்திய சிறுநீக்கு எருமைத் தயிரிலிடவும். அதிசாரக் கிராணிக்கு கஞ்சாப் பொடியிலிடவும். வாய்வுக்கு காடியில் கோமியத்தில் புளியிலைச் சாற்றிலே இடவும். சருவாங்கி வாயுவுக்கு கையாந்தகரைச் சாற்றிலிடவும். வயற்று வலிக்கு பசுவின் பாலிலிடவும். கண்ட மாலைக்கு கையாந்தகரைச் சாற்றிலிடவும். கடுசாரிக்கு கோமூத்திரத்திலிடவும். பச்சை நாவி தின்றவர்க்கு கமுநீரிலே இடவும். சுற்ப விஷத்துக்கு எலுமிச்சம் பழச் சாற்றிலே அஞ்சனமிடவும். அரசம் பட்டைச் சாற்றில் கொடுக்கவும்.

நீருள்ளிச் சாற்றில் கொடுக்கவும். சறவ விஷந்தத்துக்கு பிரண்டைச் சாற்றிலிடவும். தேள் கடிக்கு இஞ்சிச் சாற்றிலிடவும். அஞ்சன மிடவும். விரோசனத்துக்கு ஆமணக் கெண்ணெயில் வெந்நீரிலிடவும். வாந்திக்கு தாம்பிரத்திலிடவும். பாகல் விரையிலிடவும். திரி தோஷந்திர திரிகடுகில் கொடுக்கவும். சுக்கிலப் பிரமியத்துக்கு புளியம் வுரைத் தோலிலிடவும். ரெத்தப் பிரமியத்துக்கு ஆட்டுப் பாலில் இடவும். வதப் பிரமியத்துக்கு எருக்கம் பூவில் அரைத்திடவும். பல்லுச் சூலைக்கு ஆலம் பாலில் அஜரத்துப் பூசவும். கெண்டைக்கு வெங்காரம் பொரிச்சிடவும். மகோதரத்துக்கு வெள்ளாட்டுப் பாலிலி டவும். மந்தார காசத்துக்கு முள்ளி விரைப் பொடியும், வெங்காரமுங் கூட்டி இடவும். சுவாச காசத்துக்கு திரிகடுகிலிடவும். உடல் வாதத்துக்கு சீரகங் கூட்டி கையாந்த கரை ஆடாதோடைச் சாற்றிலிடவும். உதிரத்துக்கு ஆட்டுப் பாலில் குழப்பி சந்தனத் தில் கூட்டி இடவும். எலும்புருக்கி நோவுக்கு செம்மறி ஆட்டுப் பாலில் இடவும். மேல் வாய்வுக்கு நெய்யிலிடவும். குட்டத்துக்கு வெல்லத்திலிடவும். முகப் பிரி வியா திக்குப் பாக்குடன் தின்னவும். பித்தத்துக்கு கையாந்தகரைச் சாற்றிலிடவும். பேய்க்கு எலுமிச்சம் பழச் சாற்றில் அஞ்சனமிடவும். நீர்ப் பாட்டுக்கு தகரைச் சாற்றி லிடவும். மேகமழைக்கு கடுக்காய், நெல்லிக்காய், சுக்கு கசாயத்திலிடவும். தலை வலிக்கு எலுமிச்சம் பழச் சாற்றில் பூசவும். முருங்கைப் பட்டைச் சாறும் நெய்யும் கூட்டி நெய்யும் கூட்டிக் கொள்ளவும். வலம் சலம் கட்டுக்கு மோரிலிடவும். காமா லைக்குப் பேரைச் சுரைக்காய்த் தோடு பொடி செய்து குளிகை கூட்டி வெந்நீரில் கொள்ளவும். சீரகம் பருக்க கையாந்தகரைச் சாற்றிலிடவும். பாண்டு ரோகத்துக்கு செருப்படிச் சாற்றிலிடவும். மூல வியாதிக்கு மணத்தக்காளிச் சாற்றில் உய நாள் கொள்ளவும். பத்தியம் பால், நெய், கடலை, க் கிழங்குங் கூட்டிவும். உள் மாந் தைக்கு கருவேலிலை கோயியத்திலரைத்து உருண்டை செய்து கொள்ளவும். வயத்துக் கடுப்புக்கு நாயுருவி விரையும் பாகலிலையும் கூட்டிக் கொள்ளவும். சற்றவும் உண்டாக தாளை வேர், சந்தனத்திலிடவும். புள் புழு சாக முருங்கைப் பட்டைச் சாற்றிலிடவும். காது செவிட்டுக்கு வெல்லத்தில் கொள்ளவும். மதப் பிரமியத்துக்கு வெள்ளாட்டுப் பாலி லிடவும். இந்த மருந்து மீறி விக்கிரல் பழம் பாசிச் சாற்றிலிடப் பச்சரிசிக் கழுநீரில் கொள்ளவும்.

<u>சுரத்துக்கு குளிகை</u>:-

முந்திரிகைப் பழம், அதிமதுரம், இலுப்பைப் பூ, திப்பிலி, பேரிச்சம் பழம், சந்தனம், நன்னாரிக் கிழங்கு வெட்டி வேர், கோரைக் கிழங்கு, விலாமிச்சம் வேர், கோஷ்டம், தாமரை வளையம், கோரோசிலை, உத்திராக்ஷம், சாதி லிங்கம், பச்சைக் கற்பூரம் இதுகள் வகைக்கு வகை விராகனிடை.உ இதுக்கெல்லாம் சரியாகச் சாத்திர பேதிக்கிலும் எல்லாம் நிறுத்துக் கூட்டி கருப்பஞ் சாறு விட்டு மூன்று நாளரைத்து இலந்தைப் பழம் பிரமாணம் குளிகை பண்ணி வைத்துக் கொண்டு காசசுரத்துக்கு முலைப் பாலிலே கொடுக்கவும். எரிச்சலும் உடம்பு எரிச்சலும் தண்ணீர்த் தாகமும் வாந்தியும், நாக்கு உலத்தியும் இருக்கிறது காச்சலுக்கு இளநீரிலே நான் கொ கொடுக்கவும். கருப்பஞ் சாற்றிலேதான் கொடுக்கவும். தன்னுடைய நவிலங்கம் சாறு படி.ச சலம் போலே பெதத்துகிற காச்சலுக்கு முட்டுத்துக்கு பறப்பைக் கிழங்கு சாற்றில் கொடுக்கவும். விக்கலுக்குத் தேனில்கொடுக்கவும். இருமலுக்கு ஆடாதோடை பிட்டுக் கட்டி அந்தச் சாற்றிலே கொடுக்கவும். வயத்துக் கனிச்சலுக்கு மாதளங் காயோடே கொடுக்கவும். சடங்கம் கசாயத்துக்கு கோரைக் கிழங்கு, சந்தனம், வெட்டி வேர், சுக்கு விலாமிச்சம் வேர், பற்படாகம் இதுகள் வகை ஒன்றுக்கு விராகனிடை.ச எல்லாம் நிறுத்து இடித்துக் கொண்டு இரண்டு படி தண்ணீர் விட்டுக் கால் படியாகக் காய்ச்சி இரண்டு நேரமும் கொடுக்கவும்.

விடாத சுரமாக அடிக்கிற காச்சலுக்கு கொடுத்தால் நிற்கும்.

இருமலும், இளைப்பும், மூச்சு வாங்கிறதுக்கு_சன்னி_சுரத்துக்கு கசாயம்:-

வில்வ வேர், சீந்தி தண்டு, முள்ளி வேர், கண்டங்கத்திரி வேர், நெருஞ்சி வேர், முன்னை வேர், கோரைக் கிழங்கு, ஆடாதோடை இலை, சிறுகாஞ்சொறி வேர், சுக்கு இது ஒவ்வொன்று விராகனிடை நிறுத்து இடித்து.ச படி தண்ணீர் விட்டு அரைப்படியாக காய்ச்சி வடித்துக் கொண்டு திப்பிலிப் பொடியுந் தேனுங் கூட்டி இரண்டு நேரமும் விடாமல் நாலஞ்சு நாள் கொடுக்கவும்.

வேறு:-

உடம்பு வலியும், வயத்துக் கடுப்பும் பொருமலும் மேலிளைப்பும், வாறு களியாமலும், இருக்கிற சுரத்துக்கு மருந்து:-

கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், மூக்கரட்டை, வேர், சீந்திக் கொடி சுக்கு, கோரைக் கிழங்கு, மலைதாங்கி வேர், ஆமணக்கு வேர் இது ஒவ்வொன்று விராகனிடை.எ நாலு படி தண்ணீர் விட்டு அரைப்படியாக காய்ச்சி கடுகுரோகணி அரைத்துக் கரைத்துக் கொடுக்கவும்.

(வேறு)

குளிரும் காச்சலும் நடுக்கமும் தண்ணீர் தவனமும் நிதவில்லாமலும் சுவாசம் வாங்கிறதும் ஆக இருந்தால் துளசி வேர், மலைதாங்கி வேர், பேராமுட்டி வேர், விடத்தேறு தாந்தி, பீமரத்துப் பட்டை, நாத்தை இலை, நொச்சியிலை, ஆவிலை பழுப்பு கோரைக் கிழங்கு இவ்வகை ஒவ்வொன்று விராகனிடை.க, நன்னாரி இடித்து நாலு படி தண்ணீர் விட்டு அரைப் படியாகக் காய்ச்சி சீரகம் பொடி பண்ணிப் போட்டுக் கொடுக்கவும். காச்சல் விடும்.

சுக்கு, மிளகு, திப்பிலி, வெள்ளுள்ளி, சீரகம் ஒட்டரைப் பொடி இது வகை ஒன்றுக்கு விராகனிடை.ரு எல்லாம் நிறுத்துக்கூட்டி அரைத்து காலமே நாலஞ்சு நாள் கொடுக்கவும். குளிர் காச்சலுக்கு ஒன்றை விட்டு ஒரு நாள் வருகிறதுக்கு விடு. மிளகுப் பொடியும், பசுவின் தயிரையும் கூட்டி கொடுக்கவும். குளிருங் காச்சலும் விடும். முன்னே சொன்ன சுரக் குளிகை:- இந்தக் கசாயங்களிலே ஒவ்வொன்று கரைத்துக் கொடுக்கவும்.

தோஷத்துக்கும், சுரத்துக்கு_குளிகை:-

அக்கிரகாரம் விராகனிடை.உ, அதிமதுரம் விராகனிடை.க, திப்பிலி விராகனிடை.க, லவங்கப் பட்டை விராகனிடை.க, சாதிக்காய் விராகனிடை.க, தாளிச பத்திரி விராகனிடை.க, சுரசீர விராகனிடை.வ, ஏலம் விராகனிடை.வ, நேர்வாளம் விராகனிடை.வ இது வெல்லாம் சுரத்தலை வெதுப்பிச் சாறு விட்டு அரைத்து பாவட்டங்காயளவு குளிகை பண்ணி எந்தத் தோஷத்துக்கும் சுரத்துக்கும் சாற்றிலாவது முலைப் பாலிலாவது துளசிச் சாற்றிலாவது குளிகை கொடுக்கவும். வெந்நீருஞ் சோறும் உண்ணவும் தோஷந் தீரும்.

அந்தி_புபதிக்_குளிகை:-

இரதம் விராகனிடை.க, பொன்னரிதாரம் விராகனிடை.ச, மனோசிலை விராகனிடை.ச, மனோசிலை விராகனிடை.க, நாவி விராகனிடை.க, கெந்தகம் விராகனிடை.க, நேர்வாளம் விராகனிடை.க, இந்துப்பு விராகனிடை.க, நொச்சி விராகனிடை.க, பெருங்காரம் விராகனிடை.க, சங்கம் வேர் விராகனிடை.க, கொடிவேலி விராகனிடை.க, கோரைக் கிழங்கு விராகனிடை.க, வேப்பம் விரை விராகனிடை.க, புத்திர சீவிப் பருப்பு விராகனிடை.க, மஞ்சள் விராகனிடை.க, சாதேவி விராகனிடை.க, வசம்பு விராகனிடை.க, குன்றி மணி வேர் விராகனிடை.க, திப்பிலி விராகனிடை.க, ஆக இதுவெல்லாம் ஒவ்வொன்று சரியாக நிறுத்துக் கொண்டு இதவும் மஞ்சளில் மத்திக்கச் சுத்தியாம். நாவி ஆட்டுக் கோமியத்தில் மூன்று நாள் ஊறப் போடச் சுத்தியாம். நேர்வாளம் எருமைச் சாணியில் வேகப் போடச் சுத்தியாம். இந்த மருந்தெல் வெள்ளாட்டுக் கோமியத்தில் இரண்டாம் ஜாமம் மட்டு மரைத்து கடலை மாதிரி குளிகை பண்ணி நிழலுலத்தி வைத்துக் கொண்டு இந்தக் குளிகை கொடுக்கிற அநுபானம் சீரகம்

சர்க்கரை போட்டுக் கொடுக்க அக்கினி தாப சுரத்துக்கும் சுக்கு, மிளகு, உள்ளி நொச்சிச் சாற்றில் கொள்ள சீத சுரந் தீரும். அதிசார சுரத்துக்கு லவங்கப் பிசின் சுக்கு ஒரு குளிகை கூட்டித் தயிரில் கொள்ள அதிசார சுரந் தீரும். உஷ்ண தோஷத் துக்கு தீராத தோஷத்துக்கு வில்வப் பழத்துள் அதிமதுரம் ருத்திராட்சம் நல்ல சந்த னம், இலை அவரைப் பருப்பு மாதிரி ஒவ்வொன்று அரைத்து குளிகையு முலைப் பாலில் உரைத்து நாக்கில் தேய்த்து முலைப் பாலில் உள்ளுக்கு கொடுக்க எந்த் தோஷமுந் தீரும். இந்தப் படி மூன்று நாள் கொள்ளவும். தண்ணீர்த் தாகமெல்லாந் தீர்ந்தால் பேசாமல் சாம்பல் பூசணித் தளைச் சாறும் அதிமதுரம் உத்திராட்சம் குளிகையும் உரைத் துக் கொடுக்கவும். சன்னி தோஷம் போம். பத்தியம் வெந்நீருஞ் சோறும். புளி தவிர்க்கவும்.

அவரையிலைச் சாறு புளிச்ச மோருடன் கொள்ளப் பாண்டு ரோகம், காமாலை தீரும். சுக்கு, மிளகு, ஓமம், திப்பிலி அரைத்து குளிகை கூட்டி வெந்நீரில் கொள்ள பதின்மூன்று வகை காமாலை சன்னி வாதம், போம். உள்ளி, மிளகு, கழல் பருப்பு, நொச்சி வேர், சாறணை வேர், கொடிவேலி வேர் குறண்டு பச்சிலைக் குளிகையுங் கூட்டி விளக்கெண்ணெயில் கொள்ளவும். குன்மம் ஆட்டுக் கருசை வாய்வு குன்மம், வாந்தி பிராந்தி, அசீரணம் இவையெல்லாம் சாம்பல் பூசணி சாற்றில் கை பேரமுகி, அதி மதுரம் இவை கூட்டி குளிகையுங் கூட்டி நாக்கில் தடவ் தோஷ ரோகம், சிரமாலை போம். இந்தக் குளிகையை நெருஞ்சி வேர், வெள்ளை புன்குக்கு வேர், தேத்தான் கொட்டை சிறுகீரை வேர் அரைத்து தேனிலுரைத்துக் கொள்ள பிரமிய மூத்தார் கூலை உதிர மூத்திரம் இவை யெல்லாந் தீரும். இந்தக் குளிகை அவரை சமூலங் கொண்டு வந்து சர்க்கரை கூட்டிக் கொள்ள வெளுமூத்திரம் போம். இந்தக் குளிகை குடச்சிகைப் பட்டை, வாகைப் பிசின், ஓமம், சுக்கு, விளாம்பிசின் இவை அரைத்து தேனில் கொள்ளக் கிராணி போம். இந்தக் குளிகை அலிஞ்சி வேர் காடியிலரைத்து தலைக்குந் தேய்த்து உடம்பெல்லாந் தளைவிடச் சவுலாங்கி சூலை போம்.

இந்தக் குளிகை, சுக்கு, மிளகு, திப்பிலி அரைத்து பொடி செய்து வெந்நீரில் கொள்ள சேத்தும சுர போம். இப்படி மூன்று நாள் கொள்ளவும். இதுக்குப் பத்தியம் பயறு, அவரை, கொள்ளு இலை ஒரு படி வேகப் போட்டு இந்தத் தண்ணீரில் கொள்ள அசீரணம் தீரும். இந்தக் குளிகையை நல்லெண்ணெயிலரைத்திட கன்ன ரோகம் போம். இந்தக் குளிகையை கோமியத்தில் நசியம் பண்ண சுரம் போம். இந்த குளிகையைச் சிறந்த கற்பூரம் தேனில் கொள்ள மூல நோக்காடு போம். பெரும்பாடு, செம்பசலை தீரும்.

இந்தக் குளிகையை உத்தாமணி யிலைச் சாறு வசம்பு பாகஞ் சிறந்து, எலுமிச்சம் பழச் சாற்றில் பூச விஷ தோஷம், சந்த கண்டமாலை போம். இந்த குளிகையை கருங் ரோகணி வாய் விளங்கம், சிறுகாஞ்சொறி வேர் இவையெல்லாம் அரைத்து நல்லெண்ணெயில் எரித்து தலைக்கு தேய்ச்சு முழுகவும். மண்டை வியாதி தீரும். இந்தக் குளிகையை இலுப்பைக் கொட்டை சமுத்திராப் பழம், எலுமிச்சம் பழச் சாற்றில் நசியம் பண்ண ஒருத் தலை நோவு தீரும்.

சந்திர பூபதி முற்றும்.

<u>சூரிய பூபதிக் குளிகை:-</u>

இரசம் விராகனிடை.கு, கெந்தகம் விராகனிடை.கு, நாவி விராகனிடை.கு, கொடிவேலி விராகனிடை.கு, சாதிப் பத்திரி விராகனிடை.கு, வாய்விளங்கம் விரா கனிடை.கு, திப்பிலி மூலம் விராகனிடை.கு, கோரைக் கிழங்கு விராகனிடை.கு, ஏலம் விராகனிடை.கு, சிறுநாகப்ப விராகனிடை.கு, கடுக்காய் விராகனிடை.கு, தாவிக் காய் விராகனிடை.கு, நெல்லிக்காய் வற்றல் விராகனிடை.கு, சுக்கு விராகனிடை.கு, அதிமதுரம் விராகனிடை.கு, தாம்பிர செந்தூரம் விராகனிடை.கு, லோக செந்தூரம் விராகனிடை.கு இந்த மருந்தெல்லாம் நிறுத்துக் கொண்டு இந்த மருந்துக்கு சமனம் நல்ல மண கட்டி வெல்லப் பாகிலே அரைத்து கடலைப் பிரமாணம் குளிகை பண்ணி

திருவலத்தி வைத்துக் கொண்டு இந்தக் குளிகையை வெந்நீரில் கொடுக்கவும். இதுக்குத் தீரும் வியாதி சுவாச காசம், செவி வியாதி, குன்மம் மேகம், விசுவ சுரம், சங்கிர குளிகை, பாண்டுரோகம், மூத்திரக் கிரிச்சி, அபல சன்னி, காய சுரம், விடாசுடி இவையெல்லாந் தீரும். பச்சை.*நாவி* இரதம் மஞ்சளில் மத்திக்கச் சுத்தியாம்.

பச்சை நாவி, கடலை போலே நறுக்கி மிளகு அரைத்து மூன்று நாள் ஊறப் போட சுத்தியாம். பத்தியம் புடலங்காய், சிறுகீரை, கோதும்பை, ராவானவ் பசுவின் பால், மேல்ப் படி நெய், துவரைப் பருப்பு, உப்புக் கட்டிக் கொள்ளவும். மிளகு வெள் வெங்காயம் கட்டிக் கொள்ளவும். தாகமாகில் சமித்திர உபசாரம் பண்ணவும். அவ்வை வாழைப் பழம் தின்னவும். பச்சைப் பயறு நனைச்சு தின்னவும். பச்சைக் கடலை தின்னவும். நாலு நாளைக்கொருக்கால் நல்லெண்ணை வார்த்துத் தலை முழுகவும்.

எட்டு வகைக் குன்மத்துக்கு மருந்து :-

அவச்சாரம், சவுக்காரம், பெருங்காயம், நவ்சாரம், இந்துப்பு, கல்லுப்பு, காசந்தலவணம், விடலவணம், வாய்விளங்கம், மலை மஞ்சள், புரச் சுண்ணம்பு பொடி, அரப்பொடி கொடிவேலி வேர், புங்கம் வேர், நொச்சி வேர், பெருங்கிழங்கும், அதின் தழையும், இஞ்சிச் சாறு, வெற்றிலைச் சாறு, இது விட்டரைத்து சதிரக் கள்ளியிலே பிட்டிட்டு வெள் வெங்காயம் தயிலமும் பசுவின் வெல்லமும் சித்தாமணக்கு எண்ணையும் கலந்து இருபது நாள் கொள்ளவும் தீரும். பத்தியம் பசுவின் பால், நெய் துவரைப் பருப்புக் கட்டி--------------------

பீனிசத்துக்கு கபால வாய்வுக்குந் தயிலம் :-

நாவி விராகனிடை.க, சாதிக்காய் விராகனிடை.க, வெப்பாலை அரிசி விராகனிடை.உ, கஸ்தூரி மஞ்சள் பலம்.க, காட்டு சீயக்காய் விராகனிடை.ங, வாலுளுவை அரிசி விராகனிடை.ங இலவம் பட்டை விராகனிடை.ங, தேவதாரம் விராகனிடை.உ, மிளகு விராகனிடை.ங சுக்கு விராகனிடை.ரு, செம்பகப்பூ விராகனிடை.உ, சிறுநாகப்பூ விராகனிடை.ங, கோட்டம் விராகனிடை.ங, சமுத்திராப் பழம் விராகனிடை.ங, சமுத்திராப் பச்சை விராகனிடை.ரு, பூவரச மரத்துப் பட்டை பலம்.க, கடுகுரோகணிடை விராகனிடை.ங, அகில் கட்டை விராகனிடை.ங, ஏலம் விராகனிடை.உ, நல்லெண்ணை.உ,
இந்த மருந்து சேர இடித்து பிரித்து வாவையத் தெளிவிறுத்து பொருட்டுந் பிரட்டுக்காய்ச்சி கட்டி, சட்டி எண்ணை விட்டு இந்த மருந்து பொட்டணங்களைப் போட்டுச் சாரம் எண்ணையிலே இறங்கக் காய்ச்சி எண்ணையைத் தண்ணீரில் வடிகட்டி எண்ணை மாற்று உருண்டைப் போலே நின்றுள் பதமென்று இறக்கி வைத்துக் கொண்டு பொட்டணங்களை எடுத்து வேறே வைக்கவும். ஒன்றை விட்டொரு நாள் நாலு முழுக்கு முழுகிப் பிறகு எட்டு நாளைக்கு இரண்டு முழுக்கு முழுகவும். பீனிசக் கபால வாய்வு நில்லாமல் ஓடிப் போம். இந்த தயிலம் அகஸ்தி தேவரையர் நிர்மிக்கப்பட்டது. சுத்தம்.

குன்மக் குடோரி:-

சுக்கு, மிளகு, திப்பிலி, வெள் வெங்காயம், சேரமந்தப் பெருங்காயம், கடுகு ஓமம், இது வெல்லாம் விராகனிடை.உ, சீரகம் விராகனிடை.வ, வெந்தயம் விராகனிடை வசம்பு விராகனிடை.வ, வாய் விளங்கம் விராகனிடை.வ, கொத்தமல்லி விராகனிடை.வ சாதிக்காய் விராகனிடை.க, சாதிப் பத்திரி விராகனிடை.க, இந்துப்பு விராகனிடை.க, வளையலுப்பு விராகனிடை.க, ஜவட்சாரம் விராகனிடை.க, சயிந்தலவணம் விராகனிடை.க வெண்காரம் விராகனிடை.க, சீனிக் காரம் விராகனிடை.க, இதுவெல்லாம் பாதி பச்சை பாதி வறுத்துக் கொள்ளவும்.

சாதிக்காய், சாதிப் பத்திரி, பெருங்காயம் இது மூன்றும் பச்சை மற்று மருந்தெல்லாம் அரைக் கொள்ளவும். இதுக்குக் கல்லுப்பு அரைப்படி, பிரண்டை நாலு வாங்கி வது ஒரு படி, கல்லுப்பு ஒரு சேரை கூடப் போட்டு ஆட்டுக் கல்லில் ஆட்டிக் கொண்டு மற்ற மருந்தெல்லாம் கூடப் போட்டு மத்திச்சுக் கொள்ளவும். கால் படி நல்லெண்ணை

விட்டு லேசிய பதத்தில் வறுத்துக் கொள்ளவும். பிறண்ட போது இறக்கிக் கொண்டு வில்லை சேர்த்து உலத்தி வைத்துக் கொள்ளவும். அந்திக்கொழுவில்லை காலமே ஒரு வில்லை இள வெள்ளீரில் அரைச்சுக் கொடுக்கவும். இந்தப் படி பத்து நாள் இருபது நாள் கொடுக்கவும். நச்சப்புக் கட்டிக் கொள்ளவும். சத்தி குன்மம், வலி குன்மம், பயித்திய குன்மந் தீரும்.

ஏங்கலுக்கு__மருந்து:-_ 29.7.63.

கருஞ்சீரகம், கார்போகரிசி, கத்திரிமஞ்சள், கடுக்காய், கத்தாளஞ் சோறு எடுத்துப் புதுச் சட்டியில் போட்டுத் தண்ணீர் விட்டுக் கழைஞ்சு பதிசெசு சத்தி பண்ணி வைத்துக் கொண்டு முன் சொன்ன கடைச் சரக்கு நாலும், கடுக்காய்ப் பொடி இளவும் தானே கட்டிக் கொண்டு பொடி செய்து இந்தக் கத்தாளஞ் சோற்றில் போட்டு முலைப் பால் விட்டு ஊறு விட்டு மூன்று நேரம் வாங்கவும். வெள்ளீருச் சோறும் உண்ணவும். ஆறு நாளைக்கு புளிய மரத்து நிழலில் போகாமலிக்கவும். கட்

கட்டு மாந்தம்,_ஊது மாந்தம், பொழுமி_மாந்தம்_என்கிறதுக்கு:-

முதுந்த விளாங்காய், பத்துக்காய், கண்டங்கத்திரி கத்திரிக்காய், பத்து நிலையாவாரங் கொழுந்து விருதிக் கொழுந்து வரப்புலாங் கொழுந்து, தம்பைத் தழை பொடிதழை சத்தி சாறணைக் கொழுந்து, கருவேலங் கொழுந்து சங்கன் கொழுந்து, சின்னிக் கழை பிரண்டைக் கொழுந்து, பருத தோனங் கொழுந்து, அமுக்கிலாங் கிழங்கு பெரும் பட்டை பீநாறித் தழை ஒரு பிடி, மலைதாங்கி வேர், இக்கு டைக் சரக்கு திப்பிலி, அசமதாம், வசம்பு, கடுகு, வெள்வெங்காயம், சுக்கு, மிளகு, சாதிக்காய், களிப்பாக்கு, புழுங்கலரிசி, கடுக்காய் இதுவெல்லாம் ஒரு சீலையில் பொட்டணமாகக் கட்டி அந்த மருந்தில் போட்டு இறக்கி வைத்துக் கொண்டு அரைக்கிற போது அரை விராகனிடை சோமநாதப் பெருங்காயம் கூடப் போட்டு, விழுதோட அரைத்து சுண்டைக்காய் மாதிரி குளிகை செய்து நிழலில் உலத்தி வைத்துக் கொண்டு ஊது* ஊதுமாந்தம், கட்டு மாந்தம், சேர்த்து மாந்தம், சயித்திய மாந்தம், புளிச்சேப்பம் குழந்தை பிள்ளைகள் வயத்தில் பிறந்த வியாதிகளுக்கெல்லாம் ஒரு குளிகை இள வெள் ளீரில் கொடுக்கவும் வியாதி தீரும். இந்தக் குளிகை கொடுத்த முன்னிட்டுக்கு வியா கனியும். கவிஞ்சுதென்ற மருந்து கொடாமல் விட்டால் கழிச்சல் நில்லாது. கவிஞ்ச பிறகு நிற்கும். இது கை கண்டது. பெரியோர்களுக்கும், வயறு நொந்தாலும் கொடுக் கலாம். திட்டம் கை கண்டது.

அறுவைக்கு_மருந்து:-

ஒரு பிடி, கல்லுப்பு, ஒரு பிடி கொள்ளும் நல்ல முத்தின பிரண்டை கொண்டு வந்து சிறுக நறுக்கி இரண்டு படி கூடப் போட்டு மூன்று படி தண்ணீர் வார்த்து வேக வைத்து சுண்ட வெந்த பிறகு நிழலிலுத்தி ஒரு நாள் வெய்யிலில் உலத்தி இடித்து தூள் செய்து வெருகடிப் பிரமாணம் ஏழு நாள் தின்னவும். மலத்தில் நொங்கு போலும் சவ்வு போலவும் விழும். வியாதி தீரும். இது திட்டம்.

மூலத்துக்கு__மூலக்_கடுப்புக்கு_மருந்து:-___

சிவந்த நாயுருவி யிலைக் கொழுந்து மயிர் வெங்காயமும் அரிஞ்சு பசு வின் நெய்யில் வேக வைத்து தின்னவும் குணமாம்.

கெர்ப்ப_ஸ்திரீகளுக்கு_மருந்து:-

பிள்ளை_உண்டான_முதல்_மாதம்_வயறு_நொந்தால்_அதுக்கு_மருந்து:-

கச்சல் கிழங்கு, விஷ்ணுகிரந்தி வேர், பசுவின் பாலில் அரைத்துக் கொடுக் கவும். மூன்றாம_திங்களில்_வயறு_நொந்தால்_மருந்து:- தாமரைப் பூவும் அதின் கிழங்கும், சந்தனமும் கட்டி அரைத்து பசுவின் பாலில் கொடுக்கவும் வயறு

<u>இதக்கு_மருந்து:-</u>

கொட்டிக் கிழங்கு, அரசம் பட்டையும், அல்லது பிசினும் நீர் வார்த்தரைத்து பாலில் கொடுக்க கெர்பம் அழியாது. சுரமும் தீரும். பத்தாந் திங்களில் சுரந் தோன்றி னல் அதற்கு மருந்து:- அத்திப் பட்டையும், மாமரப் பிசினும், நீர் வார்த்தரைத்து பாலில் கொடுக்கவும். கெர்ப்பம் அழியாது. சுரநீருந் தீரும்.

எட்டான திங்களில் சுரந் தோன்றினால் வயிறு நோகும். யோனியில் கசிநீர் பாயும். குதகமாய் போற போர்களுக்கு இடுப்பு நோகும்.

<u>இதக்கு_மருந்து:-</u>

மாதளை வேர், தாமரை வளையம் அல்லிப்பூவும், சந்தனமும், அத்திப் பட்டையும் ஒவ்வொன்று அரைக் களஞ்சு கொண்டு நீர் விட்டரைத்து பசுவின் பாலில் கொடுக்கவும். கெர்பம் அழியாது. ஏழாந் திங்களில் சுரந் தோன்றினால் குதகமாய்ப் போறவருக்கு இடுப்பு நோவும் போலே நோகும்.

இதக்கு மருந்து:- மாதளை வேர், தாமரை வளையம், அல்லிப் பூவும், சந்தனமும் அத்திப் பட்டையும் ஒவ்வொன்று அரைக் களஞ்சு கொண்டு நீர் விட்டரைத்து பசுவின் பாலில் கொடுக்கவும். கெர்பம் அழியாது. ஏழாந் திங்களில் சுரந் தோன்றினால் குதகமாய்ப் போறவருக்கு இடுப்பு நோவும் போலே நோகும்.

<u>இதக்கு_மருந்து:-</u>

அத்திப் பட்டையும், விளாம் பட்டையும் வாசிவிலையும் கொட்டிக் கிழங்கும் கண்டு சர்க்கரையும் அரைத்துக் கொடுக்கவும். கெர்பம் அழியாது. சுரந் தீரும். நாலான திங்களில் சுரத்துக்கு யோனியில் உதிரமாய்க் கலங்கி விழும்.

<u>இதக்கு_மருந்து:-</u>

கொட்டிக் கிழங்கு நொச்சி வேர் இவை சமனாக் கொண்டு அரைத்து ஒரு பிடி பசுவின் பாலில் குடிக்கவும். மூன்று நாள் கொடுக்கவும். கெர்பம் அழியாது. சுரந் தீரும்.

ஐந்தாம் திங்களில் சுரந் தோன்றினால் அடி வயிறு நொந்து உதிரந் தோன்றும்.

<u>இதக்கு_மருந்து:-</u>

தக்கோலம் பொடி செய்து கருங் கொட்டிக் கிழங்கும், தாமரை வளையமும் இலவரிசி கட்டி அரைத்து ஒரு பிடி பசுவின் பாலில் கொடுக்கவும். கெர்பம் அழியாது. சுரமுந் தீரும். ஆறாந் திங்களில் சுரந் தோன்றினால் முலை கடுக்கும். இளவயிறு நோகும்.

<u>இதக்கு_மருந்து:-</u>

திப்பிலி, முந்திரிகைப் பழமும் கொட்டிக் கிழங்கு, சந்தனமும் இவை ஒரொன்று களஞ்சு கொண்டு நீர் வார்த்தரைத்து பசுவின் பாலில் கொடுக்கவும். கெர்பம் அழியாது. சுரமுந் தீரும்.

<u>விக்கல்_எட்டு_வகைக்கு_மருந்து:-</u>

கொம்பு பாகல் தழையைக் கசக்கி உள்ளங் கையில் புளிந்து உள்ளுக்கு மூன்று நாள் கொள்ளவும்.

மூலை எழும்பாமல் இருந்தால் ருத்திராச்சச் செடியை கொண்டு வந்து கசக்கி கசக்கி சாற்றை முலையைச் சுற்றித் தடவி அந்த கொழை வைத்துக் கட்டவும். மூன்று நாள் குடிப்பூசவும். குத்த மலையாளும்.

<u>அத்திச்_சூரணம்:-</u>

அதிமதுரம் கசை நீர், இந்துப்பு, திப்பிலி, சர்க்கரை, சாதிப்பத்திரி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய் வற்றல் இவையெல்லாம் ஒவ்வொன்றுக்குச் சரியாய் நிறுத்து இந்தச் சூரணம் பண்ணிக் கொண்டு வெருகடிப் பிரமாணம் இளவெந்நீரில் இரண்டு நேரமும் குடிக்க. இப்படி நாற்பது நாள் குடிக்கவும். பத்தியம் துவரைப் பருப்பு, மிளகு நீர் கட்டவும். பசுவின் பால் வார்த்து உப்புக் கட்டவும். இதக்குத் தீரும் வியாதி

அசித்திர சுரம், மடக் காச்சல் பித்த சுரந் தீரும்.

பெருமயற் உருகவ கவிலசக்கு, பேய்க்குமட்டிக்காய்ச் சாறு, நேர்வாளம் கொட்டை சுத்தி பண்ணித திப்பிலி, இந்துப்பு பலம்.உ, கல்லுப்பு பலம்.ச, பொட்டி லுப்பு பலம்.உ, வெங்காயம் காசிடை.உ, நமச்சாரம் காசிடை.உ இதகளெல்லாங் கூட்டி இடித்து விளக்கெண்ணை உரி திரளவேக விட்டு இறக்கி ஒரு தேத்தான் கொட்டைப் பிரமாணம் வாகலுப் பழத்தில் வைத்து முழுங்கவும். பத்தியம் பால் முருங்கைக்காய், அருவி மிளகு நீர் ஆகும். காரப்பு தவிர்க்கவும்.

(வேறு) காட்டுக் கருணைக் கிழங்கு, சதிக் கருணைக் கிழங்கு, கிருகள் கிழங்கு, தேத்துன் வேர்ப் பட்டை மருக்காரை வேர்ப் பட்டை இந்த ஐந்தும் உலத்தி இடிச்சு சீலையில் வடி கட்டிக் கொண்டு தான வகை ஒன்றுக்கு பிடி ஒன்று இந்தப்படி எடுத்துக் கொண்டு அரைப்பு மிளகு வெதப்பி பொடி செய்து வடி கட்டிக் கொண்டு புதுச் சட்டியை நன்றாகக் காய வைத்து ஒரு படி பசுவின் நெய் விட்டு ஐந்த சூரணம் போட்டு அதின் பிறகு மிளகு பொடியும் போட்டுக் கிண்டி வெந்த பதமறிந்து முன்று கிண்டி இறக்கி வைத்துக் கொண்டு நேரம் ஒன்றுக்கு ஒரு சுண்டைக்காய் பிரமாணம் உள் கொக்க் கொள்ளவும். இந்தப் படி இரண்டு நேரச காலமும் கொள்ளவும். இதற்கு பத்தியம் கல்லுப்பு பசுவின் நெய் மோர் தயிர் கூட்டிக் கொள்ளவும். ஐந்து நாளைக்கு ஒருக்கால் தலை முழுகவும். உள் மூல வியாதி தீரும்.

<u>வரட்டு வாதத்துக்கு குளிகை:-</u>

எள்ளு எண்ணை படி.ஙு, பெருங்காயம் பலம்.ஙு, பெருங்காயத்தைத் தட்டி எண்ணெயில் போட்டு நல்ல தரக் கொதிச்சு நருக் கொதி எழும்ப விட்டு உள்ளுக்கு கொடுத்து விதிக்கும் பசுவும். மூன்று நாள் செய்யவும்.

குளிருக்குத் தேற் முன் வேர்பட்டை, பாஷாணங் களஞ்சு சீலையில் கட்டி உழக்குத் தண்ணீரில் சிறுகீரையைப் போட்டு பாசாணமுங் கூடப் போட்டு சிறுகீரை வெந்த பதமறிந்து அந்தப் பாசாணத்தை எடுத்து ஒரு களஞ்சு அரிசுங் கூட்டி ஊமத்தைச் சோறு விட்டரைத்து பயறளவு உருண்டை பண்ணி ஒரு உருண்டை முலைப் பாலில் கொடுக்கவும். பத்தியம் பால் கஞ்சி குடிக்கவும்.

<u>தீராச் சுரத்துக்கு:-</u>

வெள்ளைப் பாஷாணம் ஒரு களஞ்சு, சாதிலிங்கம் நாலு களஞ்சு, ஊமத்தைச் சாறு விட்டரைத்து மிளகு பிரமாணம் உருண்டை செய்து கொள்ளவும். ஒரு உருண்டை சீனியிலிடவும். பால், கஞ்சி காய்ச்சிக் குடிக்கவும்.

<u>சுரத்துக்கு மருந்து:- அக்கினி வயிரவன்:-</u>

வெள்ளைப் பாஷாணம் விராகனிடை.உ, சாணிப் பாலில் இளநீரில் பசுவின் பாலில் இந்த மூன்றும் சுத்தி பண்ணி திரும்ப முலைப் பாலில் இளநீரில் விட்டரைத்து குளிகை பண்ணி வைத்துக் கொள்ளவும்.

சீத சுரத்துக்கு வேர் முருங்கை பட்டை சாற்றில் கொடுக்கவும். பாவட்டை வேரைச்சீவி அரிசி உடன் அரைத்து அடை சுட்டு நல்ல நெய்யில் அவைந்துத் தின்னவும். சந்நி பத்த தீர்ந்த மிகுசிலை இஞ்சிச் சாற்றில் விளக்கெண்ணை இரண்டு கரண்டி காச்சி விட்டுக் கொடுக்கவும். சுண்டை வத்தல் மிளகு நீரும் சோறும் கொடுக்கவும்.

<u>கோடாகுரிக் குளிகை:-</u>

இரசம், கெந்தகம், அரிதாரம் இசைந்த நாவித் திரவியுடன் சுரந்த திப்பிலி, வெங்காரம், அய்ய மிளகு வேர்க் கொம்பு உரதங் கடுக்காய் தான்றி நெல்லி ஒருங்கும் சமனங் கூட்டி வாதங் கையான் தகரைச் சாற்றால் அரைக்க மிகுந்த கோடாகுடியாமே.

பதினெட்டுச் சுரத்துக்கும்:-

காட்டுக் கோரைக் கிழங்குச் சாற்றில் கொடுக்கவும்.

பழவெளுப்புக்கு நாலாம் மாதனுக்கு:-

இரதம் களஞ்சு அரிதாரம் இரு களஞ்சு, மசோசிலே இரு களஞ்சு, மசோசிலே செருப்படிச் சாற்றில் சுத்தி பண்ணவும். இரதம், துத்தி இலைச் சாற்றில் சுத்தி பண்ணவும். அரிதாரம் எருமைப் பாலில் ஊறப் போட்டு ஒரு நாளிருக்க விட்டு கழுவி வைத்துக் கொள்ளவும். நாலு வர்ப் பாகலிலைச் சாறு விட்டரைத்து உந்துப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலுலர்த்தி எலுமிச்சம் பழச் சாற்றில் முறை வருகிற அன்றைக்கு ஒரு உருண்டை இடவும். பத்தியம் மிளகு பொடியும், பாலுஞ் சோறும் கொடுக்கவும்.

பழ வெளுப்புக்கு வெள்ளைப் பாஷாணம் விராகனிடை.க, நெல்லிக்காய் விராகனிடை.க, கெந்தகம் விராகனிடை.க, ரசம் விராகனிடை.க, நேர்வாளம் விராகனிடை க கடுகுரோகணி விராகனிடை.க இவை ஐந்தும் வெண் சிறுகீரையில் சுத்தி காலும் முன் சொன்னதில் சுத்தி.

நொச்சி சாறு விட்டரைத்து பயறு பிரமாணம் உருண்டை பண்ணி இஞ்சியிலாகுதல் கருஞ்சீரகம் கோரையாகுதல் மோரிலாகுதல் ஒரு உருண்டை இடவும். பத்தியம் வெந்நீரும் சாதமும் கொடுக்கவும்.

சரபாளக் குளிகை:-

ரசம் விராகனிடை.க, சாதிலிங்கம் விராகனிடை.க, திப்பிலி விராகனிடை.ரு, மிளகு விராகனிடை.ரு, வெங்காரம் விராகனிடை.ரு, நாவி விராகனிடை.ரு, கோமூத்திரத்தில் முப்பது நாழிகை ஊறச் சுத்தி. சாதிலிங்கம் முலைப் பாலில் மூன்று தரம் கழுவச் சுத்தியாம். வெங்காரம் அரப மட்டுக் கருவச் சுத்தியாம். ரசம் புகைப் பட்டரையில் போட்டு முத்திக்கச் சுத்தியாம். மிளகு, திப்பிலி இளம் பதமாக வறுக்கச் சுத்தியாம். இலை எல்லாம் கரியாந்தகரைச் சாறு விட்டு அரைத்தாக குன்றுமணிப் பிரமாணம் உருண்டை பண்ணிக் கொள்ளவும். அநுபானம் சிந்து கோரை வேர்க் கசாயத்தில் கொடுக்கவும். பத்தியம் வெந்நீருஞ் சாதமும சகல சுரமும சன்னி மூன்றுந் தீரும்.

(வேறு) பதிமூன்று வகை சுரத்துக்கு உருண்டை:-

சாதிலிங்கமும, வெள்ளைப் பாஷாணமும் அன்னும்பிலே ஊற விட்டு பனங் கள் விட்டரைத்து மிளகு பிரமாணம் உருண்டை பண்ணி வைத்துக் கொள்ளவும். எந்த சுரத்துக்கும் ஆகும். பால், தயிர், மோர் ஆகும்.

சன்னி வாத சுரத்துக்கு பச்சை நாவி களஞ்சு கெந்தகம் களஞ்சு, சாதிலிங்கம் களஞ்சு, வெங்காரம் களஞ்சு இந்த மருந்து தனி யொக்க நிறுத்துக் கொண்டு எலுமிச்சம் பழச் சாறு விட்டு நன்றாய் ஊற அரைத்து வழித்து அவ்வினை பிரமாணத்திலே உருண்டை பண்ணி நிழலுலர்த்தியாய் வைத்துக் கொள்ளவும். சங்கன் குடி நீரிலே ஒரு உருண்டை கரைத்துக் கொடுக்கவும். குளிர்ந்து வருகிற காச்சலுக்கு இஞ்சி சாற்றிலே கொடுக்கவும். பித்தத்து முலைப் பாலில் கொடுக்கவும். இந்தப் படி காச்சலறிந்து கொடுக்கவும்.

குடிநீர்:-

முத்தக்காசு, பற்படாகம், முதகாவேளி, விலாமிச்சை, அத்தி, சுக்கு, திப்பிலியும், சந்தனமும் ஆருக் கூட்டி ஏழு படி தண்ணீர் விட்டு ஒரு படி தண்ணீராகக் காய்ச்சி மூன்று நாள் இரண்டு நேரமும் கொடுக்கவும். இந்தக் குடி நீரில் இந்தக் குளிகையைக் கரைத்துக் கொடுக்கவம்.

வாத சுரத்துக்கு விபரம்: குளிர்ந்து காயும் இதுக்கு உருண்டை:-

திப்பிலி, களஞ்சு, மிளகு களஞ்சு சாதிலிங்கம் களஞ்சு இதுகளை தண்ணீரில் ஒக்க நிறுத்துக் கத்தாளஞ் சோறு வார்த்து அரைத்து/ மிளகு பிரமாணம் உருண்டை பண்ணி சுக்கு நன்றாய் நருக்கி நாழி தண்ணீர் வார்த்து உழக்காகக் காய்ச்சி அந்தக்

கசாயத்தில் ஒரு உருண்டை கரைத்துக் கொடுக்கவும். மூன்று நாள் கொடுக்கவும். பத்தியம் சிறு பயறு போட்டுக் காய்ச்சிக் கொடுக்கவும்.

(வேறு) சன்னி வாத சுரத்துக்கு உருண்டை:-

சந்தனங் கழஞ்சு, பொன்னரிதாரங் கழஞ்சு, இரண்டும் ஒன்றாய் நிறுத்தி பசுவின் பால் வார்த்தரைத்து அம்மியிலரைத்து சிறு பயறு பிரமாணம் உருண்டை பண்ணி வும். இஞ்சி நறுக்கிச் சாறு பிழிந்து அந்தச் சாற்றிலே ஒரு உருண்டை இடவும். பத்தியம் முருங்கையிலைச் சாற்றில் சோறு கொடுக்கவும். நல்லெண்ணை மேலே படாமலிருக்கவும்.

குளிர் காச்சலுக்கு உருண்டை:-

வெள்ளைப் பாஷாணம் கழஞ்சு கொண்டு வந்து உழக்கு ஊமத்தையிலைச் சாற்றில் எட்டு நாள் ஊறப் போட்டு ஒன்பதாம் நாள் எடுத்து அந்தச் சாறு விட்டரைத்து சிறுபயறு பிரமாணம் உருண்டை பண்ணவும். இந்த உருண்டை இடும் பொழுது பசுவின் மோரைக் காய்ச்சி இறுத்து சூடுங்கையிலே அந்த மோரிலே ஒரு உருண்டை இடவும். பத்தியம் முருங்கையிலை பத்தியம். முருங்கைக் காய் ஆகும். இந்த புழுங்க நெல்லுக் குள்ளே வைத்து முப்பது நாளைக்கு மேல் கொடுக்கவும். இந்த உருண்டைக்கு தலை பித்த ரோகம் காச்சல் தீரும்.

திசு மூலக் கசாயம்:-

பெருவாகை, பெருங்குமிழ், பாதிரி கூவிளை மேல் தோல் சீவிப் போட்டு உன்ருமாங் கட்டிக் கொள்ளவும். மூலிலை சித்தமல்லி, பேராமல், கண்டங்கத்திரி, சிறுவழுதிலை, நெருஞ்சி, பேராமுட்டி, தூதுவிளை, பேய்ப்புடல், சிறுகாஞ்சிரி மூலில் முருந்து இந்த மருந்து உண்டான வேர் பிடுங்கி வந்து தூளா இடித்து வெய்யிலிலே உலர்த்தி அந்தப் பொடியிலே சற்று போட்டு நாழி தண்ணீர் வார்த்து வெருகடிப் பிரமாணம் அள்ளிப் போட்டுச் சூரிய புடமாக வைத்து அந்தியம் போது நாழியாகக் காய்ச்சி ராவைக்கு உழக்கு விடிஞ்சிக்கு உழக்கு அன்றுடன் காய்ச்சி இப்படிக் கொடுக்கவும். கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

சுரத்துக்கு உருண்டை:-

தேத்தாங் கொட்டை, பூச்சம் பழுத் தோடு ரசம் இளநீர்க் காயில் போட்டுச் சுட்டு பாகிலைச் சாறு விட்டரைத்துக் குன்றுமணிப் பிரமாணம் உருண்டை பண்ணவும். நேர்வாளங் கழஞ்சு, கடுகுரோகணி கழஞ்சு அதிமதுரம் கழஞ்சு, சுக்கு கழஞ்சு, மிளகு கழஞ்சு, திப்பிலி, கழஞ்சு, சாதிலிங்கம் கழஞ்சு, சுருஞ்சீரகம், கழஞ்சு இவை எல்லாங் கரிசிலாங் சாறு விட்டரைத்து மிளகு பிரமாணம் உருண்டை பண்ணி நிழலுலர்த்தி வைத்துக் கொள்ளவும். இது கொடுக்கும் போது சித்தாமுட்டி கொத்தமல்லிகையும் போட்டு நாழி தண்ணீர் வார்த்து உழக்காகக் காய்ச்சி தண்ணீர் இறுத்துக் கொண்டு அதிலே ஒரு உருண்டை கரைத்துக் கொடுக்கவும். மருந்து போட்டுக் காய்ச்சின தண்ணீர் இல்லாவிட்டால் இள வெந்நீராகுதல் முலைப் பாலி லாகுதல் கொடுக்கவும். பத்தியம் சிறுபயறு நொய்யரிசிக் கஞ்சி காய்ச்சிக் கொடுக் கவும்.

காச்சலுக்கு உருண்டை:-

வெள்ளைப் பாஷாணம் கெவுரி பாஷாணம் துத்தநாகம் துரிசு இது நாலுங் கட்டி நிறுத்து தத்தாள மடலிலே வைத்து அரைத்து பசுவின் கோமியம் பசுவின் பாலில் சுத்தி பண்ணி சிறுகீரையுங் கட்டிக் கொண்டு கத்தாளஞ் சாறு வார்த்தரைத்து உருண்டை பண்ணிக் கொள்ளவும். குளிர் வந்த காச்சலுக்கு வெந்நீரில் குளிரில்லாத காச்சலுக்கு முலைப்பாலில் கொடுக்கவும்.

சன்னி வாத சுரத்துக்கு உருண்டை:-

மிளகு, சுக்கு, கடுக்காய், பெருங்காயம், வெள்ளுள்ளி அரைத்து கன்னிக் கோழி ஈரலில் பிசறி நல்லெண்ணெய் வார்த்து வேக வைத்து அந்தக் கறியைத் தின்னவும். அதிமதுரம் ஏலம், லவங்கத் தோல், செண்பகப்பூ, செங்கழுநீர்க் கோஷ்டம், செவ்வள்ளிக் கொடி தேவதாரம், மரமஞ்சள், சிறுதேக்கு, இருவேலி, விலாமிச்சை, கடுகுரோகணி, அரத்தை சாதிக்காய், இரும்பு, வசுவாசி, நன்னாரி மூசுமுசுக்கை வேர், நரிவேலத் தாமரை, பேரீச்சம் பழம் எந்திரிப் பழம், கோரோசனம் இது வெல்லாம் கூட்டி இளநீர் வார்த் தரைத்து மிளகு பிரமாணம் உருண்டை பண்ணிக் கொள்ளவும். உருண்டை இது கொடுக்கும் போது பேராமுட்டி, சிற்றாமுட்டி, சீந்திற் தண்டு, சுக்கு, கடுக்காய், போட்டு நாழி தண்ணீர் வார்த்து உழக்காகக் காய்ச்சி இறக்கி ஒரு உருண்டை கரைத்து கொடுக்கவும். பத்தியம் நொய்யரிசி, காய்ச்சிக் கொடுக்கவும்.

(வேறு) கோடா சூடிக் குளிகை:-

இரசம், கெந்தகம், நாயுருவி, அரிதாரம், வெங்காரம், சுக்கு, திப்பிலி, மிளகு, தானிக்காய் சுத்தி செய்த எள் களஞ்சி இலை பத்து கரியாந்தகரைச் சாறு விட்டு அரைத்து ஏழு நாளரைத்து பருத்தி விரை பிரமாணம் உருண்டை செய்து கொள்ளவும். இந்த உருண்டை கொடுக்கும் அநுபானம் வாய்வுக்கு உள்ளித் / தயிலத்திலாகுதல், முருங்கைப் பட்டை தண்ணீராகுதல்இரண்டு உருண்டை இடவும். வாதத்துக்கு நொச்சிச் சாற்றிலிடவும். அண்ட வாதத்துக்கு உள்ளித் தயிலத்திலிடவும். பித்தத்துக்கு சீந்திச் சாற்றிலிடவும். சேத்துமத்துக்கு தேனில் திப்பிலியிலிடவும். சத்தி குன்மத்துக்கு இஞ்சிச் சாற்றிலிடவும். குளிருங் காச்சலுக்கு நெல்லு வெந்த தண்ணீரிலிடவும். வாத சுரத்துக்கு சுக்குத் தண்ணீரிலிடவும். சன்னிக்கு கடுகு ரோகணியிலே சன்னி நாயகன் திப்பிலியிலே இஞ்சிச் சாற்றிலே இடவும். எரி குன்மத்துககு நாவல்ளிக் கிழங்கு தண்ணீரிலிடவும்.

காமாலைக்கு கரியாந்தகரைச் சாற்றிலிடவும். குளிருக்கு கஞ்சாங் கோரை துளசி கையாந்தகரை தும்பை இலை, நொச்சியிலை விஷ்ணுகாந்தி, ஆடாதோடை, சங்கந் தழை, நாற்தயிலை, வேலி அகத் அவுசாளிலை சரி கூட்டி வைத்து சுக்கு, மிளகு, திப்பிலி வெள்ளுள்ளிஓமம் இது ஐந்தும் சீலையில் முடிந்து போட்டு இரண்டு படி தண்ணீர் வார்த்து எட்டிலொன்றாய் காய்ச்சிக் கொடுக்கவும் தீரும். சீத சுரந் தீரும்.

எந்த சுரத்துக்கும் குளிகை மருந்து:-

கெந்தகம் பணவிடை.உ, அரைச்சு அதிலே இரசம் பணவிடை. கூட்டி அரைத்து சாதிலிங்கம் பணவிடை.ங, மனோசிலை பணவிடை சுத்தி பண்ணின நேர்வாளம் பணவிடை.ரு இதுவெல்லாந் தனித் தனியே எலுமிச்சம் பழச் சாறு விட்டு அரைத்து ஒன்றுகக் கலந்து சிறுபயறு மாத்திரம் உருண்டை பண்ணி நிழலுலர்த்தியாய் வைத்துக் கொள்ளவும். சுரத்துக்கு கொடுக்கும்போது நாயுருவிச் சாற்றில் சர்க்கரை போட்டு அதிலே ஒரு உருண்டை கொடுக்கவும். வயறு வேதிக்கும். வயத்தில் கலிச்சல் மிஞ்சினால் வெந்நீருஞ் சோறும் உண்ணவும்.

கிருமிக் கபாடம்:-

கொறுஞ்சி வேர்ப் பட்டை, முக்கொறுஞ்சி வேர்ப் பட்டை, நாயுருவி வேர்ப் பட்டை, நந்தி வேர்ப் பட்டை, ஆவலை வேர்ப் பட்டை, மாவிலிங்கம் பட்டை, வேலம்பட்டை, உதியம் பட்டை, முடக்கொத்தான் வேர், மலைதாங்கி வேர், மரவள்ளிக் கிழங்கு, காட்டுக் கருணைக் கிழங்கு, புளியம் பிரண்டைக் கிழங்கு, கழிப் பிண்டை வேர் சில்லா வேர்ப் பட்டை, மாம்பட்டை, நாவல் பட்டை, கருவேப்பிலை அலக்கு அத்திப் பட்டை, அரசம் பட்டை, ஆவாரம் பட்டை, மூக்காம் வேர்ப் பட்டை, கிரி முகருக் கிழங்கு, கிருவைப் பட்டை ஆக ௲லிங்க.உயரு வகைக்கு விராகனிடை.ரு முருங்கைப் பிசின் வேல வேலம் பிசின், மாம்பிசின், திப்பிலி, மிளகு, சுக்கு, ஓமம், சீரகம், சாதிக் காய், சாதிப் பத்திரி லவங்கம், லவங்கப் பத்திரி, கோரோசினை, ஓமம், சர்க்கரை

அதிவிடையம், சடைக் கஞ்சா அபினி மருந்து வெராலி விரை தாதாரவி விரை பிசின், வேத்துக் கடைச் சரக்கு ஆக இப்பத வகைக்கும் வகைக்கு விராகனிடை. 1½, வனமூலிகை உரு வகையும் பொன்னிறமாய் வெதுப்பி இடிச்சு னா ள் பண்ணிக் கொண்டு பிசின் வேத்துக் கடைச் சரக்கெல்லாம் பொடி பண்ணிக் கொண்டு கூட ஏகத்தில் கலந்து மாதளங்காய் விரையைத் தோண்டி அதுக்குள்ளே இந்தப் பொடியைப் போட்டுக் கூற கொண்டு சீலை மண் செய்து எருமுட்டையில் ஒரு கருக வேக விட்டு எடுத்து வெள்ளெச்சிக்கு வெந்நீர் தெளிச்சு இடித்து புளியஞ் சாறு விட்டு ஒன்றரைச் சாமம் அரைத்து களச்சிக் காயளவு உருண்டை செய்து வெந்நீரில் ஒரு உருண்டை கொடுக்கத் தீரும். துவரைப் பருப்பு பத்து வேகவிட்டு அந்தச் சாறுஞ் சோறும் பத்தியம்.

சுக்கு, மிளகு, திப்பிலி, பெருங்காயம், இசு ஒரு பிடி வெள்ளாடதுக்கு வெள் வெங்காக கொண்டு எழு நாள கடுக்காய் நெல்லிக்காய் இந்துப்பு வெள் வெங்காயம் பேரிலாஞ்சம் ஆக திருத்து. வலி குன்மத்துக்கு மூக்கிரட்டை வேரை ஒரு கோயியத்தில் வேக வைத்து உழக்கு மிளகு உளயம் பலம்.க, கூடப் போட்டு கடைந்து வைத்து தின்னவும். வலிகுன்மந் தீரும்.

<u>கண்டலாதி லேகியம்:-</u>

சங்கம் வேர் பலம்.ள, சங்கங் குப்பி பலம்.ருய, கண்டங்கத்திரி பலம்.ருய, செவ்வியம் பலம்.ருய, சிறுதேக்கு பலம்.ருய, சித்திர மூலம் பலம்.ருய, சிற்றாமுட்டி பலம்.ருய, பேராமுட்டி பலம்.ய, தழுதாழை பலம்.ய, முள்ளி வேர் பலம்.ய, வில்வ வேர் பலம்.ய, பாதிரி வேர் பலம்.ய, ஏ தலை இதுவெல்லாம் சிற்றாமல்லி வேர் பலம்.ய, பேராமல்லி மூலம்.ய, காட்டாமணக்கம் வேர் பலம்.ய, கசாயம் போடுகிற கற்கம். திப்பிலி பலம்.உய, சீரகம் பலம்.ச, வாய்விளங்கம் பலம்.க, சுக்கு பலம்.க, சிறுதேக்கு பலம்.க, திப்பிலி மூலம் பலம்.க, மிளகு பலம்.க, சீரகம் பலம்.க, சித்திரமூலம் பலம்.க, ஏலம் பலம்.க, கிரும்பு பலம்.க, லவங்க பத்திரி பலம்.க, அரத்தை பலம்.க, தாளிச பத்திரி பலம்.க, கர்க்கடக சிங்கி பலம்.க, கடுக்காய் பலம்.க, பெருங்காயம் பலம்.த், இந்துப்பு பலம்.க, செவ்வியம் பலம்.க, அசமதாகம் பலம்.க, நெல்லி பபலம்.க, தானிக்காய் பலம்.க, வெல்லம் அச்சு.ச, தேன் படி.உ, நெய்படி.வ, பதத்தில் இறக்கவும். ஈளை இருமல் காசரோகம், உடன் வாய்வுந் தீரும்.

<u>கல்லெரிப்புக்கு மருந்து:-</u>

சுரை வேர் இரண்டு வருடமும் சென்ற வேர் வெட்டி வந்து வெங்காரஞ் சுட்டுப் போட்டு அரைத்துக் கொடுக்கவும். கல் தெறிக்கும். கருங் கொள்ளு ஒரு படி புது பானையிலே தண்ணீர் வார்த்து ஊறப் போட்டு அந்த நனைச்ச தண்ணீரை வார்த்து அரைத்து கொடுக்க கல் தெறிக்கும்.

நன்னாரி வேரை கொண்டு ஒரு சட்டி நெய்யிலே அங்கார மிட்டு வேக வைத்துக் கொண்டு சிறுகச் சிறுக கொள்ளவும்.

<u>உசினிக் கட்டுக்கு மருந்து:-</u>

சங்கம் புளியைச் சுட்டு சீரகம் அரைத்து வெண்ணெயில் குழப்பி மூன்று நேரங் கொடுக்கத் தீரும்.

<u>வல்லத் கட்டுக்கு மருந்து:-</u>

குட்டுப் பாவல் பட்டை அரைத்து வெந்நீரில் மூன்று நாள் கொடுக்கவும்.

<u>(வேறு) தேளுக்கு:-</u>

ஒரு களச்சிக்காயை விரையை வாங்கிப் போட்டு அந்தக் களச்சிக் காயிலே ஒரு விராகனிடை ரசம் வாங்கி அதிலே விட்டு வரிச் ஊமத்தை விரை நசுக்கி அந்தச் சாந்தை கூட பிசைந்து மெழுகாவகை அரக்காவது இட்டு அடைச்சுப் போடவும் தேள்

கொட்டிலைல் நெரி கட்டிய இடத்தே பிருந்த மூர்மலாம் இறக்கி தரையிலே போட்டவும்.

சிரோ வாய்விக்கு பூகாதயிலம்:-

ஆவில் பட்டை பத்து விராகனிடையிலே நொச்சி வேர் பலம்.ய, மாவிலிங்கம் வேர் பலம்.ய, அமத்தை வேர் பலம்.ய, குப்பை மேனி வேர் பலம்.ய, சாரணை வேர் பலம்.ய, இவையெல்லாம் உரலிலே தவைச்சு நாலு வள்ளத் தண்ணீர் விட்டு ஒரு வள்ளம் நிற்கக் காய்ச்சி சீலை வடி கொண்டு கையாந்தகரைச் சாறு ஒருபடி நொச்சிச் சாறு ஒரு படி அவிஞ்சிச் சாறு ஒரு பிடி சாரணைச் சாறு ஒரு படி கத்தாழை மூன்று ஒரு படி இதுவெல்லாம் அந்த கசாயத்திலே கூட்டி ஒரு வள்ளம் நல்ல எண்ணை விட்டு சுக்கு பத்து விராகனிடை படியாலே பலம்.கு, திப்பிலி பலம்.கு, மிளகு பலம்.கு, தானிக்காய் பலம்.கு, நெல்லி முள்ளி பலம்.கு, சித்தரத்தை பலம்.கு, மஞ்சள் பலம்.கு மரமஞ்சள் பலம்.கு, வாய்விளங்கம் பலம்.கு மஞ்சட்டி பலம்.கு, அசமதாகம் பலம்.கு குரோசாணி ஓமம் பலம்.கு, குங்கிலியம் பலம்.கு, பெருங்காயம் பலம்.கு, அகில் சந்தனம் பொடி செம்புளிஞ்சை சந்தனம் பொடி பலம்.கு, கஸ்தூரி மஞ்சள் பலம்.கு, நச்சிப்பி பலம்.கு இவையெல்லாம் சூரணம் பண்ணி அந்த எண்ணையில் கலந்து மெழுகு பதத்திலும் சத்த மிஞ்சின பக்குவம் பாத்துக் கருகு கருகாமல் நல்ல பதத்திலே இறக்கிச் சீலை வடி கொண்டு ஒரு கலசத்திலே மீட்டுக் கோளி வேடு கட்டி நெல்லிலே பதினைந்து நாள் 14 புதைச்சு பின்பு எடுத்துக் கொண்டு தலை மாத்திரம் மெத்தவா தேய்த்து தலைக்கிட்டு நொச்சித் தழை போட்டுக் காச்சின வெந்நீர் குளிர்ந்த தண்ணீர் விட்டு விராவாமல் தன்னுலே ஆறவிட்டு உடம்பு பொறுக்கத் தக்கதாக தலை முழுகவும். இப்படி நாற்பது நாள் தலை, கண், உச்சி இடிக்கிறது, காது கேளாமல் இரைகிறதும், சுருக்கு சுருக்கென்று காது முகமும் நோகிறது, பிடரிக் கனப்பு, கழுத்து நோவு, சிரோவாதத் துள் சேர்ந்த சகல நோவுந் தீரும். குளிர்ந்த தண்ணீர் மோர், பசளையிலைக் கறி, செம்பு இலைக் கறி, முதலான பதார்த்தங்கள் குளிர்ந்த பதார்த்தங்கள் ஆகாது. உதடு காய்ந்து மூக்கு கனிக்கிறது முகம் இசிக்கிறது கண் கண் களத்துக் கல் கட்டினப் போலே நோகிறது. பல்லு நோகிறது எல்லாந் தீரும்.

நேத்திர ரோகங்களுக்குத் தயிலம்:-

மஞ்சட்டி சௌவிரஞ்சனம் நன்னாரி வேர், கடுகுரோகணி, தக்கோலம், சாதிக்காய், சந்தனம், கடுக்காய், தானிக்காய், நெல்லிமுள்ளி, சடாமஞ்சி கோஷ்டம் ஏலம், கிராம்பு, லவங்கப் பத்திரி, நாகப்பூ வேலைவேர், அகில், சந்தனம், கச்சோலம், கஸ்தூரி கர்ப்பூரம், கருநெய்தல், கிரந்து தாமரை வளையம் இவை ஒரொன்று அரைப்பலம் வீதம் கூட்டி கடைச் சரக்கெல்லாம் சூரணம் பண்ணிச் சீலை வடி கொண்டு வெட்டு மருந்துகள் பசுவின பால் வார்த்தரைத்த மை போல அரைத்து மூன்று படி நல்லெண்ணையும், மூன்று படி பசுவின் பாலும் விட்டுச் சூரணமும் அரைச்ச மருந்தும் கூட்டிச் சகலமுங் கலந்து பக்குவத்திலே இறக்கி தலைக்கு மாத்திரந் தேய்த்துக் கொண்டால் மண்டையிலே உண்டான ரோகங்களும் நேத்திர ரோகங்களுந் தீரும்.

நேத்திர ரோகங்களுக்கு:- வில்வ முராரி:-

வில்வ வேர் அதின் கொழுந்து அதின் பூ, கடுக்காய், தானிக்காய், நெல்லி முள்ளி, சுக்கு, திப்பிலி, மிளகு, அதிமதுரம், மஞ்சள் இவை சமபாகங் கூட்டி எலுமிச்சம் பழச் சாறு விட்டு மூன்று நாள் அரைத்து திப்பிலி போல் மாத்திரை பண்ணி நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு எலுமிச்சம் பழச் சாற்றிலே உரைத்துக் கண்ணிலிட்ட கண்ணிலுண்டான ரோகங்களுந் தீரும்.

சிரோகங்களுக்கு:-

ஆமணக்கம் வேர் பத்து விராகன் படியிலே பலம் பத்து, கண்டங்கத்திரி வேர் பலம் பத்து, சதகுப்பை பலம்.ய, (தெலுங்குலே மறுபால பலம்.ய) அரத்தை பலம்.ய, இந்துப்பு பலம்.ய இதுவெல்லாம் நன்றாகத் தவைச்சு இரண்டு வள்ளத் தண்ணீர்

வைத்துக் கொண்டு இரண்டு படியாகக் காய்ச்சி, சீலை வடிகொண்டு கையாந்த கரைச் சாறு ஒரு வள்ளம் சீலை வடிகொண்டு ஒருபடி நல்லெண்ணெயும் ஒரு படி வெள்ளாட்டுப் பாலும் எல்லாம் ஒருமிக்கக் கூட்டி கையாந்தகரைப் பொடி இரும்பு அதிமதுரம் சுக்கு இவை எல்லாம் ஒரொன்று ஐந்து விராகனிடை கூட்டிச்சூரணம் பண்ணிச் சீலை வடிகொண்டு தயிலத்தில் கொட்டிக் கலந்து மெழுகு பதத்துக்கு ஊதி சாம்பல் மெழுகு பதத்திலேதானே வடித்துக் கொண்டு அந்த தயிலத்தை பஞ்சிலே தவைச்சு ஒரு நாசிக்கு ஆறு துளி வீதம் மட்டு கட்டி நசியம் பண்ணவும். சிலசிலே உண்டான ரோகங்களுக்கு உதிர்ந்து போம்.

<u>காது வகைக்கு:-</u>

நாலாது வலம்புரிக்காய் அரைப்படி நல்லெண்ணெயில் போட்டு இருப்புக் கரண்டியில் விட்டு அடுப்பு மேலே வைத்து நுரை ஆறின பிறகு இறக்கிச் சீலையில் தவைச்சு மூன்று துளி காதிலே பிழிஞ்சு சீலையிட்டு அடைக்கவும். இந்தப்படி அந்தி சந்தி மூன்று நாள் காதிலே எந்த வியாதி வந்தாலும் குணமாம். தப்பாது.

<u>ரோமபாண லேபனம்:-</u>

கந்தகம் அரிசு, அக்கிருகாரம், செங்கழுநீர் கோஷ்டம், அதிமதுரம், பச்சைப் புழுகு பச்சைக் கற்பூரம் இதுவெல்லாம் சரியாய் எலுமிச்ச பழச் சாற்றிலே அரைத்து கண்டுக்கு ஏறத் தடவி ஆற விட்டுப் புசரவும். மாத்த கீரை விரை காடியில் அரைத்து கழுவிப் போடவும்.

<u>தேத்தாங் கொட்டை லேகியம்:-</u>

தேத்தாங் கொட்டை பலம்.ச, சிறகச் சிறக வெட்டி அரைப்படி பசுவின் நீர் நெய்யிலே வறுத்துப் பொடி பண்ணி வஸ்திர காயம் பண்ணி சீரகம், கருஞ்சீரகம், சாதிக்காய், இரும்பு, அரத்தை, சிறுதேக்கு, சடாமஞ்சி, செவியந்திப்பிலி இது ஒரொன்று விராகனிடை.ச, கடைச்சரக்கு இடிச்சு வஸ்திர காயம் பண்ணி தேன் சர்க்கரை கூட்டி லேகியம் பண்ணிக் கொள்ளவும். (அநுபானம் கூறப்படவில்லை)

<u>சிலாசத் குடார லேகியம்:-</u>

கண்டங்கத்திரி பழச் சாறு படி இரண்டு, கையாந்தகரைச் சாறு படி.ரு, வேலிப் பருத்திச் சாறு படி.ரு, ஆடாதோடைச் சாறு படி.ரு, துளசிச் சாறு படி.ரு, சங்கன் கொழுந்துச் சாறு படி.கூ, சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், செவியம், திப்பிலி மூலம், சித்திர மூலம், லவங்கப் பத்திரி, லவங்கப் பட்டை, சிறுநாகப்பூ, ஏலம், தாளிச பத்திரி, இரும்பு, இந்துப்பு, ஓமம், கருஞ்சீரகம், சிறுதேக்கு இவை ஒரொன்று பலம்.ட, இந்தச் சாறு எல்லாம் கஷாய மட்டாகக் காய்ச்சி கடைச் சரக்கெல்லாம் இடித்து வஸ்திர காயம் பண்ணி அந்த கஷாயத்திலே விளக்கெண்ணெய் கரைச்சு கம்பி பதத்திலே இறக்கிக் கொண்டு ஒருக் காலே இருக் காமல் ஒருக்காலே இளம் பதத்திலே கடைச் சரக்குப் பொடி எல்லாம் போட்டுக் கிளறித் தேன் விட்டு இறக்கிக் கொண்டு இது தானியப் புடத்திலே ஒரு மாசம் வைத்து அதுக்கு மேலே வாங்கிக் கொள்ளவும். கை கண்டது.

<u>நஞ்சு தின்ற பேருக்கு:-</u>

ஒன்று மணி தின்ற பேருக்கு பூசணிக்காய் பிசைந்து இளநீரில் கொடுக்கவும்.

பாஷாணத்துக்கு நீர்ப் பூலா வேர் அரைத்து குளிர்ந்த தண்ணீர் கொடுக்கவும்.

கழுதை வண்டுக்கு:- நாரத்தம் பழமும் துளசியும், அரைத்து உப்புப் போட்டுக் காய்ச்சிக் கொடுக்கவும். சங்கம் வேர் அரைத்து இள வெந்நீரில் கொடுக்கவும்.

<u>தேள் விஷத்துக்கு:-</u> தேங்காய்ப் பாலில் சிறுகீரை அரைத்து வெந்நீரில் கொடுக்கவும்.

அரைத்து வெந்நீரில் கொடுக்கவும். எருக்கிலை தின்றால் பருத்தியிலைச் சாற்றில் சர்க்கரை போட்டுக் கொடுக்கவும். தேனும், நெய்யும் கூட்டினால் உள்ளுக்கு வெந்நீரில் கரி அரைத்துக் கொடுக்கவும். கள்ளிப் பால் குடித்தால் அவரையிலை அரைத்துக் குளிர்ந் தண்ணீரில் கொடுக்கவும். சுண்ணாம்புக்கு விளாமிச் சாறு நல்லெண்ணெயும் கூட்டிக் கொடுக்கவும். நீலை தின்றால் வெள்வேலம் பட்டை கரைத்து குளிர்ந்த தண்ணீரில் கொடுக்கவும்.

30.7.63.

நெல்லு வேருக்கு:-

இலாமிச்சம் வேர் குளிர்ந்த தண்ணீரில் அரைத்து கொடுக்கவும்.

ஒட்டிக்கு:- நாவல் பட்டை காடியில் கொடுக்கவும். கார்த்திகைக் கிழங்குக்கு சுக்கு அரைத்து கொடுக்கவும். ஒதுவைக்கு பசிரி அரைத்து குளிர்ந்த தண்ணீரில் கொடுக்கவும். பச்சைக் கற்பூரமும் எலுமிச்சம் பழமும் தின்றால் கையாந்த கரைச் சாறு இப்படிக் கொடுக்கவும். நேர்வாளம் கொட்டை தின்றால் நெல்லி அரைத்து மோரில் கொடுக்கவும். பதினெட்டு நஞ்சுக்கும் புலுதிப் பதம் பிசைந்து கொடுக்கவும். எண்ணை கூட்டினத்துக்கு பூசை பாக்கு மாத்திரம் இலுப்பைப் புண்ணுக்கு அரைக் காடியில் கொடுக்கவும். வாகை சமூலமுங் கூட்டிக் கொண்டு வந்து குழுக்கித் தின்றால் பதினெட்டு நஞ்சுந் தீரும்.

(வேறு) பறங்கிப் பட்டை உப்பை போடுகிற விபரம்:-

கொடிவேலி வேர், காரை வேர், நாவி, வெள்ளைக் குங்கிலியம், புளியம் பட்டை, பறங்கிப் பட்டை, நாற்பது பலத்துக்கு ஒரு மொச்சைப் பயத்தளவு வெள்ளைக் குங்கிலியம் ஒரு விராகனிடை புளியம் பட்டை அடியிலே பரப்பி அது மேல் கொடிவேர் வைத்து அதுமேல் காரைவேர் வைக்கவும். அதுமேல் நாவியும், குங்கிலியமும் பொடிஞ்சு வைத்து அதுமேல் பறங்கிப் பட்டை பானையில் இட்டுக் கவுத்து சாத்துக் கொண்டு தீப்புடம் போடவும். சங்கம் வேர், கொடிவேலிவேர், சதிரக்கள்ளி காரை வேர் இது நாலும் பானையிலிட்டு பதக்கு தண்ணீர் விட்டு வண்டு கட்டி வண்டு மேலே பறங்கிப் பட்டை வெட்டின மேலே வைத்து சட்டி கொண்டு கவுத்து சீலை மண் செய்து இரண்டு சாமம் எரிய விடவும். ஆவி யடங்க விட்டு எடுத்து சூலைப் புண்ணுக்கு தினம் பதினை விராகனிடை தின்னவும். இந்த வியாதி அடிஞ்சுப் போகும்.

சுர தீசுராதி சூரணம்:-

வசம்பு, ஏலம், லவங்கம், கடுகு நெல்லிப் பருப்பு முள்ளிக் கொட்டி, கிரும்பு, இந்துப்பு, காட்டுக் கருணைக் கிழங்கு, கறிக் கருணைக் கிழங்கு பிரண்டை வேர், கொடிவேலி வேர், வெருகின் கிழங்கு, புளியநாளைக் கிழங்கு, மாவிலிங்கம் கிழங்கு, ஆடு தின்னாப் பாளை வேர், முசுட்டை வேர், சிறுகுறிஞ்சா வேர், வக்குருத்தத்தி வேர், முன்னை வேர், வெப்பாலை வேர், ஆதவனை வேர், சங்கன் குப்பி வேர், நூலை சுருளி வேர், காட்டு மல்லி வேர், கண்டங்கத்திரி வேர், சுக்கு, மிளகு, திப்பிலி, வாய்விளங்கம், சிறுதேக்கு, சன்ன லவங்கப் பட்டை, சிறுநாகப்பு, சடாமஞ்சி, இலவங்கப் பத்திரி, தான்றிக்காய், கடுக்காய், முந்திரிகைப் பழம், பேரீச்சம் பழம் இதுவெல்லாம் ஒவ்வொன்று ஐந்து விராகனிடை கூட்டவும். இதுவெல்லாம் இடித்து சூரணம் பண்ணிக் கொண்டு இதிலே பத்து விராகனிடைச் சர்க்கரையுங் கூட்டிக் கொண்டு எல்லா வகை சுரத்துக்கும் வெருகடிப் பிரமாணம் வெந்நீரில் கொடுக்கவும்.

கூஷ்மாண்ட லேகியம்:-

பூசணிக்காயில் வெல்லம் போட்டுப் பிசைந்து அந்த தண்ணீர் நாலு மரக்கால் ஆடாதோடைச் சாறு பனைவெல்லம்.உழக்கு, நல்ல வெல்லம்.உழ இது வெல்லாம் போட்டுக் காய்ச்சி குழம்பான உடனே திரிகடுகு, சாதிக்காய், சாதிப்பத்திரி, குரசாணி ஓமம், அதிவிடையம், கடுக்காய், தான்றிக்காய், நெல்லிப் பருப்பு, கருஞ்சீரகம், நற்சீரகம், கடுகு தெந்தியம், கடுகுரோகணி, கசை நீர், வாய் விளங்கம், கொத்தமல்லி சதகுப்பை, கஸ்தூரி மஞ்சள், நாய்க் கடுகு, வெடியுப்பு, இந்துப்பு வளையலுப்பு,

சவுக்காரம், அசமதாகம், திப்பிலி மூலம், சித்திர மூலம், சிறுமூலம், காட்டுக் கருஞ்சீரகம், ஏலம், லவங்கம், இரும்பு, பல மாணிக்கம் பச்சிலை, கச்சோலம், வெள்ளி லோத்திரம் இலை ஒரொன்று மூன்று பலம் அரிதாரம் பலம்.க, கோட்டம் பலம்.உ இவைகளை இள வறப்பாக வறுத்துக் கொண்டு பொடி செய்துபோட்டுக் குண்டி இருநாழி தேன் விட்டுக் காய்ச்சி கம்பிப் பதமாக இறக்கி பழகின கலசத்திலிட்டு எலுமிச்சங்காயளவு இரண்டு நேரமும் இருபது நாள் கொள்ள உள் மாந்தை, சுர மாந்தை எலும்புருக்கி அதிர பித்தில காமம் அரிகால், காச நோவு, கெர்ப்ப ரோகம், எரி குன்மம், நாரி சூலை புருக சுரம், படவெரிப்பு, பிரமியம், தாகமாக வந்தி, இரலை, மூர்ந்தை வியாதி, திமிர் கால், கை முகமொப்பு, உச்சி யெரிப்பு இவையெல்லாந் தீரும்.

சுரத்துக்கு_குளிகை:-

பொன்னரிதாரம் ஒரு நிறையும் அதுக்கு சரி நிறை சுண்ணாம்பு, சுக்கு கசாயத் தண்ணீர்விட்டு நன்றும் அரைத்து குன்றி அளவு உருண்டை பண்ணி நிழலுலர்த்தி வைத்துக் கொள்ளவும். எந்த சுரத்துக்கும் தனக்கு வேண்டிய கசாயத்திலிடவும். சுக்கு கசாயத்திலிடவும். சுரம் மூன்று நாளையில் நிற்கும். பத்தியம் துவரைப் பருப்பும் சோறும் உண்ணவும்.

செந்தூரம் ஒரு நிறையும் அதுக்கு சரி நிறை சுண்ணாம்பும் சுக்கு கசாயத் தண்ணீர் விட்டு அரைத்து குன்றி அளவு உருண்டை பண்ணி நிழல் உலர்த்தி வைத்துக் கொள்ளவும். பல சுரத்துக்கும் சுக்கு கசாயத்தில் ஒருஉருண்டை இடவும். எந்த சுரத்துக்கும் வேண்டிய கசாயத்திலிடவும். பத்தியம் துவரைப் பருப்பும் சோறும் உண்ணவும்.

அரிதார மாத்திரை மீறினும், செந்தூர மாத்திரை மீறினும், பாஷாண மாத்திரை மீறினும் சகல மாத்திரை மீறினும் நிற பூசணி வேர், சிறுகீரை வேர் பருத்தி வேர், பாளை வேர் இது நாலும் ஒரொன்று சரி நிறை நிறுத்தி சட்டியிலே போட்டு இரண்டு படி தண்ணீர் விட்டுக் காய்ச்சிக் கொடுக்கவும்.

வயிறு_வேதிக்கு:-

கடுக்காய் தன்றுயித் தாள் பண்ணி எண்ணெயைத் தொட்டு சுண்டைக்காயளவு உருண்டை பண்ணி பழைய புளியில் வைத்து விழுங்கவும். நன்றும் வேதியாகும். மீறினால் நொங்கையிலை கசாயம் கொடுக்கவும். நிற்கும்.

வண்டு_கடிக்கு:-

எட்டிக் கொட்டை ஒரு படி அவிஞ்சிக் கொட்டை ஒரு படி அவிஞ்சிப் பட்டை, ஒரு பலம், குன்றுமணி ஒரு படி விளாம்பட்டை அஞ்சு வள்ளம் கொடிவேலி வேர் பலம்.க, இதுவெல்லாம் மூடாவில் அடைத்து குழி தோண்டி குழியின் கீழே ஒரு சட்டி புதைத்து அந்தப் பானையை ஒரு சட்டி கொண்டு கவுத்து அந்தச் சட்டியை பொத்து மூன்றின புதைத்த சட்டி மேல் கவுத்து காட்டு எருவடுக்கி தயிலம் இறக்கவும். மேலுக்குப் பூசவும். உள்ளுக்கு சூரணம் வேப்பம் பட்டை பலம்.உ, பெருமரத்துப் பட்டை பலம்.உ, களாத் திப் பட்டை பலம்.உ, சிலை ஊஞ்சல் கூ பலம்.உ, மலைதாங்கி வேர் பலம்.உ, மொச்சை படி.க, இது நாலு வகையும் ஒரு பானையில் போட்டு வெள்ளாட்டுக் கோமியம் ஒரு வள்ளம் விட்டு அதுக்கேத்த சட்டி கொண்டு கவுத்து குப்பை நிலத்தில் புதைக்கவும். மூன்று நாளில் கண்டு எடுக்கவும். நிழல் உலத்தி இடிச்சு வடிகொண்டு வைத்துக் கொண்டு சுக்கு, ஓமம், வெதுப்பி போட்டுக் கொள்ளவும். லவங்கப் பச்சை போட்டுக் கொள்ளவும். சூரணம் விரற் பிரமாணம் கொள்ளவும். தீரும் வியாதி வண்டுகடி குட்டரோகங்கள் தீரும். அந்தச் சூரணம் விரகம் பிரமாணம் சாப்பிடவும். அண்ட வாய்வு குணங்கள் வாதங்கள் சரவாங்கி வாதம், சயித்தியங்கள், காலக்கடி கரப்பான்கள், மந்தத்தின் மேலேப்பம் தீரும். இச்சா பத்தியம் கட்டவும். கை கண்டது.

அகஸ்தியர்_பேதிக்_குழம்பு:-

கருஞ்சீரகம், கடுக்காய், திப்பிலி இந்த மூன்றும் அத்துடனே இரண்டு நாழிகை அரைக்கவும் பெருங்காயம் இந்துப்பு, வெங்காரம் இந்த மூன்றும் அத்துடனே இரண்டு நாழிகை அரைக்கவு பெருங்காயம் இந்துப்பு, வெங்காரம், இந்த மூன்றும் அத்துடனே மூன்று நாழிகை அரைக்க வும். வகைக்கு பலம்.ஏ, நேர்வாளம் பருப்பு சுத்தி செய்த பலம்.உ, பச்சைப் பருப்பு பாதிபோட்டு ஒரு நாழி அரைக்கவும். பாதி பருப்பு வறுத்து ஒரு சாமம் அரைத்து எடுத்துச் சிமிழில் வைத்துக் கொள்ளவும்.

<u>விந்துக் குழம்பு:-</u>

சுக்கு, மிளகு, லிங்கம், கடுகு, தாளிக்காய், வகைக்கு களஞ்சு.க, வாளம் களஞ்சு ய சுத்தி செய்து பாதி பருப்பு பச்சை பாதி வறுத்துப் போடவும்.

<u>கக்குவான் மருந்து:-</u>

காக்கணன் நீரும்பல் ( ) பேய் அத்திஇலை, ஆவாரம் பூவு, ஏலப் விரை மூன்றும் சமன் பாலிலே போட்டுக் காய்ச்சி கொடுக்கவும். கவிச்சு ஆகாது.

<u>அயக் காந்த செந்தூரம்:-</u>

அயம் ஊசி பொடி பலம்.2½, ஊசிக் காந்தம் 2½, சுத்தி செய்து நிறுத்துக் கொண்டு இரண்டும் சமன் போட்டு அரைப்பதற்கு விபரம் சிறுநெரிஞ்சி சாறு விட்டு சாமம். அரைத்து நாலு வில்லை தட்டி ஓட்டிலே வைத்து ரவியில் காய வைத்து முப்பத்திரண்டு வரட்டி புடம் போடவும். எலுமிச்ச பழச் சாறு நாலு சாமம் அரைத்து வில்லை தட்டி ஓட்டிலே வைத்து ரவி காய வைத்து மறுபடி புடம் போடவும். மறுபடியும் எடுத்து நாவல் பட்டைச் சாறு விட்டு அரைத்து நாலு வில்லை தட்டி ரவியில் உலர்ந்த பின்பு முப்பத்திரண்டு வரட்டியில் புடம் போடவும். அரைப்பு சாமம்.ச, காட்டு கொட்டை தாழை சாறு விட்டு அரைத்து ஓட்டிலே வைத்து ரவியில் காய வைத்து காய்ந்த பிறகு முப்பது வரட்டியில் வைத்து புடம் போடவும். அரைப்பு நாலு சாமம் செந்தூரம் சிவப்பு ஏறும். மறுபடியும் முன் சொன்ன சாறு/ விட்டு அரைத்து இரண்டு புடம் போடவும் செந்தூரம் ஆகும்.

<u>அகத்தியர் குழம்பு:-</u>

பெருங்காயம், கடுகு, இந்துப்புரசும், மனோசிலை, திப்பிலி அரிதாரம், (தகடுந் தாரம்) கருஞ்சீரகம் வகைக்கு களஞ்சு.க, வாளம் களஞ்சு.ய, வாளப் பருப்பு வறுத்துப் போடவும்.

<u>கெர்ப்ப சுரத்துக்கு:-</u>

முந்திரி பழம், அதிமதுரம், கோஷ்டம், கடுக்காய், பூவு கொத்தமல்லிகை, சக்கு சீரகம், நன்னாரி வேர், அருகம் வேர், இது வெல்லாம் சமன் வகைக்கு பலம்.க, இரண்டு படி ஜலம் விட்டு கஷாயம் காய்ச்சி மூன்று நாள் காலமே கொடுக்கவும். புளி தவிர்க்கவும் சுரம் தீரும். கை கண்டது.

****

முற்றும்.

****

சு.ச.30.7.63.